|| श्रीः ||

ஸர்வதாரி நாம ௵ தை மீ 2009 **(January 2009)**

## *விஷயஸூசிகை*


1. ஸங்கல்ஸூர்யோதயம் ...................................................... 1
2. மயர்வு .................................................................... 6
3. பரமைகாந்திகளின் ஸ்வஸ்திவாசனம் ............................. 10
4. நாச்சியார் திருமொழி ....................................................... 22
5. கலிதர்ம நிரூபணம் ......................................................... 33
6. பரமதபங்க: .................................................................. 42
7. ஸ்ரீமத் ஆண்டவனின் அருள்மொழி ............................... 48
8. ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம் ......................................... 50
9. ஸன்யாசி வேஷதாரிகள் .................................................. 65
10. விருந்தாவன ஆச்ரமத்தில் தனுர்மாத ஆராதனம் ............ 73
11. ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ..................................................... 78
12. அதிகரணஸாராவளி: ....................................................... 89
13. பஞ்சாங்க ஸங்க்ரஹம் ..................................................... 98
14. ஆச்ரமச் செய்திகள் ........................................................ 101
15. *Matrimonial* ................................................................ 104
16. HH Srimad Mysore Andavan – Centenary celebrations ....... 107
17. PRAPATTHI OR SARANAGATHI .................................. 113
18. Sreeman ............................................................ 124

|| श्रीः ||

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

*(ஸ்ரீ வ.ந. கோபால தேசிகாசார்யர் ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி)*

*வ்யவஸாயன் (நல்ல விஷயங்களில் முயற்சி - ஸேநாபதி) தொடர்கிறான்-*

*இப்போது ஜீவாத்மா நல்ல ஜ்ஞானத்தை அடைந்துவிட்டான். தன்னுடைய நிலைக்கும் தகுதிக்கும் ஏற்றபடி, ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட வர்ண, ஆஶ்ரம தர்மங்களை மீறாமல், தன் கடமைகளைச் செய்து வருகிறான். பகவானுடைய திருவடிகளில் இயன்ற அளவு கைங்கர்யம் செய்து வருகிறான்.*

*மனதைச் சிதற விடாமல் எம்பெருமானிடமே நிலை நிறுத்தி இருக்கிறான். உலக விஷயங்களில் ஈடுபடுவதில்லை. எல்லா வருத்தங்களையும் துன்பங்களையும் போக்கிப் பரமானந்தத்தைத் தரும் மோக்ஷத்தை அடைய, முயற்சிகளை மேற்கொள்ளுகிறான்.*

*பரிஶுத்தமான விஷ்ணு பக்தி என்னும் கங்கா நதி இவன்மேல் பாய்கிறாள். (இவன் அளவற்ற பக்தியைக் கொண்டிருக்கிறான்).*

*நெருப்பினால் சாம்பல் ஆனவர்கள் மேல் பாய்ந்து, அவர்களுடைய பாபங்களை ஒழித்து, அவர்களுக்கு நற்கதியைக் கொடுக்கிறது கங்கை. (ஸகர மஹாராஜாவின் புதல்வர்கள் கபில மஹர்ஷியிடம் அபசாரப்பட்டனர். கோபம் கொண்ட மஹர்ஷி அவர்களை எரித்துச் சாம்பலாக்கினார். பிறகு பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான். கங்கையும் அந்தச் சாம்பல் மேட்டை நனைத்தது. ஸகரனுடைய 60,000 புதல்வர்களும், பாபங்கள் எல்லாம் அழிந்து, ஸ்வர்கத்தை அடைந்தார்கள்.*

*(இந்த வ்ருத்தாந்தம் ராமாயணம் - பால காண்டம் - 40-43 ஸர்கங்களில் வருகிறது).*

அந்த கங்கையைப் போலவே, பகவானிடம் உள்ள பக்தியும், பாபங்களை எல்லாம் அழித்து, நற்கதியை அடைவிக்கும். ஆம், ஜீவாத்மாக்களும் ஸம்ஸாரம் என்னும் நெருப்பில் வீழ்ந்து, சாம்பல் ஆனவர்கள்தாமே.

1. ஸகரனின் புதல்வர்கள் - ஜீவாத்மாக்கள்

2. கபிலரின் கோபம் என்னும் நெருப்பில் சாம்பலானார்கள் - ஸம்ஸாரம் என்னும் நெருப்பில் சாம்பல் ஆகிறார்கள்.

3. கங்கை நற்கதி அடைவிக்கிறது - பகவத் பக்தி நற்கதி அடைவிக்கிறது.

இன்னும் பல பல ஒற்றுமைகள் கங்கைக்கும், பக்திக்கும். கங்கையில் நீராடி விட்டு, ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி, தன் கடமைகளைச் செய்கிறான் புருஷன் (ஜீவாத்மா). அதுபோல, பக்தியில் ஈடுபட்ட புருஷனும், தன் கடமைகளைத் தவறாது செய்கிறான்.

கங்காநதி இறங்கி நீராடுவதற்குப் பல துறைகளை உடையது. பக்தியும் ஆசார்யர்கள் ஆகிற பல துறைகளை உடையது. (ஸ்வாமி தேசிகனுடைய தயாஶதக ஶ்லோகம் - விகாஹே தீர்த்த பஹுலாம் ஶீதலாம் குரு ஸந்ததிம் - ஶ்லோகம் 2 - ஒப்பிடவும்).

கங்கா நதியைச் சிவன் தலையில் தாங்கினான். பக்தியை அறிவாளிகள் - ப்ரஹ்ம ஜ்ஞானிகள் - தலையால் தாங்கிப் போற்றுகின்றனர்.

கங்கை ஆழமானது. அது போலவே, ஜீவாத்மாவின் உண்மையான பக்தியும் ஆழமானது (deep devotion).

கங்கை கடைசியில் ஸமுத்ரத்தில் விழுகிறது. அதுபோல, பக்தியும் இவனிடம் முழுமையாக இருப்பதால், இந்த ஜீவாத்மாவும் ஸமுத்ரம் போன்றவனே.

மேலும், புத்திமான் ஆன இந்த ஜீவாத்மா ஶாந்தமாக, பக்தியில் மூழ்கி இருக்கிறான். அதாவது ஶாந்தி ரஸத்தையே

அனுபவிக்கிருன். ஆனுல், என்ன வேடிக்கை ! இவனுடைய பக்தியே இவனுக்கு மற்ற 8 ரஸங்களையும் கொடுக்கிறது. இது எப்படி? (ஸாஹித்யத்தில் - இலக்கியத்தில் - 9 ரஸங்கள் கூறப்படுகின்றன. இந்த நவ (9) ரஸங்கள் - அருவருப்பு, பரிஹாஸம், கோபம், பயம், துக்கம், ஆப்சர்யம், உத்ஸாஹம், ஆசை, ஶாந்தி)

1) அழியக் கூடியதான இந்த ஶரீரம் முதலியவற்றில் அருவருப்பு;

2) உலக ஸுகங்களை அனுபவிப்பதில் பரிஹாஸம் (அவை இளப்பமானவை, நிலையற்றவை என்பதால்);

3) தூக்கம் முதலியவற்றில் (அந்த ஸமயத்திலும் பக்தி செய்ய முடியவில்லையே என்ற) கோபம்;

4) மற்றவர்களைப் பழிப்பது, வைவது போன்றவற்றில் பயம்;

5) இன்னும் பக்தி யோகம் நிறைவேறவில்லையே என்ற துக்கம்;

6) இத்தனைப் பாபங்களைச் செய்த போதிலும், நமக்குக் கூட நல்ல விஷயங்கள் நடக்கின்றனவே என்ற ஆப்சர்யம்;

7) நாம் பாவங்களைச் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற உத்ஸாஹம்;

8) எம்பெருமானிடத்தில் உள்ள ஆசை.

இப்படி, பக்தி ஆகிற ஶாந்தி ரஸமே மற்ற எட்டு ரஸங்களையும் கொடுக்கிறது.

இந்த விஷயத்தில், ஜீவாத்மாவின் த்யானம் (பக்தியோகம்) நிறைவேறுவதற்குப் பூர்வ ஜன்ம வாஸனையால் ஏதாவது தடங்கல் நேருமோ என்று மஹாராஜா ஸந்தேஹப்பட வேண்டாம். (பூர்வ ஜன்ம வாஸனை பற்றி முன்பே விளக்கி இருக்கிறேன்).

ஏனென்ருல்-

இப்படி உலக விஷயங்களிலும் உலக ஸுகங்களிலும்

ஏற்படும் ஆசை - பூர்வ ஜன்ம வாஸனை - குழந்தைப் பருவம், யௌவனம் இவற்றில்தான் இருக்கும். முதுமைப் பருவத்தில் போய் விடும். (அந்தக் காலத்தில். இந்தக் காலத்தில் அல்ல !!)

இப்படிப்பட்ட வாஸனையை அதனால் ஏற்படும் ஆசையை - விலக்க வேண்டும் என்று வேதம் பல இடங்களிலும் கூறுகிறது.

எம்பெருமானைப் பற்றின த்யானம் என்னும் நெருப்பு கொழுந்து விட்டு எரியும் போது, என்ன ஆகும்? இந்த்ரியங்களை வெளி விஷயங்களில் செல்லாமல் தடுத்து நிறுத்துவதால்; மேலே சொன்ன வாஸனை, த்யானம் ஆகிற நெருப்பில் விழுந்து பொசுங்கிச் சாம்பலாகிவிடும்.

பரமாத்மா ஆகிற தத்வத்தைப் பற்றியும் ஜீவாத்மா ஆகிற தத்வத்தைப் பற்றியும் நன்ருக அறிந்து கொள்வதே பேரானந்தம். அந்த ஆனந்தத்தை அநுபவிப்பதற்குத் தடையாக, இவனுடைய யோக பலத்தினால், நடுவில் சில இளப்பமான ஸித்திகளை இவன் அடையக் கூடும். அவை இவனைத் திசை திருப்பி விடக் கூடும்.

(அஷ்ட ஸித்திகள் என்று சொல்லப்படும் எட்டு ஸித்திகள்—

1. அணிமா - ஶரீரத்தைச் சிறியதாக ஆக்கிக் கொள்வது.
2. மஹிமா - ஶரீரத்தைப் பெரியதாக ஆக்கிக் கொள்வது.
3. லகிமா - இலேசாக ஆக்கிக் கொள்வது.
4. கரிமா - கனமாக ஆக்கிக் கொள்வது.
5. வஶித்வம் - எல்லாவற்றையும் தன் வசமாக ஆக்கிக் கொள்வது.
6. ஈஶத்வம் - தலைவனாக இருப்பது.
7. ப்ராப்தி - நினைத்ததை எல்லாம் அடைவது.
8. ப்ராகாம்யம் - நினைத்த இடத்துக்குச் செல்லும் ஶக்தி).

இந்த ஸித்திகள் ஜீவாத்மா மோக்ஷம் அடைவதற்கு இடையூறுகளாக நிற்கும். காலதாமதத்தை ஏற்படுத்தும். இவற்றில் ஆசை வைக்காமல் இருக்க வேண்டும்.

(தொடரும்).

॥ श्रीः ॥

# மயர்வு

(ஸ்ரீ R. கண்ணன், பெங்களூர்)

ஸ்வாமி நம்மாழ்வார் தன்னுடைய ஸாமவேத ஸாரமான திருவாய்மொழியில் முதல் பாசுரத்தில் தனக்கு எம்பெருமான் மயர்வறமதிநலமருளினான் என்று அருளிச் செய்கிறார்.

உயர்வற உயர்நலமுடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே !

(எல்லையற்ற கல்யாண குணங்களையுடையவன் எவனோ? மயர்வற்ற ஜ்ஞானத்தை அடியேனுக்கு அருளினவன் எவனோ? எவன் தேவர்களுக்கு எல்லாம் அதிபதியோ (தேவாதிராஜனோ)? அப்படிப்பட்ட எம்பெருமானுடைய, திருவடியை எல்லாத் துயர்களையும் போக்கும் திருவடிகளை, என் நெஞ்சமே! வணங்கி வழிபடு - என்பது இதன் சுருக்கமான பொருள்).

''இங்கு ஆழ்வார், எம்பெருமான் தனக்கு மயர்வற மதிநலம் அருளினான் என்று கூறியதில் உள்ள மயர்வு என்பதற்குச் சிறந்த உரையாசிரியரான நம்பிள்ளை அருளிச் செய்தபடி பொருளை அநுபவிப்போம்-

மயர்வற - ஜ்ஞாநாநுதயம், அந்யதா ஜ்ஞானம், விபரீத ஜ்ஞானம் என்கிற இவை வாஸனையோடே போம்படியாக.

ஜ்ஞாநாநுதயமாவது - தேஹாத்மாபிமானம்.

அந்யதா ஜ்ஞானமாவது - தேவதாந்தர பேஷமென்றிருக்கை.

விபரீத ஜ்ஞாநமாவது - ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞானம்''

ஆகவே மயர்வு என்பது ஜ்ஞாநாநுதயம், அந்யதா - ஜ்ஞானம் மற்றும் விபரீத ஜ்ஞானம் ஆகிய மூன்றையுமே குறிக்கும் என்று ஏற்படுகிறது. மயர்வற என்பதால் எம்பெருமான் ஆழ்வாருக்கும் இம்மூன்றையும் அறவே (வேரோடு) போக்கி, உண்மையான ஜ்ஞானத்தை அருளிச் செய்தான் என்று ஏற்படுகிறது.

ஜ்ஞானத்தில் ஏற்படும் மேற்கூறிய மூன்று குறைபாடுகளையும் சற்றே விரிவாகக் காண்போம்.

ஜ்ஞாநாநுதயம் - ஜ்ஞான அநுதயம் - அதாவது ஜ்ஞாநமே ஏற்படாமலிருப்பது - அதாவது ஒரு பொருளைப் பற்றிய உண்மையான அறிவு உண்டாகாமலிருத்தல் - ஜீவாத்மா - ஒரு ஶரீரத்தை எடுத்துக் கொள்ளும்போது, ஆத்மா வேறு, ஶரீரம் வேறு என்று உணர்ந்தால் அது உண்மையான ஜ்ஞானம் - ஏனென்றால் ஆத்மா அறிவுடையது - ஶரீரம் அறிவற்றது - இவை இரண்டும் ஒன்றே என்று எண்ணினால் அது உண்மையான ஜ்ஞானமாகாது. தேஹமே - ஆத்மா (ஶரீரமே ஆத்மா) என்று எண்ணினால் தேஹாத்ம ப்ரமம் - அல்லது தேஹாத்மாபிமானம் என்ற தவறான அறிவு உண்டாகிறது. தேஹம் வேறு, ஆத்மா வேறு என்ற அறிவே இல்லை. இதுவே ஜ்ஞாநாநுதயம் என்று ஜ்ஞானத்தின் குறையாகச் சொல்லப்பட்டது.

அந்யதா ஜ்ஞானம் - ஒரு பொருளின் தன்மை (தர்மம் - குணம்) விஷயத்தில் மாறுபட்டு அறியும் அறிவு அந்யதாஜ்ஞானம் எனப்படும். உதாரணமாக வெண் சங்கத்தை (உள்ளபடி வெண்மை நிறம் என்றறியாமல்) மஞ்சள் நிறமானது என்று அறிவது அந்யதா ஜ்ஞானமாகும். ஆத்மாவின் உண்மையான தன்மையாவது - தர்மமாவது - எம்பெருமானுக்கே அத்யந்த ஶேஷனாயிருத்தல் - அப்படி அறியாமல் தன்னை தேவதாந்தரங்களுக்கும் (எம்பெருமானைத் தவிர்ந்த மற்ற தேவதைகளுக்கு) அடிமையாக எண்ணுதல் - அந்ய ஶேஷத்வம் என்ற மாறுபட்ட அறிவே அந்யதா ஜ்ஞானம் - இதுவும் முற்றிலும் தவறான ஜ்ஞானம்.

விபரீத ஜ்ஞானம் - ஒரு பொருளின் இயல்பு ஸ்வரூபம் அதாவது தர்மி) தன்னில் மாறுபட்ட அறிவு விபரீத ஜ்ஞானமாகிறது. உதாஹரணம் - தூரத்திலிருக்கும் சிப்பியைப் பார்த்து வெள்ளி என்ற உலோஹமாக ப்ரமிப்பது, தூரத்திலிருக்கும் பழுதை, பாம்பு என்று நினைப்பது ஆகியவை விபரீத ஜ்ஞானத்தால் உண்டாவது.

ஆத்மாவின் இயல்பாவது (அதன் உண்மையான ஸ்வரூபமாவது) எம்பெருமானுக்கே பரதந்த்ரன் என்றும், எம்பெருமானுக்கே உகப்பை உண்டு பண்ணத் தக்கதாகவும் இருக்க வேண்டும். ஆனால் அப்படி எண்ணாமல் (பகவானுக்கு பரதந்த்ரன் என்ற எண்ணம் இல்லாமல்), தான் ஸ்வதந்த்ரன் - தன் இஷ்டப்படி அநுபவிக்கலாம் என்ற மாறுபட்ட அறிவு, விபரீத ஜ்ஞானம். இதை ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் என்று கூறுவார்கள். இதுவும் முற்றிலும் தவறான ஜ்ஞானமாகும்.

வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை கீழ்வானம் என்ற திருப்பாவைப் பாசுரத்திற்கு விளக்கம் அளிக்கும்போது ''கீழ் வானம் வெளுத்ததாக வெளியிலிருக்கும் தோழிகள் கூறுவதை உள்ளிருக்கும் பெண் ''கீழ் வெளுத்தது - பொழுது விடிந்ததாலல்ல, உங்கள் திருமுகத்து ப்ரகாசத்தால் கீழ் திசை வெளுத்தது போன்று தெரிகிறது. இது அந்யதா ஜ்ஞானம்'' என்று கூறுவதாக அருளிச் செய்கிறார். கீழ்வானம் வெளுக்கவில்லை - உங்களுக்கு வெளுத்தது போல் தோன்றுகிறது - மாறுபட்ட ஜ்ஞானம் என்கிறாள் - என்பது இதன் பொருள்.

அதே பாசுரத்தில் ''எருமைச் சிறு வீடு மேய்வான் - அதாவது பொழுது புலர்ந்து விட்டது - எருமைகள் பனிப் புல் மேயப்புறப்பட்டன என்று வெளியில் இருப்பவர்கள் கூற, அதற்கு உள்ளே இருப்பவள் ''நீங்கள் பார்த்தது எருமைகள் அல்ல. உங்கள் திருமுகத்து ஒளியைக் கண்டு, இருளானது திரண்டு போகிறது - நீங்கள் அதைத் தவறாக எருமைகள் போகின்றன என்று நினைத்திருக்கிறீர்கள், இது உங்களுடைய விபரீத ஜ்ஞானம் இருந்தபடி'' என்று கூறுவதாக உரையாசிரியர் அத்புதமாக அருளிச் செய்துள்ளார்.

இங்கு முதலிலே ‘‘உள்ளே படுத்திருப்பவள் கூறியிருப்பதாக உரையாசிரியர் அருளிச் செய்திருப்பது - தன்மையிலே மாறுபாடான அறிவு - அதாவது ‘வெளுப்பு’ என்ற தன்மையே இல்லை என்றபடி; அடுத்தபடியாக, இயல்பிலே மாறுபாடான அறிவு - அதாவது எருமை என்ற பொருளே இல்லை என்ற மாறுபாடான அறிவு - ஆகவே முன் கூறியபடி இவை அந்யதாஜ்ஞானம் மற்றும் விபரீத ஜ்ஞானம் என்று உரையாசிரியர் அருளிச் செய்திருக்கிறார்.

அந்யதா ஜ்ஞானம் மற்றும் விபரீத ஜ்ஞானம் இரண்டுக்கும் பொதுவாக விபர்யயம் என்று வடமொழியில் கூறுவார்கள்.

ஆகவே ஆழ்வார், எம்பெருமான் தனக்கு ஜ்ஞாநாநுதயம் (ஶரீராத்ம ப்ரமம்), அந்யதா ஜ்ஞானம் (அந்ய ஶேஷத்வ ப்ரமம்) மற்றும் விபரீத ஜ்ஞாநம் (ஸ்வதந்த்ராத்ம ப்ரமம்) ஆகியவைகளை அறவே போக்கி உண்மையான அறிவை அருளிச் செய்தான் என்பதை மயர்வற மதிநலம் அருளிச் செய்தான் என்ற சொற்றொடர் மூலம் அருளிச் செய்கிறார்.

நாம் ஶ்ரிய:பதியான எம்பெருமானை அடைக்கலமாய் அடைந்து, மயர்வற மதிநலம் அருளப் பெறுவோமாக.

॥ श्रीः ॥

# பரமைகாந்திகளின் ஸ்வஸ்திவாசனம்

*(ஸ்ரீ V.S. கருணாகராசார்யார் ஸ்வாமி)*

*சென்ற மந்திரத்தின் இறுதி அடியில் சக்ரவர்த்தியை நமக்கு நல்லான் என்று உயர்த்திப் பேசி அருளிய பேரருளாளப் பெருமானைப் போல அனைத்து திவ்யதேசங்களிலும் எழுந்தருளி இருக்கும் தேவர்களான அர்ச்சா மூர்த்திகளும் அருள வேண்டும் என்று வேண்டியவாறே அருளாளனுடைய தனித்தன்மைகளில் ஒன்று நினைவின் முன் வரவே அந்தச் சிறப்பினை மங்களாஶாஸனம் செய்கிறான் வேதத்தாழ்வான்.*

*பங்குனி உத்திரப் பொன்னாளில் திருக்கல்யாண உத்ஸவத்தில் ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆறு தேவியர்களுடன் காட்சி தருகின்றான். (1) பெருந்தேவித்தாயார் (2) திருமார்பிலே உள்ள பெரிய பிராட்டியார் (3) உபயநாச்சிமார்களில் வலப்புறம் காட்சி தரும் ஸ்ரீதேவீ (4) உபயநாச்சிமார்களில் இடப்புறம் காட்சி தரும் பூதேவீ (5) மலையாள நாச்சியார் (6) ஆண்டாள் என்று ஆறு தேவிகள். இவர்கள் அறுவரும் பெருந்தேவித் தாயார் தலைமையில் இருப்பதால் அறுவருமே பெருந் தேவியர்கள்.*

*1964-ல் இந்த உத்ஸவத்தை மங்களாசாஸனம் செய்ய அர்ச்சாவதாரானுபவ ரஸிகரான ஸ்ரீமதுபயவே திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார்- (D.R.) ஸ்வாமி அடியேன் திருத்தகப்பனாரையும் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு சென்றார். அப்பொழுது ஆறு பெருந் தேவியர்களுடன் காட்சி தந்தருளிய அருள் வரதனை மங்களாசாஸனம் செய்து ஆசுகவியாக ஒரு கவிதை அருளிடுமாறு ஸ்ரீமதுபயவே திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார்-(D.R.) ஸ்வாமி திருத்தகப்பனாரைப் ப்ரார்த்தித்தார். அதனைப் பேரருளாளன் நியமனமாகத் தலையால் ஏற்றுத் திருத்தகப்பனார் உடனேயே ஒரு கவிதையை இயற்றி விண்ணப்பம் செய்தார்.*

*அந்தக் கவிதை:-*

ஷட் தேவ்யஸ்தவ: ஷட் கிரஸ்த்வதுதிதா:; ஷட் தே குணாஸ் ஸோபனா:
ஷட்ஸ்வங்க ச்ருதி ரூப! ஷட் ச்ர்யனுகதா அர்த்தாச்ச: ஷட் யுக்தய: ।
ஷட்ஸாமீக்ஷண-ஷண்முகாதி-நுத! ஹே! ஷட்கத்ரயாசார்ய! ஹே!
ஷட் - ப்ராத்ருவ்ய - ஷடூர்மி - தப்த - ஹ்ருதய: குர்வே ஷடங்காம் நுதிம்

*இந்த ஶ்லோகத்தில் அடி தோறும் மூன்று முறை என்று நான்கு அடிகளில் மொத்தமாக ஈராறு (பன்னிரண்டு) முறை ஆறு என்ற எண்ணைக் குறிக்கும் ஷட் என்ற சொல் அதே பொருளில் வந்துள்ள அழகைச் சுவைத்திடுங்கள்.*

*இவ்வாறு ஈராறு முறை ஆறு வரும்படியான ஆற்றுப் பெருக்கான ஆஶுகவி அருளாளப் பெருமாளின் அருளால் அவதரித்தது. இதன் பொருள்:-*

*அருள் வரதா!*

(1) *உனக்கு திருத் தேவியர்கள் ஆறு*

(2) *நீ திருக்கச்சி நம்பிகளுக்குக் கச்சிவாய்த்தான் மண்டபத்தில் எம்பெருமானுடைய ஐயங்களை அகற்ற அருளிச் செய்த வார்த்தைகள்*

(i) *ஶ்ரிய: பதியான நானே பரம் பொருள்*

(ii) *ஜீவாத்மா பரமாத்மாவினை விட வேறுபட்டது என்பதே எனது கொள்கை*

(iii) *எல்லோருக்கும் பற்றலாம் படியானதான மோக்ஷத்துக்குரிய உபாயம் ஶரணாகதியே.*

(iv) *உடலுடனேயே மோக்ஷம் பெறுவது - (ஜீவன் முக்தி என்பது கிடையாது (தேஹ முடிவில் மோக்ஷம்).*

(v) *ஶரணாகதி செய்தவனுக்கு இறுதி ஸமயத்தில் இறைவனுடைய நினைவு வந்தால் தான் நல்ல கதி என்ற கட்டாயம் கிடையாது.*

(vi) *பெரிய நம்பிகள் என்று ப்ரஸித்தரான பராங்குஶதாஸரை ஆசார்யனாக அடைவது*

*என நீ அருளிய திரு வார்த்தைகள் ஆறு.*

(3) உனக்கு உள்ள கல்யாண குணங்கட்கெல்லாம் மூலமான குணங்கள்

(i) ஞானம்; (ii) பலம்; (iii) ஐஶ்வர்யம்; (iv) வீர்யம்

(v) ஶக்தி; (vi) தேஜஸ்; என ஆறு.

(4) ஆறு அங்கங்களுடன் கூடிய வேதமாக நிற்பவனும் நீயே

V (5) நின் பிராட்டிக்கு உரிய திருநாமம் ஆன ஸ்ரீ என்பதற்கு

(i) அடியவர் விண்ணப்பத்தைக் கேட்பவள்

(ii) அதனை உன்னைக் கேட்க வைப்பவள்

(iii) அவர்கள் தன்னை எளிதில் அணுகலாம் படி நிற்பவள்

(iv) அவர்கட்காக உன்னை அணுகலாம் படி நிற்பவள்

(v) அவர்கள் தீ வினைகளை அகற்றுபவள்

(vi) அவர்களைப் பக்குவப் படுத்திடுபவள்

எனப் பின்னணிகள் ஆறு.

(6) நின் அம்சமாகக் கருதப்படும் அரசர்கள் நிலைத்திருக்கப் பயன்படுத்தும் யுக்திகள்-

(i) சில எதிரிகளுடன் ஸமாதானம் செய்து கொள்வது - ஸந்தி

(ii) சில எதிரிகளுடன் போர் புரிவது - விக்ரஹம்

(iii) எதிரியை நோக்கிப் படையை அணிவகுத்திடச் செய்வது - யானம்

(iv) போர் செய்ய உரிய காலம் வருவதற்காகக் காத்திருப்பது - ஆஸனம்

(v) வலிமை மிக்க எதிரியிடம் ஶரண் அடைதல் - த்வைதீபாவம்

(vi) எதிரியை வீழ்த்துவதற்காக வலிமை மிகுந்த நண்பன் ஒருவனைச் சரண் அடைதல் - ஸம்ஶ்ரயம்

என ஆறு

(7) ஆறு என்பதின் பாதி (மூன்று) கண்களுடையவன் ஆகிய சிவபெருமான் மற்றும்

(8) ஆறு முகமுடைய முருகன் என இவர்களால் வணங்கப் படுபவனே!

(9) ஆறு மூன்று அதாவது பதினெட்டு அத்யாயங்களை உடைய கீதையினை அருளியவனே!

(10) அடியேனுக்கு

(i) ஆசை; (ii) கோபம்; (iii) லோபம்

(iv) மதம்; (v) மோஹம்; (vi) மாத்ஸர்யம்

என எதிரிகள் ஆறு - இவர்களாலும்

(11) அடியேனை அலைக்கழிப்பவைகள்

(i) துயரம்; (ii) மயக்கம்; (iii) முதுமை

(iv) இறப்பு (v) பசி (vi) மாத்ஸர்யம்

என ஆறு - இவர்களாலும் இடையறாது தவிக்கும் இதயத்துடன் பிராட்டிமார் அறுவருடன் நீ வீற்றிருக்கும் இந்நிலையில்

(12) சாண்டில்ய ஸ்ம்ருதியிலும் வைகானஸ ஆகமங்களிலும் வர்ணிக்கப்பட்ட முறையில்

(i) உடலை ஒரு கழி போலத் தரையிலே கிடத்தி

(ii) & (iii) இரண்டு கைகளையும் நீட்டி

(iv) & (v) இரண்டு கால்களையும் நீட்டி

(vi)பிறகு கைகள் இரண்டையும் பூவின் மொட்டு போல ஆக்கிச் செய்திடுவதால் அங்கங்கள் ஆறு கொண்டு செய்யப்படும் ஷடங்க நமஸ்காரம் எனப்படும் நமஸ்காரத்தைச் செய்து ஶரணமடைகிறேன் என்பதாகும்.

பின்னர் திருத்தகப்பனாருடைய அனுமதியுடன் இந்த ஶ்லோகத்தையும் அருள்வரதன் விஷயமாக அவர் அருளிச் செய்த விவாஹவரதஸ்தவத்திலே இணைத்து

ஸ்ரீநிதிக்ரந்தமாலா என்னும் தொகுப்பில் நான்காவது மலரில் 1976-ல் அடியேன் அச்சிட்டு வெளியிட்டேன்.

இப்படி அருள்வரதனுடைய ஆறு பெருந்தேவியர்களும் நம் அரைகுறைப் பணிவிடைகளைப் பெரியவைகளாக - நிறைந்தவைகளாகச் - செய்தருளிட வேண்டும் என வேதத்தாழ்வான் ''தேவீஷ்ஷடுர்வீ:!'' என்று அவர்களை விளித்து ''உரு ண: க்ருணோத'' என்று இச் செய்யுள் வடிவ மந்திரத்தின் முதலடியில் வேண்டுகிறான்.

இந்த வகையான உரையை சில வித்வான்கள் ஏற்கவில்லையோ என ஐயம் அடியேனைப் பிடித்துக் கொண்டு ஆட்டியது. தடுமாறிக் கொண்டிருந்தேன்.!

இந்நிலையில்.....

தூப்புல் தேசிகன் மஹோத்ஸவத்தில் இரண்டாம் திருநாள் காலை அம்மாள் கோஷ்டி உத்ஸவம் என்றே ப்ரஸித்தமானது. தங்கத் திருப்பல்லக்கில் ஸ்வாமி தேசிகன் சிறு குழந்தைக்குரிய ஶிகை அலங்காரத்துடன் புறப்பாடு கண்டருளிடுகிறார். விபவ நிலையில் அம்மாள் காலக்ஷேப கோஷ்டிக்குச் சென்று அம்மாள் திருவருளைப் பெற்ற நிகழ்ச்சியை ஸேவித்து நாம் மகிழும்படியாக முன்னோர் ஏற்பாடு செய்த மஹோத்ஸவம் இது.

அனேகமாக ஸ்வாமி தேசிகன் உத்ஸவத்தில் இரண்டாம் திருநாள் சித்திரை நக்ஷத்ரமாக இருக்கும் ஸ்ரீ நடாதூர் அம்மாளின் திருநக்ஷத்ரம் சித்திரை அல்லவா? ஆகவே இந்தத் திருக்கோலத்துக்கு இரண்டாம் திருநாளினை ஆன்றோர்கள் தேர்ந்தெடுத்தனர் போலும்!

அந்தப் புறப்பாட்டினை ஸேவிக்க வேண்டும் என்று தூப்புல் சென்றிருந்தேன். அன்று புறப்பாடு ஆன பிறகு, நவராத்ரி ஆதலால் திருத்தண்கா மரதகவல்லித் தாயார் திருமஞ்ஜனம், பிறகு ஸ்வாமி தேசிகன் திருமஞ்ஜனம், ஸேவை, சாற்றுமுறை தொடர்ந்து ததீயாராதனம் என்ற அத்யத்புதமான வைபவங்கட்குப் பிறகு அடியேனைச் சிறிது நேரம் உபந்யாஸம் செய்யச் சொல்லி ஸ்வாமி தேசிகனின் அணுக்கர்களான மஹான்கள் நியமித்தார்கள். ஸ்வாமி

தேசிகனுக்கு அம்மாள் செய்த திருவருளை ஸ்வாமி தேசிகன் ஸங்கல்பஸூர்யோதயத்தில் பொறித்து வைத்துள்ள பாங்கினைப் பற்றி ஸ்வாமி தேசிகன் மற்றும் மரதகவல்லித் தாயார், விளக்கொளிப் பெருமாள் - இவர்களுடைய திருவோலக்கத்திலே விண்ணப்பம் செய்யும் பேறு கிடைத்தது.

இதனால் ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம் மிக உகந்திருக்க வேண்டும். இந்த ஆண்டு அறுபத்தோராண்டு வாழ்க்கையில் அடியேன் பெற்றிடாத பாக்யங்களை அடியேனுக்கு அனுக்ரஹித்து அருளியாயிற்று.

அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

தொடர்ந்து திருவயிந்தை மாநகரில் ஸ்வாமி தேசிகனுடைய ஸூர்யப்ரபைப் புறப்பாட்டுக்கு முன் ஸ்வாமி தேசிகன் திருமாளிகையில் ஓர் உபந்யாஸம் செய்யும் பேறும் கிட்டியது.

அது மட்டுமா! மீண்டும் திருத்தேர் தினத்தில் மாலை புறப்பாடு மறுநாள் ஸ்வாமி தேசிகன் திருநக்ஷத்ரத் திருநன்னாளில் மலை உத்ஸவம் என்று ப்ரஸித்தமான புறப்பாடு என இவைகளையும் ஸேவிக்கும் பாக்யம் கிடைத்தது.

மருந்து மலையில் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஹயக்ரீவனை மங்களாசாஸனம் செய்வதாலே மலை உத்ஸவம் என்று வழங்கப்படும் மஹோத்ஸவத்தை அங்கே நேரிலே வந்து கண்டு மகிழ இயலாத பக்தர்கள் தங்கள் தங்கள் இருப்பிடத்திலேயே கண்டு களித்திடும் வகையில் பொதிகைத் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு ஏற்பாடு செய்திருந்தனர்.

பல வித்வான்களுடன் அடியேனுக்கும் நேர்முகம் செய்ய வாய்ப்பு கிட்டியது. நேர் முக வர்ணனை ஆன பிறகு உள்ளூர் வித்வானும் திருக்குடந்தை ஆண்டவன் திருவருளுக்கு இலக்கானவரும் வேதம் வல்லாருமான ஸ்ரீமதுபயவே திருமலை ஈச்சம்பாடி க்ருஷ்ண தேசிகாசார்ய ஸ்வாமி ''அயிந்தை ஸ்ரீதேவநாதப் பெருமாள்'' ஸன்னிதியின் எதிரில்

உள்ள இந்த மலையில் ஸ்ரீஹயக்ரீவனைக் குறித்து கண்டாவதாரர் ஆன ஸ்வாமி தேசிகன் தவம் செய்து ஸித்தி பெறப் போவதை ஸ்தல புராணம்

கலௌ புரோ மஹாநேக: ரிஷிர் கண்டாம்ஶகோ ஹரே: ।
தபஸ்குர்வந் கிரௌ தஸ்மின் ஸித்திம் ப்ராப்தோ பவிஷ்யதி ॥

என்று குறிப்பிட்டுள்ளது.

திருமங்கையாழ்வாரும் இத்திருத்தலத்தினை மங்களாசாஸனம் செய்யும் பதிகத்தில்

வான் உலாவிய மதி தவழ் மால் வரை
மா மதிள் புடை சூழத்
தேன் உலாவிய செழும் பொழில் தழுவிய
திருவயிந்திரபுரமே

என்ற பாடல் பகுதியில் (அடியவர்க்கு மெய்யனாகிய பகவானின் இருப்பிடம்) வான் - பரமாகாசமாகிற வைகுந்தத்தில், உலாவு - ஸஞ்சரிக்கின்ற, மதி - அறிவு அதாவது வித்யா லக்ஷ்மீ, தவழ் - வீற்றிருக்கின்ற திருமார்பு மற்றும் திருமடி இவைகளை உடைய, மால் - லக்ஷ்மீ ஹயக்ரீவ ஸ்வாமியின், வரை - மலையாகிய மருந்து மலை மற்றும், மாமதிள் புடை சூழ - பெரிய மதிள்கள் என்று இவைகள் சூழ்ந்து இருக்கத், தேன் உலாவிய பூக்கள் நிறைந்த, பொழில் - சோலைகள், தழுவிய - நிறைந்ததான, திருவயிந்திர புரமே என்று இந்த மலையைக் குறிப்பிடுவதாகப் பெரியோர் பணித்துள்ளனர். அதை நீங்கள் யாரும் வர்ணனையில் சொல்லவில்லையே'' என்று சுட்டிக் காட்டினார்.

''திருவுள்ளம் கலங்க வேண்டா, பாதுகாவில் இதைப் பற்றி உரிய ஸந்தர்ப்பத்தில் எழுதிடுகிறேன்'' என்று அவரிடம் விண்ணப்பித்துக் கொண்டேன்.

மலையில் இந்த உத்ஸவத்திற்கு எழுந்தருளும் பெருமாள் லக்ஷ்மீ ஹயக்ரீவர் இல்லையே யோக ஹயக்ரீவர் தானே என்றும், ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில் வ்யாக்யா முத்ராம் என்கின்ற த்யான ஶ்லோகத்தில் லக்ஷ்மீ மடியில் வீற்றிருப்பது பற்றிய குறிப்பு ஏதும் இல்லையே என்றும் கலங்கி மதி என்பது

லக்ஷ்மீயைக் குறிப்பது என்பது சிறிது சிந்திக்க வேண்டிய விஷயம் என்று இதைக் கேட்ட நண்பர் ஒருவர் கூறினார்.

பெருமாளைச் சொல்லும் இடம் எல்லாம் பிராட்டியையும் சொல்கிறது என்பது ப்ரஸித்தம். பிராட்டி நேரே நம் புறக் கண்ணுக்குப் புலப்படாது போனாலும் அவனைப் பிரியாது கூடவே இருப்பவள் என்பதில் ஐயம் கிடையாது.

நிலவும் சந்திரனும் போலப் பிராட்டியும் பெருமாளும் இணைந்தே இருப்பர் என்ற அடிப்படையில் ஸ்வாமி தேசிகனே

நின் திரு தனக்கும் நீ திருவாகி

இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை

என்று மும்மணிக்கோவையில் அருளிடுகிறார். எனவே மதி தவழ் மால் என்பது ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனைக் குறிப்பதாகப் பெரியோர் பணித்தனர். இது ஓர் ஸமாதானம்.

மதி தவழ் மால் என்பதற்கு அறிவுக்கு இருப்பிடமான ஹயக்ரீவன் என்றும் சந்த்ர மண்டலத்திலே ஸேவை தரும் ஹயக்ரீவன் என்றும் பொருள் கொண்டால் இக் கேள்விகள் எழா. இது மற்றோர் ஸமாதானம்.

அன்றே மலை உத்ஸவ மங்களாஶாஸனம் ஆனவுடனே புறப்பட்டுக் காஞ்சியில் தேவப்பெருமாளை மங்களாஶாஸனம் செய்து விட்டு ஸ்வாமி தேசிகன் பிரியா விடை பெறும் மஹோத்ஸவத்தையும் ஸேவிக்கும் பாக்யம் கிடைத்தது.ஒரே ஒரு மாலை சாத்திக் கொண்டு உபய நாச்சிமார்களுடன் மலையிலிருந்து ஸ்வாமி தேசிகனுடன் கீழே இறங்கி வந்து கண்ணாடி அறையில் தேவப்பெருமாள் நிற்க அவனைப் பார்த்துக் கொண்டு ஸ்வாமி தேசிகன் எதிரே எழுந்தருளிப் பிரியா விடை பெறும் காட்சி. இதனை 32 ஆண்டுகட்கு முன் 1976-ல் அடியேன் ஸேவித்திருக்கிறேன். இந்த ஆண்டு தான் மீண்டும் அந்த ஸேவை கிடைத்தது.

ஸ்வாமி தேசிகனுக்கு எம்பெருமான் தானே செய்யும் திருவருளை நாம் ரஸிக்கத் தோதாக

ஸங்கல்பஸூர்யோதயத்தில் புறச்சமயங்களில் உள்ள புன்மைகளைக் காட்டி வேத நெறியை நிலை நாட்டிய சிஷ்யனுக்கு ஆசார்யன் முன்னிலையில் விவேக மஹாராஜன் செம்பொற்கழல் பரிசாக அளிப்பதைக் கூறும் ஶ்லோகம் என்றிப்படிப் பல தேசிக திவ்ய ஸூக்திகளை அப்பொழுது அனுஸந்திக்கும் மரபினை நம் முன்னோர்கள் அனுபவித்து அனுபவித்து ஏற்பாடு செய்துள்ளனர்.

பூ மாரி பொழிய தேவப் பெருமாள் தேசிகனை கௌரவிக்கும் காட்சி!

மால் தம்முடைய ஒற்றை மாலையையும் ஸ்வாமி தேசிகனுக்குச் சார்த்தி விட்டுத் தாம் மாலை ஏதும் இன்றி மலைக்குத் திரும்ப எழுந்தருளும் காட்சி!

அப்படி ஸ்வாமி தேசிகனுக்கு அருள் செய்து கொண்டே அடியேனையும் பார்த்து அருளாளன் புன்முறுவல் பூத்தது போலிருந்தது அடியேனுக்கு!

அப்பொழுது ஸ்வாமி தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் இந்த ஶ்லோகத்தையும் அனுஸந்தானம் செய்தார்கள்.

கலகண்ட கணாஸ்வாத்யே காமஸ்யாஸ்த்ரே நிஜாங்குரே ।

நிம்பவ்ருத்திபிருத்கீர்ணே ந சூத: பரிதப்யதே ॥

''மாந்தளிர் மன்மதனுடைய அஸ்த்ரம். இனிய குரல் உடைய இன்னிசைக் குயில்கள் அதனை விரும்பிச் சுவைக்கும் படியான ஏற்றம் அதற்கு உண்டு. அப்படி இருந்தும் வேப்பிலையையே உண்டு வாழும் காகம் ஒட்டகம் போன்றவை எதிர்பாராது அதை விழுங்க நேரிட்டால் உடனே அதை ஏற்காது உமிழ்ந்து விடும். இதனால் மா மரம் வருந்தாது'' என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் நிகமனாதிகராத்தில் இந்த சுலோகம் வருகிறது.

ஒட்டகம் வேப்பிலையைத்தான் விரும்பி உண்ணுமாம். அதற்கு அதையே உண்ட பழக்கத்தினால் வந்த ப்ரியம் அது. தப்பித்தவறி வேப்பிலையுடன் மென்மையான மாந்தளிர்

*கலந்து விட்டால் அதை மட்டும் தனியாக வெளியில் உமிழ்ந்து விடுமாம்.*

*வேட்டுவச்சேரியினை விழுங்கிய கருடன் தன் வாயில் அங்கு வாழ்ந்த அந்தணன், தணல் போலச் சுட்டதால் அவனையும் அவன் விரும்பியபடி அவன் மனைவியாகிய வேட்டுவப் பெண்மணியையும் உமிழ்ந்து விட்டது போல இருக்குமாம் இது. (இந்த வரலாற்றை விரிவாக இந்த த்தொடரில் முன்னரே எழுதியுள்ளேன்)*

*இந்த ஒட்டகங்களின் தன்மைக்குக் கண்ண பிரானின் படையில் இருந்த ஒட்டகங்களின் தன்மை கூட விதிவிலக்காக இருப்பதில்லையாம்.!*

*கண்ண பிரான் தருமனின் ராஜஸூய யாகத்திற்குச் செல்கையில் வழியில் ரைவதக மலையில் இளைப்பாறினான்.*

*அவன் பரிவாரங்களுடன் சென்றன சில ஒட்டகங்கள். அவைகட்கு அவைகளைப் பரிபாலிக்கும் சோனகர்கள் (வெளிநாட்டவர் - அரேபியர்) கவனக் குறைவாக வேப்பிலையுடன் சில மாந்தளிர்களையும் கொடுத்து விட்டனர். ஆனால் அவைகள் வேப்பிலையை மட்டுமே விழுங்கி அவைகளுடன் கலந்து விட்டிருந்த மாந்தளிர்களைக் கருடபிரான் அந்தணனை உமிழ்ந்தது போல உமிழ்ந்தன!*

*இவ்வாறு பரம வைஷ்ணவனான மாக மஹாகவி தம்முடைய ஶிஶுபால வத மஹாகாவ்யத்தில் 5-ஆம் ஸர்கத்தில் 66-ஆம் சுலோகத்தில் வர்ணித்துள்ளார்.*

*ஶ்லோகம்:-*

ஸார்த்தம் கதஞ்சித் உசிதை: பிசுமர்த்தபத்ரை:

ஆஸ்யாந்தராலகதம் ஆம்ரதலம் ம்ரதீய: ।

தாஸேரகஸ்ஸபதி ஸம்வலிதம் நிஷாதை:

விப்ரம் புரா பதகராடிவ நிர்ஜகார ॥

*(இங்கு சுலோகத்தில் உள்ள உசிதை: என்ற சொல் பழக்கமான என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது.)*

தேவப் பெருமாள் ஸ்வாமி தேசிகனுக்கு வெகுமதி தந்து பிரியா விடை தருகையில் ஸ்வாமி தேசிகன் இந்த ஶ்லோகத்தை அனுஸந்திப்பதாக பாவித்து மஹான்களாகிய முன்னோர்கள் ஏன் ஏற்பாடு செய்தார்கள் என்று எண்ணிப் பார்த்தேன்.

அப்பொழுது....

தேவப் பெருமாளின் புன்முறுவல் அடியேனுக்கு ஆறுதல் அளிக்கவே எழுந்தது போலத் தோன்றியது.

''முட்டாளே! உனக்கு நாம் நம் பாதுகையின் மூலம் அறிவித்த பொருளைச்சில பலர் ஏற்கவில்லையோ என்று ஏன் தவிக்கின்றாய்? அம்மாள் போன்ற மஹான்களுடைய ஆசீர்வாதம் பெற்று அப்புள்ளாரால் நன்கு பயில்விக்கப்பட்டுத் திருவேங்கடமுடையானின் திருமணியின் அவதாரம் என்று கொண்டாடப் பெற்று அரங்கனாலும் பிராட்டியாராலும் விருதங்கள் சூட்டப்பெற்று இன்றும் அர்ச்சையிலும் நம்மால் கௌரவிக்கப் பெறும் மற்றோர் ஹயக்ரீவனான இந்த ஸ்வாமி தேசிகன் ஸூக்திகளையே ஏற்காதவர்கள் பலர் இருக்கும்போது நீ எந்த மூலைக்கு? இதனால் பாதுகை மூலம் உனக்கு நாம் காட்டித் தந்த பொருளை நாம் ஏற்கவில்லை என்று கலங்கிடாதே. ஸ்வாமி தேசிகன் வர்ணித்த மா மரம் போலே இரு!'' என்று தேவப் பெருமாள் உணர்த்தியது போல இருந்தது.

பிறகு இந்த வர்ஷம் திருக்குடந்தை, நாச்சியார் கோயில், திருவிண்ணகர் என்ற திவ்ய தேசங்களிலும் ஸ்வாமி தேசிகனுடைய அவதார - உத்ஸவங்களில் ஸ்வாமி தேசிகனை ஸேவித்திடும் பேறு கிட்டியது.

இப்படி ஐந்து திவ்ய தேசங்களில் ஸ்வாமி தேசிகனுடைய ஸேவை கிடைத்தது. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் ஆறாவது இடமாக ஸ்வாமி தேசிகன் காவிரிக்கரையில் தங்கி அபீதி ஸ்தவம் அருளிய திவ்யதேசமான ஸத்யாகாலத்தில் ஐப்பசித் திருவோணத்தை ஒட்டி விடுமுறை தினத்தில் நடைபெறும் அவப்ருத மஹோத்ஸவத்தையும் ஸேவித்து, நின்ற திருக்கோலத்தில்

அங்கே திகழும் ஸ்வாமி தேசிகனுடனும் ஸ்ரீபரமஹம்ஸ பரகால ஸ்வாமியுடனும் காவிரியில் துலா மாதத்தில் அவப்ருத ஸ்நாநம் செய்யும் பாக்யமும் கிட்டியது.

இப்படித் தூப்புலில் அம்மாள் கோஷ்டி மஹோத்ஸவ ஸேவையுடன் தொடங்கி இந்த ஆண்டு ஆறு தேசிக திவ்ய ஸேவைகள் கிடைத்தன.

இவ்வாறு இந்த ஒரே ஆண்டில் தூப்புலில் அம்மாள் காலக்ஷேப கோஷ்டி மஹோத்ஸவத்தில் தொடங்கி அம்மாளின் அருளிச் செயலான ஶ்ருதப்ரகாஶிகையைப் பாதுகாத்து ஸத்யாகாலம் கொண்டு வந்து நின்றகோலத்திலே காட்சி தரும் ஸ்வாமி தேசிகனுடைய அவப்ருத மஹோத்ஸவம் வரை ஆறு தேசிக திவ்யோத்ஸவங்களில் ஸேவை கிடைத்தது.

இங்கு சொல்ல வேண்டிய இன்னொரு விஷயமும் உண்டு.

|| ஸ்ரீ: ||

*ஸ்ரீமதே ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேஶிகாய நம:*

# “நாச்சியார் திருமொழி”

*(ஸ்ரீ.K. பட்டாபிராமன் - க்ரோம்பேட்டை)*

*(ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் உபந்யாஸத்தில் கேட்டவை.)*

**கோபஸ்த்ரீகள் மார்கழி மாதத்திலே நோன்பு நோற்றாப்போல ஸ்ரீ ஆண்டாள் 30 நாள் நோன்பு நோற்றாள். கடைசி பாசுரம் சொன்னாள். பெருமாள் ஸேவை ஸாதிச்சார். ஆச்சர்யமாக பரஜ்ஞான ஸ்தானத்திலே ஸேவை. பெருமாள் மறைஞ்சு போயிட்டார். தை மாதம் வந்தது. அந்த பெருமாளே அடையனும்னு ஆசைப்பட்டா. என்ன உபாயம்னா. மன்மதனை பூஜை பண்ணா அடையலாம்னு இருக்கு. மன்மதன் பெரிய வில்லாளி லோகத்திலே இருக்கிற வில்லாளிகள் அம்பினாலே அடித்து ஒன்றை இரண்டா பிளப்பாளாம். இந்த மன்மதன் மாத்திரம் இரண்டை ஒன்னா சேர்க்கிறானாம். இவன் பாணத்தை போட்டா பிளக்காது. இரண்டு தூர தேசத்திலே இருக்கிறது ஒண்ணா சேர்ந்திடுமாம். அதனாலே மன்மதனை உபாஸிக்கிறேன்னா. த்ரிவிக்ரமாவதாரம் பண்ண பெருமாள் என்னை பாணிக்ரஹணம் பண்ணிக்கனும். அது மாதிரி பண்ணி வை. உன்னை நான் உபாஸிக்கிறேன். 10 பாட்டு பாடினாள். வரக்காணோம் பெருமாள். ரொம்ப ஸ்ரமப்பட்டாள் - தோழி வரலையேன்னா - பெருமாள் பரம காருணிகர். வருவார்னா - ரொம்ப க்லேசத்தாலே சிற்றில் எழுதி பொழுது போக்கறது வெளுப்பான மணல் வைச்சுண்டு, மாவு வைத்துண்டு கோலம் போடறது. புள்ளி கோலம் போடறது.**

**அப்படி போடச்ச பின்னாடியே கண்ணன் அழிச்சுண்டு வரானாம். குழந்தையா அழிச்சுண்டு வரானாம் ஆச்சரியமா, திவ்ய ரூபத்தோடே, மேகஸ்யாமள ரூபமா மேகக்குட்டி வந்து நடக்கறாப்போல கோலத்தை அழிச்சுண்டு வரானாம். கோலத்தை போட்டு முடிச்சுட்டு படிகட்டிலே ஏறி அந்த**

கோலத்தை பார்க்கனும்னு நிமிர்ந்தா கண்ணன் இருந்தான். ஏண்டா இந்த மாதிரி அநியாயம் பண்றயடா. நான் இட்ட கோலத்தை அழிக்கிறயே நியாயமா இது. ஸஹஸ்ர நாமத்தாலே ஸ்தோத்ரம் பண்ணப்படுகிற நாராயணா, உன்னைப் போய் விவாகம் பண்ணிக்கனும்னு யோசிச்சுண்டு இருக்கேன்டா. நன்னா இருக்கான்னு பார்த்து திருப்தி அடையறதுக்குள்ளே அழிச்சுட்டயே. இப்படி இரக்கமில்லாம போட்ட கோலத்தை அழிச்சயே - நாங்கள் எப்படி போட்டோம்னு தெரியலையா. முதுகு நோவ இருந்து போட்டு கண்ணால் பார்த்து நாங்கள் சந்தோஷப் படறதுக்குள்ள அழிச்சுட்டயேடா. அதனால் உன்னை சொல்லி என்ன பிரயோஜனம். ஒரு பிரயோஜனமும் இல்லே. உன் சுபாவம் அது. அன்று பாலகனாகி ஆலிலைமேல் துயின்ற எம்மாதியாய்! என்று முன் தனக்கெங்கள்மேல் இரக்கமெழாத தெம்பாவமே'' நீ ச்ருஷ்டிச்சு இந்த ப்ரபஞ்சங்கள் எல்லாம் ஆச்சர்யமா, பிள்ளே, குட்டி, பேரன்குட்டின்னு ஒன்னுக்கு நாலா வளர்ந்து பிரம்மாண்ட ஸம்ஸாரத்தை ஒருநாள் எல்லாத்தையும் அழிச்சுட்டு ஆலிலேயில் படுத்துண்டவன் தானே நீ - ப்ரபஞ்சத்தை அழிச்சவனுக்கு கோலத்தை அழிக்கிறது என்ன பிரமாதம் - எங்கள் மேல் இரக்கமில்லாதது எங்கள் பாபமே. பாலகிருஷ்ணன் ஸேவை ஸாதிச்சார். உடனே மறைஞ்சு போயிட்டார். என்னம்மா மறைஞ்சு போயிட்டார் - ஒரே த்யானம் த்யானத்திலே தன்னை கோபியா நினைச்சுண்டா - மார்கழி நீராட்டத்துக்காக யமுனேயிலே இறங்கறதா நினைச்சுண்டா. அநேக ஸ்த்ரீகளோட இறங்கறதா நினைச்சுண்டா - கிருஷ்ணன் வந்து கோபிகளுடைய வஸ்திரத்தையெல்லாம் எடுத்துண்டு புங்கை மரத்தில் ஏறின்டதாத்யானம் வந்தது. த்யானம் பண்றா. த்யானத்தாலே பாசுரம் பாடறா. கிருஷ்ணா அந்த புடவையை கொடு. கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் போந்தோம் - வஸ்திரத்தையாவது கொடுடா அப்பா! சூர்யோதயத்திற்கு முன்னாடி ஸ்நானம் பண்ணனும்னு சாஸ்திரத்திற்காக வந்தோம். நாழியாச்சு - தேவி பூஜை பண்ணிட்டு ஊருக்கு போகனும். சூர்யன் கிளம்பிட்டான். ச்ருங்கார பாவம். பத்து பாசுரத்தையும் பாடினு. ச்ருங்கார பாவம் போனால், இந்த

பத்து பாட்டும் பெருமாளை ப்ராத்திக்கிறதான க்ரமம். ஆண்டாள் கேட்ட உடனே இன்னும் இரண்டு கிளை உசரக்க ஏறிண்டு உட்கார்ந்தாராம். குரக்கரசு ஆவதறிந்தோம் குருந்திடைக் கூறை பணியாய் பூர்வாவதாரத்திலே குரங்குகளோட ஸக்யம் பண்ணி கரையேற தெரிந்திருக்கிறாய் என்பதை அறிந்தோம் - இன்னொரு கோபஸ்தீரி கேட்கிறாளாம் - நீ இவ்வளவு தூரம் கேட்கிறே - புடவையை தரமாட்டேங்கறானே - ஒரு காரியம் சொல்றேன். அது மாதிரி கேள் - உடனே கொடுத்துடுவான். கஜேந்திரன்னு யானை ஒண்ணு கதறித்து - முதலை காலை பிடிச்சு இழுக்கிறதுன்னா ஓடி வந்தான் வைகுண்டத்திலேயிருந்து. லக்ஷ்மி கிட்ட சொல்லாத, விஷ்வக்சேனர்கிட்ட சொல்லாத, கருடனுக்கு அலங்காரம் பண்ணாம, மடுக்கரையில் வந்து குதித்தான். ஒரு நீர் புழு கடிக்கிறதென்றால் ஓடி வருவான்.

அது மாதிரி பாட்டு சொல்லு. வருவான்னா. எத்தனை சொல்லி வரானான்னா. ரொம்ப கஷ்டமா போச்சு. தோழியை கூப்பிட்டாளாம். தோழி என்ன இது மாதிரி இருக்கே தகப்பனாரும் உபேக்ஷிக்கிறார் - பெருமாள் ஸேவை ஸாதிப்பாரா மாட்டாரான்னா. பேஷா ஸாதிப்பார் - நிச்சயமா - சகுனம் பார்ப்போம்னா. திருமாலிருஞ்சோலையில் இருக்காரே அழகர் - சுந்தரபாகுன்னு பேரு. ஞானமுள்ள மஹான்களாலே ஸேவிக்கத் தகுந்த அந்த பரமாத்மா அவருடைய திருவடியை பிடிக்கும் பாக்யம் வருமான்னு பார்க்கிறேன். சேர்த்து வைச்சு பார்த்தா - சேர்ந்திருக்கு இரட்டை புள்ளியா இருக்கே. சகுனம் ஆச்சே அப்படின்னு தோழியை பார்த்து சொல்றா - சரி இன்னொரு தரம் பார்ப்போமா திருவேங்கடத்திலும், திருக்கண்ணபுரத்திலும் இருக்கும் பெருமாள் சேர்த்தி கிடைக்குமா. மறுபடியும் சேர்ந்தது. எத்தனை தடவை பார்த்தாலும் நல்ல சகுனமாவே ஆறது. நிச்சயம் அவன் கிடைப்பான் பத்து பாசுரத்தாலே நல்ல சகுனம் ஆச்சு.

தோட்டத்துக்கு போனா. பகவான் இல்லையேன்னு. ஶ்ரமப்பட்டு தான் வளர்த்த குயில் இருந்தது. அந்தக் குயிலை பார்த்து பெருமாள் வரும்படியா நீ கூப்பிடேன்னா -

மாமணிவண்ணன் மணிமுடிமைந்தன் தன்னை -

*குயில் பத்துன்னு பத்துபாட்டு - பெரிய தமிழர்கள், இலக்கணம் தெரிந்த தமிழர்கள் எல்லாம் இந்த ஆண்டாள் குயில் பத்துபோல் கிடையாதுன்றா. சங்கு, சக்கரம் ஏந்தியவனுமாயும், கதாஹஸ்தனுமான அந்த பரமாத்மாவை வரும்படியா கூவேன். ரொம்ப தர்மத்தை அடைவாய்னு சொல்லி குயில் பத்துன்னு குயிலை பார்த்து 10 பாட்டு பாடி பெருமாள் வரும்படியா கூவுன்றாள் - குயில் கூவித்துன்னா பெருமாள் வரானான்னா.*

*தோழியை கூப்பிட்டா. போய் படுத்துண்டுட்டா - பின் மாலை 3 1/2 மணிக்கு தூக்கம் வந்தது ஆண்டாளுக்கு. அரைமணில கண்முழிச்சு போச்சு. தோழியை பார்த்து கூப்பிட்டா. அம்மா தோழி ஒரு ஆச்சர்யம். ஒரு சொப்பனம் கண்டேன்னா என்ன சொப்பனம். கிருஷ்ணன் வந்து கல்யாணம் பண்ணிக்கிறதா ஸ்ரீ வில்லிபுத்தூரிலே. அப்படியான்னா. ஆயிரம் யானை வந்திருக்கு. நந்தகோபன் வந்திருக்கான். யசோதை வந்திருக்கா. கண்ணன் வந்திருக்கான். சாஸ்திரோக்தமான வைதீக விவாஹம் பண்றாப்போல சொப்பனம் கண்டேன். பிம்மாலை 4 மணிக்கு கண்டேன். பிம்மாலை சொப்பனம் பலிக்கும்னு சொல்றா. உடனே எழுந்து உட்கார்ந்துண்டு ஆசமனம் பண்ணிட்டு மூஞ்சியை துடைச்சுண்டா - நல்ல சொப்பனம் கண்டா மறுபடியும் தூங்கிட்டா பலிக்காது. இந்த யுகத்திலே இரண்டு பேருக்குத்தான் சொப்பனம் பலித்திருக்கிறது. அது ஸ்த்ரீகளுக்குத்தான் - த்ரிஜடைக்கு ஒண்ணு, ஆண்டாளுக்கு ஒண்ணு - நாமெல்லாம் நித்யம் சொப்பனம் காண்றோம் - ஒண்ணும் காணோம் - வாரணமாயிரம் சூழவலஞ்செய்து நாரணநம்பி நடக்கின்றானென்றெதிர் அப்படியானது ஆச்சர்யமான சொப்பனத்தை பார்த்தேன்னா. ஆயிரம் யானை வந்திருக்குன்னா. நந்தகோபன் வந்தாங்கற, யானைங்கறயேன்னா - வசுதேவன் குமாரரோல்லியோ - நந்த கோகுலத்துக்கு ஸ்வீகாரம் - தத்துக் கொண்டாள் கொலோ? தானே பெற்றாள் கொலோ? ஸ்வீகார பிள்ளைக்கு இந்த இடத்திலே சொத்து, பிறந்தகத்துக்கு போனா அங்கே*

இருக்கிற ஈயப்பானையையும் எடுத்துண்டு வருவா. பொரி ஹோமம் எல்லாம் பண்றா. ஆச்சர்யமான கல்யாணம்னா. உடனே குளிக்கப்போனா - வஸ்திரத்தை எல்லாம் உடுத்திண்டா. பெரியாழ்வார் ஆராதனம் பண்ணிட்டு உட்கார்ந்திருக்கிறார் சங்க சக்கரத்தோடே பெருமாள் நிற்கிறார். கையிலே இருக்கிற சங்கத்தை பார்த்தவுடனே கோபம் வந்தது. சங்கத்தை பார்த்து கேட்கிறாள். ''கருப்பூரம் நாறுமோ? கமலப் பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ? மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கே

சங்கே உன் வாழ்க்கையின் பாக்யம் பெருமாளை விட்டு பிரியாமே இருக்கிறயே. அந்த பேறு எங்களுக்கு கொடுக்கக் கூடாதா - உன்னை பார்கறச்சே எனக்கு அசூயை வரது. ஆண்டாள் சொல்றாள். உன்னுடைய பாக்யம்தான் பாக்யம். உன்னைப்போல அதிர்ஷ்டம் பண்ணவாள் யாரு. உன்னைப்போல பாக்யம் பண்ணவாள் லோகத்திலே கிடையாது. லோகத்திலே நல்ல ஆகாரம், நல்ல தூக்கம் இதுதான் மனிதனுக்கு சுகம் - உன்னைப் போல வேறொருத்தருக்கு நல்ல ஆகாரம், நல்ல சுகம் இல்லை. தூங்கற இடமும் உன்னைப்போல ஒருத்தருக்கும் அமையலை. பண் பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே! இந்த பத்து பாட்டு போறும் ஆண்டாளுக்கு - பெருமாள் உன்னை வாயிலே வைச்சுண்டு வாசிக்கிறாரே, கற்பூர வாசனை இருக்கா, தாமரைப்பூ வாசனை இருக்கா, தாமரைப் பூ வாசனை பெருமாள் முகத்திலே இருக்குன்னு உனக்கு எப்படி தெரிஞ்சுது. நான் சீதையா இருந்தேன். இப்ப ஆண்டாளா இருக்கேன். சீதையா இருக்கச்ச ஆஞ்சநேயரை கேட்டேன். முன்னே போல இருக்காரா, இளைத்து இருக்காரா. கண் அழகா இருக்குமே. தாமரை புஷ்பத்தினுடைய வாசனை வருமே முகத்திலே. அது நான் இருக்கச்ச இருந்ததே. நான் பிரிஞ்சப்புறம் இருக்கா. உடம்பெல்லாம் உலர்ந்து போயிருக்குமே. அந்த வாசனை இருக்கான்னு கேட்டா. அவளேதான் ஆண்டாளா வந்திருக்கிறதனாலே கருப்பூரம்

நாறுமோ கமலப்பூ நாறுமோ ன்னு ஆசையோடே கேட்கிறேன்.

அசூயையோட கேட்கலை. உப்பு சமுத்திரத்திலே பிறந்துட்டு பெருமாள் கையிலே, அமிர்தத்தை சாப்பிடறதான பாக்யம் இருக்கே என்ன அதிர்ஷ்டம் பார். சாப்பிடறது பெருமாள்வாய் அமிர்தம். படுத்துண்டு இருக்கிறது பெருமாள் கைத்தலத்தில் - பெருமாள் கையை விட்டு போகாமலே கார்யத்தை ஸாதிக்கிறதான பாஞ்சஜன்யத்துக்கு பிரிவே கிடையாது. பெருமாளிடத்திலிருந்து இப்படி தோழியோட வாசல்ல வந்தா - மழை வரும் போல மேகமா இருந்தது. வடக்கு பார்த்து மேகம் போயிண்டு இருக்கு. ஏ மேகமேன்னு கூப்பிட்டா - மேகவிடு தூதுன்னு பத்துபாட்டு. அபூர்வமான பாட்டு - திருவேங்கட மலையிலே பெருமாள் சிவந்த கண்ணோட இருக்காறே, அவர் திருவடியின் கீழே இந்த லெட்டரை கொண்டு கொடு வேங்கடத்துச் செங்கண்மால் சேவடிக் கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம் - வாத்ஸல்யத்தாலே சிவந்திருக்கும் கருணையாலே கண் சிவந்திருக்கும், பெரிய பிராட்டியார் கலவியாலே சிவந்திருக்கும், ஸதா திரவ்யத்தையே நோக்கிக் கொண்டிருப்பதாலே சிவந்திருக்கும். ஒரு விண்ணப்பம் சொல்லு - என்ன - நான் மார்பிலே சாத்திண்டு இருக்கிறதான சந்தனப் பூவெல்லாம் அழியும்படியா, வந்து ஒருநாள் என் மார்பிலே தங்கினால் என் ஆத்மா நிக்கும். இல்லைன்னா உசிர் போகும்னு சொல்லு அவங்கிட்ட. மேகம் கேட்டுதாம். ஒரு நாள் வந்தா போதுமா. போகிற உயிரை மீட்கச் செய்து, தங்க செய்வதற்கு ஒரு நாள் என்றோம். வந்த பிறகு பார்த்துக் கொள்வோம் என்றாள். அபூர்வமான பாசுரம். அவன்கிட்டேந்து வார்த்தை வந்து சொல். திருமாலிருந்ஞ்சோலை பெருமாளை பிரார்த்தித்தாள். நீ வந்து ஸேவை ஸாதிக்கக் கூடாதா - ஸௌந்தர்யத்தை நினைச்சா பரத்வத்தை நினைச்சா அவரும் ஸேவை ஸாதிக்கலை. தோட்டத்துக்கு போனா - மரங்கள் எல்லாம் புஷ்பிக்கிறது. விஶ்லேஷத்திலே உள்ளவாளுக்கெல்லாம் ஆயுதம் எடுத்துண்டு அடிக்க வராப்போல இருக்குமாம் - கார்கோடற்பூக்காள் உங்களை மிலிடெரி ட்ரஸ் போட்டு அனுப்பிச்சுருக்கான் அவன் எங்கே இருக்கான்னு சொல்லு - அப்படி கேட்க ஆரம்பிச்சுட்டா. உடனே ரங்கநாதனை பாடினா

- என்னை கண்ணன் இருக்கிற இடத்திலே கொண்டுபோய் விட்டுடுங்கோ. மதுரா நகரத்திலே கொண்டு விடுங்கோ, நந்த கோகுலத்திலே கொண்டு விடுங்கோ, கோவர்தன மலையிடத்திலே கொண்டு விடுங்கோ. இனி தரிக்காதுன்னு சொன்னாள். உடனே தோழியானவள் பேசறாள் - என்னம்மா அப்படி சொல்றே - கிருஷ்ணனை எங்கேயாவது ஆசைப்படலாமான்னாளாம் - ஏன் ஆசைப்பட்டா என்ன கண்ணனென்னுங் கருந்தெய்வம் - அந்த கண்ணனுடைய அறையிலே இருக்கிற பீதாம்பரத்தை கொண்டு என்னை வீசுங்கோ என் ஆத்மாவானது நிக்காது - அவரையே நினைச்சு ஆசைப்பட்டு வருந்துகிறேன் - அவனோ நம்மை நினைக்கலை. பெண்ணின் வருத்தமறியாத பெருமான் - முப்பத்துச்சில்லரை அவதாரங்கள் பண்ணினவன் ஒரு பெண்ணாய் பிறந்தானாகில் பெண்ணின் வருத்தம் அறிவான் - ஆண்டாள் பெருமாளுக்கு பேர் வைக்கச்ச நன்னா இருக்கும். மாலாய் பிறந்த நம்பி, மாலே செய்யும் மணாளன், ஏலாப்பொய்கள் உரைப்பான், கருந்தெய்வம், புறம்போல உள்ளும் கரியாய், வெளியில் கருப்பாட்டம் உள்ளேயும் கருப்புடா அவன். அவனைப்பற்றி ஒண்ணும் சொல்லாதே. உடனே தோழி சொன்னா. எங்கேயாவது கண்ணனை ஆசைப்படுவாளா யார் கிட்டேயாவது பெரியவாளை கேட்டயா. அவனுக்கு என்ன இருக்கு. கட்டிலாவது நன்னா இருக்க வேண்டாமா.

நாகே சய:- பாம்பிலே படுத்துண்டு இருக்கான். போகச்ச சீறும் - வாகனமாவது நன்னா இருக்கா - பக்ஷி ரத:- பக்ஷியை போய் வாகனமா வைச்சுண்டு இருக்கான் - அமுங்கி உட்கார்ந்தா கீழே உட்காரும் - மேலாப்போல உட்கார்ந்துண்டா ஓடிப்போயிடும் ரொம்ப கஷ்டம் அது. இரண்டுபேர் உட்கார இடம் இருக்கா தாராளமா கிடையாது. அவனைப் போய் ஆசைப்படறயேன்னா. என்னம்மா என் தலையெழுத்து இருக்கட்டும். நீயா அவனை ஆசைப்படறயே. அதுதான் தப்பு - ஜாதகம் கேட்டயா - புருஷ: புராண: அவனைப் போய் ஆசைப்படறயேன்னா - உடனே தோழியை பார்த்து கோபம் வந்துடுத்து. என்ன இது மாதிரி எல்லாம் சொல்லாதே அம்மா நீ - வேலால் குத்தராப்போல பேசாதே ‘‘கோலால் நிரைமேய்த்தாயனாய் அந்த ஶ்ரமம் தீருவதற்காக

திருக்குடந்தையிலே, உபய காவேரி மத்தியிலே சாய்ந்து கிடக்கிறான். அந்த பரமாத்மா - அவனுடையதான சாத்திண்ட திருத்துழாய் கொண்டு சூட்டீரே - ஆராவமுதனதான திருத்துழாயை கொண்டு வா - அது இல்லைன்னா அந்த ஆராமுதன் குழல் ஊதுகிறதான காலத்திலே அவனுடைய திருப்பவளத்திலேந்து வந்ததான அமுத தீர்த்தத்தையாவது கொண்டு குளிர்முகத்துத் தடவீரே. ரொம்ப க்லேசப்பட்டாள். உடனே தோழியை பார்த்தா. மூர்ச்சையா படுத்துண்டாப்போல இருந்தா. அந்தண்டை போயிட்டாள். எழுந்துண்டு வந்து பார்த்தா ரொம்ப சந்தோஷமா இருந்தா. என்னமா சந்தோஷமா இருக்கே. பெருமாளே பார்த்துட்டயோன்னு கேட்டா. விருந்தாவனத்திலே பார்த்தேன் அம்மா. அவன் பீதகவாடையுடை தாழ மேகக்குட்டி வராப்போல நடந்து வந்தான்.

ஸாக்ஷாத்காரத்திலே பிருந்தாவனத்திலே மாடு மேய்கிற அவசரத்திலே காட்சி கொடுத்தான்னா - அந்த காட்சியை பார்த்து ஆனந்தம் அநுபவித்தாள். அதே சந்தோஷத்திலே இருந்தா. திடீர்னு மறைஞ்சு போயிட்டானாம் - பரஜ்ஞானம் வந்த உடனே ரொம்ப கஷ்டம் - அப்பா பெருமாளே இனிமே விவாஹம் பண்ணிக் கொள்ளாவிட்டா ஆத்மாவானது நிற்காது - என்ன பண்ணச் சொல்றேன்னா - கிருஷ்ணாவதாரம் எல்லாம் மானஸ அநுபவம் உனக்கு, நடக்கிறதை பாசுரமா பாடினே - அந்த அவதாரம் முடிஞ்சு போச்சு - அந்த சமயத்திலே நாம் பிறக்கலே - பகவானே தவிர வேற வேண்டாம்னு சொல்றேன் - என்ன பண்றதுன்னா - அர்ச்சாவதாரமானது ஆசைப்படு - 107 திவ்ய தேசங்களிலே பெருமாளது நித்ய வாஸம் பண்ணுகிறார் - எல்லா பெருமாளும் ரொம்ப அழகா இருப்பா - அந்தப் பெருமாளேயாவது ஆசைப்பட்டு விவாஹம் பண்ணிக்கோ அப்படின்னாராம் - மூணு அத்யாயம் சொல்றார் பெரியாழ்வார். ஒவ்வொன்னா சொல்றேன் கேளுன்னு சொல்லிண்டு வரார் - ரொம்ப ஆச்சர்யமான பெருமாள் - ஆழ்வார்கள் ஆசைப்பட்டா உங்க அண்ணாவுக்கு ரொம்ப இஷ்டமான பெருமாள் - அப்பேர்பட்ட ஆச்சர்யமான வ்யக்தி - ஸ்ரீரங்கம் பெருமாள். தேவலையான்னா. உடனே ஆண்டாள்

*சொன்னா - எல்லாமே தேவலை - 108 தேசங்களிலேயும் பிரகாசிச்சுண்டு ஆச்சர்யமா இருக்கான். நீ சொன்ன உடனே எனக்கு 108 பெருமாளேயும் கல்யாணம் பண்ணின்டா தேவலே போல இருக்கு. இதுக்கு என்ன பண்ணனும்னா.*

*அதுக்கு ஒரு உபாயம் சொல்றேன் கேளு - ஒருத்தனை பண்ணின்டுட்டா எல்லாரையும் கல்யாணம் பண்ணின்டதா ஆயிடும்னா - யாரை - ஸ்ரீரங்கம் தான் ராஜதானியாம் - மற்ற 107 திருப்பதிகளிலேயும் இருக்கிறது பார்க்காம் - சாயங்கால வேளேயிலேயும், மத்தியான வேளேயிலேயும் உட்கார்ந்து போற இடமாம். ரங்கநாதனே கல்யாணம் பண்ணின்டா எல்லா மூர்த்தியையும் கல்யாணம் பண்ணின்டதா ஆயிடும். தேவலையே அம்மான்னா. ரொம்ப அழகு.* கன்யா வரயதே ரூபம் - குழலழகர் வாயழகர் கண்ணழகர் - கொப்பூழில் எழகமலப்பூவழக ரெம்மானார் - *ஸர்வாங்க சுந்தரரான பெருமாள் - அந்த பெருமாளே தேவலைன்னா - உபய விபூதியும் அவனே சேர்ந்தது - ஊர் எப்படி இருக்கிறது - சேர்ந்தாற்போல மாடி இருக்கிறதான ஊர் - நல்லார்கள் வாழும் ஊர். நல்லார்னா யார். அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு பரமபதத்துக்கு பெருமாள் கூப்பிட்டுட்டா என்ன பண்றதுன்னு நித்யம் பயமாம் ஸ்ரீரங்கத்திலே இருக்கிறவாளுக்கு. தேவிகளே அழைச்சுண்டு, பெண்ணேயும் அழைச்சுண்டு போனார். ஸ்ரீரங்கத்திலே போய் இறங்கினார் - ஸப்த ப்ராகாரம் தாண்டி ப்ரதக்ஷிணம் பண்ணி திருமண தூண்கிட்ட நிறுத்தினார் பெண்ணே - பெருமாள் பக்கத்திலே தேவிகள் நிற்கிறா. கண்ணும் கண்ணீருமா பாடறார் - கண்ணை திறந்தார் - அப்பா இந்த பெண்ணே அங்கீகரிப்பயான்னார். பெண்ணேப் பார்த்தா பெண்ணே காணோம். நீர் ஆசைப்பட்டபடியே என் திருமேனியிலே ஐக்கியம் ஆயிட்டாப்பா. ஒண்ணும் பயமில்லை. போன்னாராம்.*

**ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்.**

*ஒரே பெண்ணு ஸ்வாமி. லக்ஷ்மியை வளர்க்கராப்போல*

வளர்த்தேன். நான் என்னமோ நினைச்சேன் - பெரிய கல்யாணம் - அஞ்சு நாள் கல்யாணம் - பாட்டு கச்சேரியெல்லாம் வைச்சு, உபன்யாசம் எல்லாம் வைச்சு வாக்யாக்யார்த்தங்கள் எல்லாம் வைச்சு அப்படி அஞ்சுநாள் கல்யாணம் பண்ணி, ஒரு பெண் வைச்சுண்டு இருக்கிறதாலே, மாப்பிள்ளையையும் ஆத்தோட வைச்சுப்போம்னு நினைச்சுண்டு இருந்தேன் அப்படின்னாராம். சரி கண்ணை மூடிக்கோம். ஆண்டாளை தரேன். ஊருக்கு போ. நான் வந்து கல்யாணம் பண்ணிக்கிறேன்னுட்டாராம். கண்ணை மூடிண்டு, பார்த்தாராம் - ஆண்டாள் நிற்கிறாளாம். அதே மாதிரி ஊருக்கு வந்தார் - ஸ்ரீரங்கத்திலேந்து பெருமாள் புறப்பட்டு வராராம் - நினைச்சா கருடன் வந்துட்டார் - மேலே ஏறினார் - நித்ய சூரிகள் எல்லாம் வாருங்கோ ஸ்ரீவில்லிபுத்தூருக்குன்னா. ஸ்ரீவில்லிபுத்தூரில் போய் இறங்கினாராம் ஆச்சர்யமா பெருமாள். மற்ற 9 ஆழ்வார்களும் வந்திருக்காளாம். நீங்க எங்க வந்தீங்கன்னா எங்க 10 பேருக்குமா இவ ஒரு பெண். பெண் கல்யாணத்துக்கு வந்திருக்கிறோம். விவாஹமானது நடந்துதாம் ஆண்டாளுக்கு - ரொம்ப ஆச்சரியமா நடந்ததாம் - பிராம்மணாள் பண்ற விவாஹம் மாதிரி கல்யாணமானது நடந்ததாம். நாத்தனார் பார்வதி வந்தாளாம். கூரைப்புடவை ஓதியிட்டாளாம் - புடவை உடுத்தி விட்டாளாம். பெரியாழ்வார் கன்னிகாதானம் பண்ணார். பெரியாழ்வார் மடியிலே ஆண்டாள் அமர்ந்திருந்தாள் - ரங்கநாதன் திருமாங்கல்யதாரணம் பண்றார் - அதற்கு முன்னாடி பெண்ணுடைய சிரஸிலே நுகத்தடியை வைத்து, அதிலே திருமங்கல்யத்தை வைத்து, நால் திசைத் தீர்த்தங் கொணர்ந்து சேர்க்கணும். அப்படி ரங்கநாதன் மாங்கல்யதாரணம் பண்ணாராம் - ரங்கநாதனோட ஸேவை ஸாதிக்கிறாள் ஆண்டாள்.

இம்மைக்குமேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மிமிதிக்க கனாக்கண்டேன் தோழீ நான் - அம்மி மிதிக்கன்னு பாசுரம் போட்டிருக்கிறாள் - அம்மி

*மிதிக்கறதுன்னு ஒரு பிரகரணம் லாஜ ஹோமம்னு பொரி ஹோமம் பண்றது. பொரி ஹோமம் பண்ணச்ச 3 தடவை அக்னியை ப்ரதக்ஷிணமா வரணும். ப்ரதக்ஷிணமா வரச்ச அந்த பெண்ணினுடைய காலே பிடிச்சு நகத்திண்டு வரணும் 7 அடி. ஸப்தபதின்னு பேரு. அந்த ஸப்தபதி நடந்தாதான் கல்யாணம் பூர்த்தியாரதுன்னு Hindu Law விலேயே இருக்கு. ரங்கநாதர் காலே பிடிக்க போகச்ச ஸ்ரீரங்கத்துக்காரா ஒண்ணும் வேண்டாம்னா. இது ஸாமான்ய கல்யாணத்திலே - ரங்க மன்னார் கல்யாணத்திலே இது எதுக்கு - ஸர்வலோகேஶ்வரன் - 10 ஆழ்வார் பாடின பெருமாள் இவருக்கு உதவாது - ஸ்ரீ வில்லிபுத்தூர் காரா, தொட்டுத்தான் ஆகணும் - எங்க ஆண்டாளேப் போல உண்டா - சாஸ்திரம் சொல்றதை செய்துதான் ஆகணும்னா - கையிலே பவித்ரம் போட்டுண்டு இருக்கார் - அது அசுத்தியா போயிடும் காலே தொட்டாக்க அப்படின்னாளாம். உடனே ஸ்ரீவில்லிபுத்தூர்காரா. இடது கையால தொட்டு வைக்கட்டும்னா. ஸ்ரீவில்லிபுத்தூர்காரா சண்டைக்கு வந்தா லேசுல விடமாட்டா தர்ம சாஸ்திர புஸ்தகங்களே எல்லாம் பெரியாழ்வார் எடுத்துண்டு வந்தாராம். ரங்க மன்னார் ஜாடை காண்பித்தாராம். நான் காலே தொட்டு நகத்தறேன், நடந்து வந்துடறயான்னா - சரின்னாளாம் ரங்கநாதர் திருவடியை தொட்டார். உடனே ஆண்டாள் விறுவிறுன்னு நகத்திண்டு வந்து அம்மியிலே கொண்டு வைச்சாளாம். அந்த அம்மி என்ன ஆச்சுன்னா தேசிகன் - அந்த அம்மி உபநிஷத்துக்கு மேல உசந்து போச்சாம் - பெரியாழ்வார் ஆத்து அம்மி - துகையல் அரைக்கிற அம்மி;*

*ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஒரு திருமேனியோட, ஆண்டாளோட ரங்கமன்னார், பெரிய திருவடியோட ஸாஹித்யம் கொடுத்துண்டு ஸமான போகத்தை கொடுத்துண்டு ஆச்சர்யமா கோதாஸமேதனாக ரங்கநாதன் ஏள்ளியிருக்கிறார்.*

*ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே ஶரணம்*

—*—

॥ श्रीः ॥

# கலி தர்ம நிருபணம்

(வடுவூர் வீரவல்லி கனபாடி ஸ்ரீ N. சடகோபாசார்யர்
மேற்கு மாம்பலம், சென்னை-33

ஸூத மஹர்ஷி, மற்ற மஹர்ஷிகளையும் பரத்வாஜரையும் அரசர் கேட்டதும், மார்கண்டேய மஹர்ஷியின் கலிதர்ம நிருபணத்தைக் கேட்டுக் கூறினர்.

மார்க்கண்டேயர் கூறினர் - பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் வைகுண்டத்திற்கு எழுந்தருளிய பிறகு ஸமஸ்த பாபங்களையும் செய்யத் தூண்டும் கோரமான கலியுகம் தோன்றும்.

ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शूद्रा धर्मपराङ्मुखाः ।
घोरे कलियुगे प्राप्ते द्विजदेवपराङ्मुखाः ॥१॥

கலியுகம் தோன்றியதும் எல்லா ஸாமாந்ய தர்மங்களும் அழிந்துவிடும். நான்கு வர்ணத்தவர்களும் தர்ம விரோதமாக நடப்பார்கள். மக்கள், ப்ராமஹ்ணர்களையும், தேவதைகளையும் இகழ்வார்கள்.

व्याजधर्मरताः सर्वे दम्भाचारपरायणाः ।
असूयानिरताश्चैव वृथाऽहङ्कारदूषिताः ॥२॥

ஏதாவதொரு வ்யாஜத்தைக் கொண்டு சுய நலத்திற்காக ஜனங்கள், தர்மத்தில் ஈடுபடுவர்கள். வேஷதாரிகளாக மாறி விடுவார்கள். ஒருவர் மற்றொருவரைப் பார்த்து அசூயைக் கொள்வர். மற்றவர்களிடம் உள்ள குற்றத்தைத் தேடுவார்கள். வீணகங்காரம் கொண்டு மற்றவர்களைத் தூற்றுவார்கள்.

सर्वैः संक्षिप्यते सत्यं नरैः पण्डितगर्वितैः ।
अहमेवाऽधिक इति सर्व एव वदन्ति वै ॥३॥

எல்லோரிடத்திலும் பாண்டித்ய கர்வம் ஏற்படும். எல்லோரும் தன்னையே, மற்றவர்களைவிடப் பெரியவன் என்று எண்ணுவார்கள்.

अधर्मलोलुपाः सर्वे तथाऽन्येषां च निन्दकाः ।
अतः स्वल्पायुषः सर्वे भविष्यन्ति कलौ युगे ॥४॥

*ஜனங்கள் யாவரும், அதர்மத்திலேயே ஈடுபடுவார்கள். மற்றவர்களேயும் நிந்தித்துக் கொண்டிருப்பார்கள். இக்காரணங்களால் ஜனங்கள் வயது மிகவும் குறைந்து விடுகிறது. கலியுகத்தில் மக்கள் அதிக வருடங்கள் வாழ மாட்டார்கள்.*

अल्पायुष्ट्वान्मनुष्याणां न विद्याग्रहणं द्विजाः ।
विद्याग्रहणशून्यत्वादधर्मो वर्तते पुनः ॥५॥

*ஆயுள் மிகவும் குறைவாக இருப்பதால் ப்ராஹ்மணர்களால் அதிக வித்யாத்யயனம் செய்ய முடியவில்லை. வித்யாத்யயனம் இல்லாததால் மறுபடியும் அதர்மத்தில் ஈடுபட்டு விடுவார்கள்.*

ब्राह्मणाद्यास्तथा वर्णाः संकीर्यन्ते परस्परम् ।
कामक्रोधपरा मूढा वृथा संतापपीडिताः ॥६॥

*ப்ராஹ்மணர்கள் போன்ற ஜாதிகள், மற்ற ஜாதிகளுடன் கலந்து விடுவார்கள். அவர்கள், காமத்திலும், கோபத்திலும் பீடிக்கப்பட்டு, முட்டாள்களாகி வீணன தாபத்திற்கு ஆட்பட்டு விடுவார்கள்.*

बद्धवैरा भविष्यन्ति परस्परवधेप्सवः ।
ब्राह्मणाः क्षत्रिया वैश्याः सर्वे धर्मपराङ्मुखाः ॥७॥

*ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள் மற்றும் வைச்யர்கள் மூவர்ணத்தாரும் தர்மத்தில் நாட்ட மில்லாதவர்களாக இருந்து, ஒருவர்க் கொருவர் சண்டையிட்டுக் கொண்டு கொலை செய்யக் கூட முனேந்து விடுவார்கள்.*

शूद्रतुल्या भविष्यन्ति तपः सत्यविवर्जिताः ।
उत्तमा नीचतां यान्ति नीचाश्चोत्तमतां तथा ॥८॥

எல்லோரும், தபஸ்ஸையும் மற்றும் ஸத்ய பாஷணத்தையும் விட்டுவிட்டு ஶூத்ரர்களுக்கு ஸமமாக மாறிவிடுவார்கள். உயர்ந்த மக்கள் தாழ்வானவர்களாகவும், தாழ்வானவர்கள் உயர்ந்த மக்களாகவும் ஆகிவிடுவார்கள்.

राजानो द्रव्यनिरतास्तथा लोभपरायणाः ।
धर्मकञ्चुकसंवीता धर्मविध्वंसकारिणः ॥९॥

அரசர்கள் தர்மிஷ்டர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு தர்மங்களை நாசம் செய்து விடுவார்கள். அவர்கள் பெரும் பேராசைக்காரர்களாக இருப்பார்கள். செல்வம் சேர்ப்பதிலேயே குறியாகவும் இருப்பார்கள்.

घोरे कलियुगे प्राप्ते सर्वे धर्मसमन्विते ।
यो योऽश्वरथनागाढ्यः स स राजा भविष्यति ॥१०॥

கடுமையான கலியுகம் வந்ததும் குதிரைகளையும், ரதங்களையும் மற்றும் யானைகளையும் உடையவர்கள் பெரும் செல்வந்தர்களாகக் கருதப்பட்டு அவர்கள் அரசர்களாகச் சொல்லப்படுவார்கள்.

पितॄन् पुत्रा नियोक्ष्यन्ति वध्वः श्वश्रूश्च कर्मसु ।
पतीन् पुत्रान् वञ्चयित्वा गमिष्यन्ति स्त्रियोऽन्यतः ॥११॥

புத்ரர்கள் தன் தகப்பனாரை, வேலையில் ஏவுவார்கள். மாட்டுப் பெண்டிர், மாமியாரை, வேலை வாங்குவார்கள். பெண்கள் தனது குழந்தைகளையும், கணவனையும் விட்டுவிட்டு வேறொரு ஆணுடன் சென்று விடுவார்கள்.

पुरुषाल्पं बहुस्त्रीकं श्वबाहुल्यं गवां क्षयः ।
धनानि श्लाघनीयानि सतां वृत्तमपूजितम् ॥१२॥

ஆண்கள் மிகவும் குறைந்துவிடுவார்கள். பெண்கள் அதிகமாவார்கள். எங்கும் நாய்கள் பெருத்துவிடும். பசுக்கள் குறைந்துவிடும். எல்லோருடைய மனதிலும், பணப் பேராசை குடிகொண்டு விடும். பெரியோர்களின் நற்பண்புகள் மதிக்கப்படமாட்டாது.

खण्डवर्षी च पर्जन्यः पन्थानस्तस्करावृताः ।
सर्वः सर्वं च जानाति वृद्धाननुपसेव्य च ॥१३॥

*நாட்டில் எங்கேயாவது ஒரு மூலையில் மழை பெய்யும். மற்ற இடங்களில் மழை இருக்காது. வழிகள், திருடர்களால் நிறைந்திருக்கும். குருவிடம் சென்று கல்வி பயிலாமல், எல்லோரும் தன்னை, மிகுந்த அறிவாளிகளாக நினைத்துக் கொள்வார்கள்.*

न कश्चिदकविर्नाम सुरापा ब्रह्मवादिनः ।
किङ्कराश्च भविष्यन्ति शूद्राणां च द्विजातयः ॥१४॥

*தன்னைக் கவியாக நினைக்காதவர்கள் இருக்கமாட்டார்கள். சாராயம் குடிப்பவர்கள் கூட ப்ரஹ்ம ஜ்ஞானத்தை உபதேசிப்பார்கள். ப்ராஹ்மணர்கள், ஶூத்ரர்களின் வீட்டில் வேலைக்காரர்களாக இருப்பார்கள்.*

द्विषन्ति पितरं पुत्रा गुरुं शिष्या द्विषन्ति च ।
पतिं च वनिता द्वेष्टि कलौ घोरे समागते ॥१५॥

*புத்ரர்கள், தங்களுடைய தகப்பனாரை வெறுக்கின்றனர். ஶிஷ்யர்கள், குருவை த்வேஷிக்கிறார்கள். மனைவி, கணவனை வெறுக்கிறாள். இவை யாவும் கோரமான கலியுகம் வந்ததும் நடக்கின்றன.*

लोभाभिभूतमनसः सर्वे दुष्कर्मशीलिनः ।
परान्नलोलुपा नित्यं भविष्यन्ति द्विजातयः ॥१६॥

*கலியுகத்தில் எல்லோருடைய மனதும், பேராசையால் நிறைந்திருக்கும். ப்ராஹ்மணர்கள், பிறர் வீட்டு அன்னத்தைச் சாப்பிடுவதற்கு, அலைந்து கொண்டிருப்பார்கள். எல்லோரும் கெட்ட செயல்களிலேயே ஈடுபடுவார்கள். எல்லோரும், பிறருடைய த்ரவ்யத்தை அபஹரிப்பதிலேயே பெரும் பேராசை கொண்டவர்களாக இருப்பார்கள்.*

परस्त्रीनिरताः सर्वे परद्रव्यपरायणाः ।
घोरे कलियुगे प्राप्ते नरं धर्मपरायणम् ॥

असूयानिरताः सर्वे उपहासं प्रकुर्वते ॥१७॥

*கலியுகத்தில், பிறருடைய மனைவியை, நாடுவதிலேயே குறியாக இருப்பார்கள். எல்லோரும் மற்றவர்களின் த்ரவ்யத்தைப் பிடுங்கிக் கொள்வதிலேயே நாட்டமாக இருப்பார்கள். கடுமையான கலியுகம் வந்ததும் அஸூயையினால் உந்தப்பட்டு தர்மம் செய்வர்களைக் கேலி செய்வார்கள்.*

न व्रतानि चरिष्यन्ति ब्राह्मणा वेदनिन्दकाः ।
न यक्ष्यन्ति न होष्यन्ति हेतुवादैर्विकत्सिताः ॥१८॥

*கலியுகத்தில் ப்ராஹ்மணர்கள், வ்ரதங்களை அனுஷ்டிக்க மாட்டார்கள். ப்ராஹ்மணர்களே, வேத நிந்தனை செய்வார்கள். அவர்கள் யாகம் செய்ய மாட்டார்கள். எந்தவிதமான ஹோமமும் செய்யமாட்டார்கள். தர்க்க வாதத்திற்கு ஆட்பட்டு வெறுக்கத்தக்க எண்ணங்களைக் கொண்டு, ப்ராஹ்மணர்கள், யாகங்களைச் செய்யமாட்டார்கள்.*

द्विजाः कुर्वन्ति दम्भार्थं पितृयज्ञादिकाः क्रियाः ।
न पात्रेष्वेव दानानि कुर्वन्ति च नरास्तथा ।

क्षीरोपाधिनिमित्तेन गोषु प्रीतिं प्रकुर्वते ॥१९॥

*மனிதர்கள் நற்குணங்கள் உள்ளோருக்கு தானம் செய்ய மாட்டார்கள். ப்ராஹ்மணர்கள், ஆடம்பரத்திற்காக, ஶ்ராத்தம் முதலான பித்ருகர்மாக்களைச் செய்வார்கள். தான் பால் சாப்பிடவேண்டுமென்று சுயநலத்திற்காகப் பஶுக்களிடம் அன்பு செலுத்துவார்கள்.*

बध्नन्ति च द्विजानेव धनार्थं राजकिङ्कराः ।
दानयज्ञजपादीनां विक्रीणन्ते फलं द्विजाः ॥२०॥

*அரசவேலைக்காரர்கள், ப்ராஹ்மணர்களை, பணத்திற்காக மட்டும் கட்டிப் போடுவார்கள். ப்ராஹ்மணர்களும் தங்களுடைய தானம், யாகம், மற்றும் தபஸ் ஆகியவற்றின் பலன்களை பணத்திற்காக விற்றுவிடுவார்கள்.*

प्रतिग्रहं प्रकुर्वन्ति चण्डालादेरपि द्विजाः ।
कलेः प्रथमपादेऽपि विनिन्दन्ति हरिं नराः ॥२१॥

*ப்ராஹ்மணர்கள், சண்டாளர்களிடமிருந்தும், தானத்தைப் பெறுவார்கள். கலியுகத்தின், முதல் கால் பாகத்திலேயே மக்கள் பகவானை நிந்திப்பார்கள்.*

युगान्ते च हरेर्नाम नैव कश्चित् स्मरिष्यति ।
शूद्रस्त्रीसङ्गनिरता विधवासङ्गलोलुपाः ॥२२॥

*கலியுகத்தின் கடைசி கால் பாகத்தில் மக்கள் ஒரு பொழுதும் ஒருநாளும் பகவானை ஸ்மரிக்கமாட்டார்கள். ஶூத்ர ஸ்த்ரீகளையும், விதவைகளையும் அடைய விரும்புவார்கள்.*

शूद्रान्न भोगनिरता भविष्यन्ति कलौ द्विजाः ।
न च द्विजातिशुश्रूषां न स्वधर्मप्रवर्त्तनम् ॥२३॥

*ப்ராஹ்மணர்கள், ஶூத்ரான்னத்தைச் சாப்பிடுவார்கள். ஶூத்ரர்களும் ஸந்யாஸ வேஷத்தைப் போட்டுக் கொண்டு ப்ராஹ்மணர்களுக்குத் தொண்டு செய்யமாட்டார்கள். ப்ராஹ்மணர்களும் தங்களுடைய தர்மத்தில் ஈடுபடமாட்டார்கள்.*

करिष्यन्ति तदा शूद्राः प्रव्रज्यालिङ्गिनोऽधमाः ।
सुखाय परिवीताश्च जटिला भस्मधूसराः ॥२४॥

*ஶூத்ரர்கள் ஸந்யாஸிவேஷம் போட்டு அதற்குரிய அடையாளங்களுடன் இருப்பார்கள். தன்னுடைய ஸுகத்துக்காகப் பூணூலை அணிவார்கள். ஜடையைத் தரித்துக் கொள்வார்கள். உடல் முழுவதும் சாம்பலை நிரப்பிக் கொள்வார்கள்.*

शूद्रा धर्मान् प्रवक्ष्यन्ति कूटबुद्धिविशारदाः ।
एते चाऽन्ये च बहवः पाषण्डा विप्रसत्तमाः ॥२५॥

*சூழ்ச்சியில் சிறந்த ஶூத்ரர்கள், மற்றவர்களுக்கு தர்மோபதேஶம் செய்ய ஆரம்பிப்பார்கள். ப்ராஹ்மணர்களும், பாஷண்டர்களாக இருப்பார்கள்.*

ब्राह्मणाः क्षत्रिया वैश्या भविष्यन्ति कलौ युगे ।
गीतवाद्यरता विप्रा वेदवादपराङ्मुखाः ॥२६॥

*ப்ராஹ்மணர்கள் ஸங்கீதத்திலும், வாத்யங்களிலும் ஈடுபடுவார்கள். வேதங்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள்.*

भविष्यन्ति कलौ प्राप्ते शूद्रमार्गप्रवर्तिनः ।
अल्पद्रव्या वृथालिङ्गा वृथाऽङ्कारदूषिताः ॥२७॥

*ப்ராஹ்மணர்கள், ஶூத்ரர்களின் வழியைப் பின்பற்றுவார்கள். கலியுகத்தில், குறைந்த செல்வம் படைத்தவர்கள். பெரும் செல்வந்தர்களாக வேஷம் போடுவார்கள். வீணான அலங்காரத்தைப் போட்டுக் கொள்வார்கள்.*

हर्तारो न च दातारो भविष्यन्ति कलौ युगे ।
प्रतिग्रहपरा नित्यं द्विजाः सन्मार्गशीलिनः ॥२८॥

*ஜனங்கள் கலியுகத்தில், பிறருடைய செல்வங்களைப் பறித்துக் கொள்வார்கள். ஆனால் தன்னுடைய எந்தப் பொருளையும் பிறருக்குக் கொடுக்கமாட்டார்கள்.* நல்வழியில் செல்கிற உத்தம ப்ராஹ்மணர்களும் கூட தானம் வாங்குவதற்காக அலைந்து திரிவார்கள்.

आत्मस्तुतिपराः सर्वे परनिन्दापरास्तथा ।
विश्वासहीनाः पुरुषा देववेदद्विजादिषु ॥२९॥

*கலியுகத்தில் எல்லா மக்களும், தன்னைத் தானே புகழ்ந்து கொள்வார்கள். பிறரை நிந்திப்பதிலேயே ஈடுபடுவார்கள். அவர்களுக்குத் தெய்வத்தினிடமும், வேதங்களிலும் மற்றும் ப்ராஹ்மணர்களிடமும் நம்பிக்கை இருக்காது.*

असंश्रुतोक्तिवक्तारो द्विजद्वेषरतास्तथा ।
स्वधर्मत्यागिनः सर्वे कृतघ्ना भिन्नवृत्तयः ॥३०॥

*எல்லா மக்களும், வேத வசனத்திகு விரோதகமாகவே பேசுவார்கள். ப்ராஹ்மணர்களைக் கண்டால் வெறுப்பார்கள். எல்லோரும் தன்னுடைய தர்மங்களை விட்டுவிடுவார்கள். அவர்கள் நன்றி கொன்றவர்களாகவும் இருப்பார்கள். தன்னுடைய சொந்த வேலைகளை விட்டுவிட்டு, தனக்கு ஸம்பந்தமில்லாத வேலைகளைப் பார்ப்பார்கள்.*

याचकाः पिशुनाश्चैव भविष्यन्ति कलौ युगे ।
परापवादनिरता आत्मस्तुतिपरायणाः ॥३१॥

*இந்த கோரமான கலியுகத்தில் மக்கள், பிச்சைக்காரர்களாகவும், பிறரைப் பற்றிக் கோள் சொல்பவர்களாகவும் இருப்பார்கள். எப்பொழுதும், பாபகரமான வார்த்தைகளையே பேசிக் கொண்டேயிருப்பார்கள்.*

परस्वहरणोपायचिन्तकाः सर्वदा जनाः ।
अत्याह्लादपरास्तत्र भुञ्जानाः परवेश्मनि ॥३२॥

*ஜனங்கள் இந்தக் கலியுகத்தில், பிறருடைய சொத்துக்களை, எப்படி, எந்த வழியில் அபஹரித்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பார்கள். பிறருடைய வீட்டில் சாப்பிடுவதற்கு ஸந்தர்பம் வரும் பொழுதெல்லாம் மிகவும் உத்ஸாஹமாக இருப்பார்கள்.*

तस्मिन्नेव दिने प्रायो देवतार्चनतत्पराः ।
तत्रैव निन्दानिरता भुक्त्वा चैकत्र संस्थिताः ॥३३॥

*அவர்கள் பிறருடைய க்ருஹத்திற்கு, சாப்பிட போகும்பொழுது தன்னை மிகவும், தெய்வ பக்தனுகவும், மற்றவர்கள் பார்ப்பதற்காக தெய்வ பூஜையில் ஈடுபடுவார்கள். பிறர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு அங்கேயே*

*எல்லோரும் ஒன்று சேர்ந்து யாரையாவது திட்டிக் கொண்டிருப்பார்கள்.*

द्विजाश्च क्षत्रिया वैश्याः शूद्राश्चाऽन्ये च जातयः ।
अत्यन्तकामिनश्चैव संकीर्यन्ते परस्परम् ॥३४॥

*ப்ராஹ்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் மற்றும் ஶூத்ரர்களும் ஒருவர்க்கொருவர் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, விவாஹம் முதலிய செயல்களைச் செய்து கொண்டு ஜாதிக் கலப்பில் ஈடுபட்டு விடுவார்கள்.*

*(தொடரும்)*

*''கண்ணுக்குத் தெரியாதபடியாலே மூல ப்ரக்ருதி முதலான அசேதனப் பொருட்கள் இல்லை'' என்றும் அவர் கூறுவதும் பொருந்தாது. ஆகாச - வாயு - அக்நி: ஆப: (நீர்) ப்ருதிவீ என்ற வகையில் ஶ்ருதி காட்டியபடி பஞ்சபூதங்களை ஒப்புக் கொண்ட மீமாம்ஸகர் இவற்றுக்கும் காரணமான மூல ப்ரக்ருதியை ஒப்பாதது நேரில்லை. பழம் - பூ - இலை - கிளை - வேர் முதலானவைகள் உள்ள மரத்தை ஒத்துக் கொண்டபின் - இது உண்டாகக் காரணமான விதையை ஒப்பாததுபோல் - இது நகைப்புக்கிடமாகும். இதனை யுக்திவாதமாகவும் ஏற்க முடியாது. ஆகவே அவர்கள் கூற்று பிழையே.*

***(மூலம்) ''இவற்றை இசைந்து* पञ्चविंशतितत्त्वमात्र*த்தைப் பற்றின* पक्षம் षड्विंशप्रतिपादक*ங்களான* परश्शत वाक्य*ங்களாலே* बाधितम् ।*''***

*(உரை) இவற்றை இசைந்து - ஒரே நேரத்தில் ஜகத்ஸ்ருஷ்டியையும் ப்ரளயங்களையும் ஒப்புக் கொண்டு - என்று பொருள். ஸாங்க்யர்கள் ஸ்ருஷ்டி ப்ரளயங்களே இல்லை - என்றனர். இதில் சிலர் — 25வது தத்வமாக ஜீவனையே ஒப்பினார்கள். ஈஶ்வரனை ஒப்பவில்லை. இது நேரில்லை. மந்த்ரிகோபநிஷத்தில் - ''*तं षड्विंशकं इत्याहुः सप्तविंशं अथाऽपरे । पुरुषं निर्गुणं सांख्यं अथर्वशिरसो विदुः । विकारजननीं अंशाम्*'' - என்று உள்ளது. ஜீவனை இருபத்தி ஆறுவது தத்வமாகச் சிலர் கூறுவர். ஆத்மாக்களை ஜீவ - பரமாத்மா - என இரு வகுப்புகளாகப் பிரித்து, பரமாத்மா ஒருவரே எனக் கொண்டு 27 தத்வங்கள் உண்டு என்றும் சிலர் காட்டினர். இந்த ஜீவன் ஸத்த்வம் - ரஜஸ் - தமஸ் என்ற பந்தகங்களான மூவகை குணங்களையும் அற்றவனாகவும் அதர்வ வேதமறிந்தவர்கள் கூறினார்கள். பலவகையான விகாரங்கள் = மாறுபாடுகளுக்கு உடன்படும் இந்த மூலப்ரக்ருதியானது அறிவற்ற ஜடப் பொருள், நித்யமானது - என்பது இதன் கருத்து. இப்படி ஜடப் பொருளையும் ஜீவனையும் காட்டியதுடன் - இவ்விருவகையான சேதனாசேதனங்களை இயக்கிவரும் ஈஶ்வரனையும் இப்படிப்*

பிரித்துக் காட்டும் நூற்றுக் கணக்கான வேத வாக்யங்கள் உண்டு.

*(மூலம்)* **आप्तशास्त्र**ங்களில் சில இடங்களிலே **''पञ्चविंशक**ன் **परमात्मा''** என்றதற்கு **तात्पर्य**த்தை - **अन्यश्च राजन् ! स परः तथाऽन्यः पञ्चविंशकः । तत्स्थत्वात् अनुपश्यन्ति ह्येक एवैति साधवः** என்று மஹர்ஷி தானே அருளிச் செய்தார்.

*(உரை)* அசேதன தத்வங்களைப் ப்ரக்ருதி - மஹத் - அஹங்காராதி க்ரமத்தில் 24 வகைகளாகப் பிரித்துக் காட்டிய ப்ராமாணிகர்களான சில மஹர்ஷிகளே தமது நூல்களில் பரமாத்மாவை 25வது தத்வமாகக் காட்டினார்கள். तेनैतन्नाऽभिजानन्ति पञ्चविंशकं अच्युतं என்று மஹாபாரதம் காண்க. இதனால் என்ன ஏற்படுகிறது? என்றால் இந்த 24 வகைகளான அசேதனப் பொருட்களுக்குமேல் குறிப்பிடப்பட்ட ஆத்மா - பரமாத்மாவே. ஜீவன் என்ற நிலை - ஜீவனுக்குப் பரமாத்மாவோடு ஒன்றாத - ஸம்ஸரித்து வரும் தசையில்தானே. மோக்ஷ தசையில் ஜீவன் - பிரித்துப் பார்க்க முடியாதபடி பரமாத்மாவுடன் ஒன்றிப் போய் - கடலில் கலந்த காவேரி - கங்கை முதலான நதிகளின் நீர் எப்படிப் பிரித்து பார்க்க முடியாதோ - அப்படி இருப்பதால் - என்றல்லவோ यथा नद्यः स्यन्दमानाः समुद्रे என்கிற ஶ்ருதி காட்டியது. ஆகவே அத்வைத ஸித்தாந்த ரீதியே தகும் - என்று - மெள்ள மெள்ள சிலர் குழப்பத் தொடங்கினர். இதை இந்த வாக்யத்தால் ஆசார்யர் மறுத்தருள்கிறார். ஜீவனைக் கூறிய இடத்திலும் பரமாத்மாவைக் கூறியதாகவே ஆகும். ஏன்? என்றால் - அந்த ஜீவனுக்கு உள்ளும் புறமும் இருந்து அவனைச் செயல்படச் செய்பவன் பரமாத்மாவே அன்றோ? இதனைப் பரமாத்மா வேறு - 25வது தத்வமாக எல்லோரும் ஒப்புக் கொண்ட ஜீவன் வேறு - இந்த ஜீவனுள்ளும் அச்யுதன் அந்தர்யாமியாக எழுந்தருளியிருப்பதால் - என்று வ்யாஸரே காட்டியருளினார். வாக்யாந்வயாதிகரணத்திலும் ஸ்ரீ வேதவ்யாஸரே இப்படியே நிர்தாரணம் செய்தருளினார். ஆஶ்மரத்யர், ஔடுலோமி என்ற

இரு முனிவர்களின் மதத்தில் முதலில் காட்டி, கடைசியாக அவற்றை மறுத்து - अवस्थितेरिति काशकृत्स्नः என்று ஸ்ரீ காஶக்ருத்ஸ்நரின் மதத்தையே தமது ஸித்தாந்தமாகக் காட்டியருளினார். अवस्थितिः = அந்தர்யாமியாக ஜீவனுள்ளும் எம்பெருமான் நிலை கொள்வது. அதைக் காட்டவே तत्स्थत्वात् अनुपश्यन्ति ह्येक एवेति साधवः என்ற ஸ்ரீபாரதத்திலும் ஸூத்ரஸ்த்தமான பதத்தையே காட்டி ஸூசிப்பித்தார். ஸாதுக்கள் - ஜீவனுள்ளும் எம்பெருமான் உறைவதால் அவனே இவன் என்று கொண்டு अनुपश्यन्ति = எம்பெருமானை த்யானம் செய்து வருகின்றனர் - என்று பொருள். कृष्णानुस्मरणं परं என்றவிடத்தில் हीने என்ற பாணிநி ஸூத்ரத்தைக் காட்டி - எம்பெருமானைவிட அடியேன் தாழ்ந்தவன் - அவனுக்கு ஶேஷன் என்ற எண்ணத்துடன் த்யானிப்பது - என்று பொருள் விளக்கம் அருளினார் ஸ்ரீ எங்களாழ்வான். அதே போல் இங்கும் அநுபஶ்யந்தி என்பதற்குப் பொருள், ஆகவே அத்வைதிகள் கூறுவது நேரில்லை. उत्क्रमिष्यत एवम्भावम् इत्यौडुलोमिः என்ற ஸூத்ரத்தில் எடுத்து மறுத்த (= கழித்த) ஒரு மதத்தைத் தங்கள் மதமாகக் கொள்வது அவர்களுக்குத் தகாது. तत्स्थत्वात् काशकृत्स्नो यदिह निरवहत् व्याससिद्धान्त एषः என்று இதனை ஆசார்யரே அதிகரண ஸாராவளியிலும் காட்டியருளினார்.

இதையே இங்கு மஹர்ஷி தானே அருளிச் செய்தான் என்றது. पूर्वापरापरामृष्टः शब्दोऽन्यां कुरुते मतिम् என்று ஶாஸ்த்ரஜ்ஞர் காட்டியபடி - முன் பின் ஸந்தர்பங்களையும், பஹுப்ரமாணங்களையும் பராமர்சித்தே இந்த இடங்களில் பொருள் கொள்ளவேண்டும்.

(மூலம்) ''**ईश्वर**னை **षड्विंशक**ன் என்றுதல், **सप्तविंशक**ன் என்றுதல் எண்ணவே **प्राप्तं**'' என்று **श्रुति**தானே சொல்லிற்றிறே.

*(உரை) எம்பெருமானை 26வது தத்வம் என்றோ, 27வது தத்வம் என்றோ சொல்லலாம் - என்று ஶ்ருதியே காட்டியது. எம்பெருமானை 26வது தத்வமாக எண்ணும்வகை பல உண்டு.*

*1. மூல ப்ரக்ருதியில்* अव्यक्तं, अक्षरं, तमस् *என்று மூன்று பிரிவுகள் உண்டு என்பது* अव्यक्तमक्षरे लीयते, अक्षरं तमसि लीयते, तमः परे देव एकीभवति *என்று ஸுபாலோபநிஷத்தால் எற்படுகிறது. இந்த அவ்யக்தம் - அக்ஷரம் - தமஸ் என்ற மூன்றையும் மூலப்ரக்ருதி என்ற ஒரே பிரிவாகக் கொண்டு மஹத் - அஹங்காராதி க்ரமேண அசேதன பரிணமங்களை 24 எனக் கொண்டு, ஜீவனை 25வதாகவும் ஈஶ்வரனை 26வதாகவும் கொள்வது ஒரு முறை.*

*2. அசேதனம் 24வகை, காலம் 25வது, 26-வது ஜீவ-ஈசர் என்றபடி. ஆத்மாக்கள் எல்லாம் 26வதில் அடக்குவது ஒரு வகை.*

*3. ஜீவனையும் ஈஶ்வரனையும் பிரியக் காட்டி, அசேதனம் 24, காலம் 25வது, ஜீவன் 26, ஈசன் 27 என்று காட்டுவதும் உண்டு.*

*4. அசேதனம் 24, ஜீவன் 25, ஈஶன் 26, நித்ய விபூதி 27 என்று பிரிப்பதும் ஷடர்த்தஸங்க்ஷேபம் என்ற க்ரந்தத்தில் பூர்வாசார்யர்கள் வகுத்துக் காட்டினர். இதுவும் ஒருவகை. இன்னமும் பல வகைகளில் எண்ணுவதை அஸ்மதாசார்யர் ஶ்ரீமதபிநவ தேஶிகன் ஶ்ரீ உத்தமூர் ஸ்வாமி தமது உரையில் அருளியுள்ளார்.*

**(மூலம்) प्रकृति*யில்* तमोऽशावस्थादि*களிலே ஒன்றைப் பிரிய எண்ணி* सप्तविंशक*ன் என்று எண்ணலாம்.***

*(உரை) மூல ப்ரக்ருதியில்* **अव्यक्तं, अक्षरं, तमस्** *என்று மூன்று பிரிவுகள் உள்ளனவாக ஸுபாலோபநிஷத்தில் தெரிவிக்கப்பட்டது. இதில் ஒன்றைத் தனித்துப் பிரித்து எண்ணி அசேதனங்கள் 25 எனக் கொண்டு ஜீவ*

பரமாத்மாக்களைக் கூட்டி 27 என்று எண்ணுவதும் தகும். இதில் அவ்யக்தத்தை மட்டும் பிரித்து - व्यक्ताव्यक्ते तथा कालः என்று ஒரு வசனத்தில் காட்டப்பட்டது. கண்ணுக்குப் புலப்படக் கூடியது வ்யக்தம், புலப்படாதது அவ்யக்தம் எனப்படும். தன்மாத்ரைகள் வரையிலும் உள்ள அத்தனையும் கண்ணுக்குப் புலப்படாதவை. மஹதஹங்காரங்களும் அப்படியே. ஆகவேதான் अष्टौ प्रकृतयः என்றனர். षोडश विकाराः என்னப்பட்ட இதன் பரிணாமங்களே கண்ணுக்குப் புலப்படும் - விரிவு - வேதார்த்த ஸங்க்ரஹ ஶ்ருத ப்ரகாஶிகையிலும், ந்யாயஸித்தாஞ்ஜநாதிகளிலும் எப்படி எண்ணினாலும் 25வது தத்வம் ஜீவன் - என்பதில் மாறுதலில்லை.

(மூலம்) ''**ईश्वर**னுடைய **अन्तर्यामिरूप**த்தை தனித்து எண்ணி **सप्तविंशक**ன் என்கிறது'' என்று **சிலர்** சொல்லுமதுக்கு **औचित्यं** இல்லை.

(உரை) ஸ்வரூப பரிணாமம் ஏற்படக் கூடிய மூலப்ரக்ருதியிலிருந்து தோன்றிய அசேதனங்களைக் கணக்கிடும் போது - அதனதன் பரிணாமங்களுக்குத் தக்கபடி பெயரும் உருவமும் உண்டானபடியால் அவற்றைச் சில வசனங்களில் தனித் தத்வமாகக் காட்டினார்கள். ஸ்வரூப ஸ்வபாவ பரிணாமம் இல்லாதவர் எம்பெருமான். இவரது அந்தர்யாமி நிலையை மட்டும் கொண்டு, இவரைப் பிரித்துக் காட்டினார்கள். சிலர். இது நேரில்லை. இப்படிப் பார்த்தால் வ்யூஹ - விபவ - அர்ச்சாதிகளிலும் பல உட்பிரிவுகளை ஶாஸ்த்ரங்கள் காட்டின. இதைக் கொண்டு கணக்கிலடங்காத பிரிவுகள் என்று காட்ட வேண்டிவரும். அதை நம் பூர்வாசார்யர்கள் யாரும் ஒப்பவில்லை. ஆகவே இது தகாது. இங்கு அநபாய ப்ரபை என்ற தமது உரையில் அஸ்மத் ஆசார்யர் அருளியது — ''ஸ்வரூபத்தில் விகாரமற்ற பரமாத்மாவை இப்படி இரண்டாகப் பிரிப்பதைவிட, வேறு விதம் கூறுவதே பொருந்தும், ஸ்ரீதேவி 26, பகவான் 27 என்றும் கூறலாம்'' என்று. இதனால் ஈஶ்வர தத்வம் ஈரரசுபடாதோ? என எண்ண வேண்டாம். व्यापकौ अतिसंश्लेषात् एकतत्त्वमिवोदितौ

என்று ஆசார்யரே ப்ரமாணத்தைக் காட்டியபடி - ஒரே தத்வம் போன்றிருப்பர் இருவரும். ஒத்த கருத்துள்ளபடியால் - ஒருமனதாய் ஈன்ற உயிர் எல்லாம் உய்ய என்றருளியபடி இதில் தவறில்லை. महेन्द्राग्नाविष्णुप्रभृतिषु महत्त्वप्रभृतिवत् प्रपत्तव्ये तत्त्वे परिणमितवैशिष्ट्यविभवाम् என்று ஸ்ரீ ந்யாஸதிலகத்தில் ஆசார்யர் காட்டிய மீமாம்ஸக ஸம்மதமான ந்யாயப்படியும் குற்றமில்லை. ஈஶ்வரத்வித்வம் வராது. அந்தர்யாமியாய் எல்லாவுயிர்களுக்கும் எம்பெருமான் இருப்பதை வைதிகர் யாவரும் ஏற்றனர். பிராட்டியும் எல்லா ஜீவர்களிடமும் அந்தர்யாமினியாய் எம்பெருமானுடன் இருப்பதை ஶ்ருதப்ரகாஶிகையில் ஜ்யோதிரதிகரணத்தில் ஸ்ரீ ஸுதர்ஶநஸூரி ப்ரமாணங்களைக் காட்டி நிலைநாட்டினர். இதெல்லாம் ஸ்ரீ பாஷ்யாதிகளில் ஸத்ஸம்ப்ரதாயத்தோடே கூட சிரபரிசயம் பண்ணின மஹாப்ராஞ்ஜருக்கு நிலமாகும்.

॥ श्रीः ॥

# பெரிய திருமொழி

## (11—1—6)

சென்று வார்சிலை வளைத்திலங் கையை
வென்ற வில்லியார் வீரமே கொலோ
முன்றில் பெண்ணை மேல்முளரிக் கூட்டகத்து
அன்றிலின் குரல டருமென் னையே

அருஞ்சொற் பொருள் :- வார் = நீண்ட; சிலை = வில்; வில்லியார் = வில்லையுடைய இராமன்; முன்றில் = இல்முன் = முற்றம்; பெண்ணை = பனைமரம்; முளரி = தாமரை; கூட்டகத்து = கூட்டினுள்ளே உள்ள; அடரும் = துன்புறுத்தும்.

### அவதாரிகை

தண்மதியம் என்னைத்தன் கதிரால் வாட்டும் வாட்டமும், அலைக்கின்ற கடலின் நிலைகண்டு யானேபடும் கவலையும் கண்ட, முன்றில் பனையின் மேலுள்ள கூட்டன்றில் என் செவியில் நெருப்பை உருக்கி வார்ப்பது போல் கூப்பிட்டு என்னை வதைக்கின்றது என்கிறாள் தலைவி இப்பாட்டில்.

### கருத்துரை

(அபராதிகளான எதிரிகள்) இருக்குமிடத்தே (தானே) சென்று நீண்டதான வில்லை வளைத்து இலங்கையை வென்றவனான வில்லையுடைய இராமபிரானின் வீரமே காரணமோ? (அறியேன்). முற்றத்து முளைத்து நின்ற பனைமரத்தின் மேலே தாமரை மலர்களாலும் தண்டுகளாலும் கட்டப்பட்ட கூட்டினுள்ளே இருக்கும் அன்றிற் பறவையின் குரல் என்னையே துன்புறுத்துகின்றது.

### விளக்கவுரை

(சென்று) எதிரி வருகின்றவரை காத்திராமல் அவனிருக்குமிடத்தே ஏறப்போய் ''अभियाता प्रहर्ता च'' என்றானிறே வான்மீகி. (வார்சிலை) நீண்ட சிலை. சிலைக்கு நீட்சியாவது மற்றவரால் வளைக்கப்படாமை;

தரிக்கப்படாமை.

शार्ङ्गं पुन धर्नुर्दिव्यं विष्णोः परमं आयुधम्।
वितस्तिसप्तमं मानं निर्मितं विश्वकर्मणा।। (४४)
न स्वर्गे न च पाताले न भूमौ कस्यचित्करे।
तद्धनुर्वशमायाति मुक्त्वैकं पुरुषोत्तमम्।। (४५)
इति 'धनुर्वेदे' वशिष्टः ।।

(வென்ற வில்லியார்) வெற்றியையே கொண்ட வில்லையுடையவன். அகம்படியார் கிளர்ந்தெழுந்தால் அடக்கமுடியாது வென்றியைத் தருவர். வில்லே அடியாகப் பெயர் பெற்றவர்.

(முன்றில் மேல் பெண்ணை) வீட்டருகே உள்ள பனையானபடியால் குரலைக் கேட்டுத் தாளுக வேண்டும். குறுமரமாயின் குறுகித் தடுக்கலாம். நெடுமரமானபடியால் குரலும் நீண்டதே.

(முளரிக் கூட்டகத்தன்றில் குரல்)

முண்டகப் பூவாலும் தண்டினுலும் தாதுக்களாலும் கட்டிய பாதுகாப்பான கூடு. எனவே கைவிட்டுக் கூவாமல் கழுத்தை நெறிக்கமுடியாதே என்ற எண்ணத்தள் ஆனுள். அன்றில் குரல் = பிரியாமல் இணைந்தே நிற்கும். இவை எதற்காகக் குரலெழுப்பினவோ? என்னைத் துயருறச் செய்யவே கூட்டகத்தவையாய்க் கூவின.

(அடரும் என்னையே)

என்னையே அடர்ந்து துன்புறுத்தும். மற்றவரை அன்று - ஒளியாலும் ஒலியாலும் செயலாலும் எனக்கு ஊறு இழைக்கின்றன இம்மூன்றும்.

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேஸிகாய நம: ।

ஆசார்ய ராமாம்ருதம்

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் அருளிய

# ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம்

*புருஷா: தநயௌவநா: புருஷாளுக்கு பணம் கிடைச்சா யௌவனம் வந்துடுமாம். அறுவதாயிரம் வயஸ்ஸுக் கிழம் தசரதனுக்கு ராமனை பார்த்தவுடனே அறுவது வயஸ்ஸுபோல உத்ஸாஹம் வந்துடுமாம் அப்பேர்ப்பட்ட அழகாம் ராமனுடையது. பவாமி த்ருஷ்ட்வைவ புநர்யுவேவ என்றார் தசரதர். பெருமாள் தனமா? ன்னா.*

நிதியினை பவளத்தூணை நெறிமையால் நினையவல்லார்
கதியினை கஞ்சன் மாளக் கண்டு முன் அண்டமாளும்
மதியினை மாலை வாழ்த்தி வணங்கி என் மனத்து வந்த
விதியினைக் கண்டுகொண்ட தொண்டனேன் விடுகிலேனே.

*(திருக்குறுந்தாண்டகம் 1)*

*தநம் மதீயம் தவ பாதபங்கஜம் (ஆளவந்தார்), வைத்தமாநிதியாம் மதுஸூதனயே அலற்றி (நம்மாழ்வார்).*

*பெருமாள் ஸாக்ஷாத் பணம்தான்னா.*

*ராமனுடைய அழகு எல்லாரையுமே ஸந்தோஷப் படுத்துமாம்.*

*''பிணந்தின்னியையும் அகப்படுத்தும் அழகிறே''ன்னு வ்யாக்யாநம்.*

*விரோதி பார்த்தாகூட ராமன் நன்னா இருக்கான்னு சொல்வானாம். நல்ல ஸாத்விகமான ஆஹாரம் சாப்பிடறவாளுக்குதான் ராமனைப் பிடிக்குமா? ஆஹார சுத்தி இருக்கறவாளுக்குத்தான் பெருமாளைப் பிடிக்கும்ன்றா பார்க்கா! ஆஹார சுத்தி இருக்கறவாளுக்குதான் ராமனைப் பிடிக்குமா ?ன்னா. இல்ல. ராமாவதாரத்துல அப்படி இல்ல. ஆஹார சுத்தி இல்லாதவாளுக்கும் கூட ராமனைப் பிடிக்குமாம். பிணம் தின்னியான சூர்ப்பணகையையும்*

*இழுத்த அழகாம் ராமனுக்கு. நித்யம் பிணத்தையே சாப்டிண்டு இருந்தாளாம். அவள் பார்த்தவுடனே ப்ரமிச்சாளாம். ராமாவதாரத்துல யாருக்கும் ராமனைப் பிடிக்கும். ப்ரியதர்சநம் அதீவ ப்ரிய தர்சநம், சந்த்ரகாந்தாநநம் ராமம் அதீவ ப்ரியதர்சநம்.*

தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ ।
புண்டரீக விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ ॥

பலமூலாசநௌ தாந்தௌ தாபஸௌ தர்மசாரிணௌ ।
தேவௌ வா மானுஷௌ வா தௌ ந தர்க்கயிதும் உத்ஸஹே ।

*அவரை நாம் தேவர் என்று அஞ்சினோமே. யாருன்னு தெரியல்லியே! தேவரா மனுஷ்யரான்னு தெரியல்லியேன்னாள் சூர்ப்பணகை. அவரை கூட்டார் திருமங்கை ஆழ்வார். ''தோழீ!ன்னார் தோழீ! அவரை நாம் தேவர் என்று அஞ்சினோமே''.*

*அப்படி ரூப குணங்களாலயும் ஔதார்ய குணங்களாலயும் மநஸ்ஸை அபஹரிக்கறாராம். ரொம்ப வெய்யில்ல வாடின பயிருக்கு நல்ல மழை பெய்ஞ்சா எப்படி இருக்குமோ அப்படி எல்லாரையும் ஸந்தோஷப் படுத்தறவராம் ராமன் தன் அழகால. வஸுதேவரும் சொல்லுவர். நந்தகோபரும் சொல்லுவர் பிள்ளையைப் பாக்கச்சே அப்படி யௌவநம் திரும்பறதுன்னு. ஆச்சர்யமான அழகோட ராமன் வரார். ஸுமந்த்ரர் அழைச்சுண்டு வரார். ராமன் வந்து அப்பாவை விழுந்து ஸேவிச்சார்.*

நாம ஸ்வம் ச்ராவயந் ராம: வவந்தே சரணௌ பிது: ।

அஹம் ராம: தாசரதி: அஸ்மி போ: *ன்னு அபிவாதநம் பண்ணாராம்.*

*அபிவாதனம் பண்ணாராம் ஸ்வாமீ. ஸர்வலோகேச்வரன் வைகுண்டாதிபதி, ராஜராஜேச்வரன் ப்ரபு ஸபையில் வந்து தோப்பனாரை ஸேவிச்சு* அபிவாதயே *ன்னாராம். ஸாக்ஷாத் நாராயணன் பரமபதத்திலேர்ந்து அவதாரம் பண்ணியிருக்கார். மஹாபுருஷன்.*

*ஸர்வலோகாதிபதி ஸபையில் வந்து அபிவாதயே ன்னாராம் இந்த காலத்து பையன்கள் அபிவாதயே சொல்லமாட்டேங்கறான்.*

*ஸர்வேச்வரன் அபிவாதயே சொல்றாரம் ஸ்வாமீ. ஸர்வேச்வரன் அனுஷ்டாதா! அனுஷ்ட்டானம் பண்ணி நமக்கு காட்டறாராம்.*

நாம ஸ்வம் ச்ராவயந் ராம: வவந்தே சரணௌ பிது: ।

*ஸேவிச்சாராம். இளைய பெருமாளும் ஸேவிச்சாராம். உக்காண்டாளாம்.*

யத: த்வயா ப்ரஜா: சேமா: ஸ்வகுணை: அபிரஞ்ஜிதா:
தஸ்மாத் த்வம் புஷ்யயோகேந யௌவராஜ்யம் அவாப்நுஹி। *(2-3-41)*

*உடனே தசரதர் சொல்றார். ஜனங்களை எல்லாம் கேட்டேன். பரம ஸந்தோஷப்பட்டா. நாளைக்கு புஷ்யயோகத்துல பட்டாபிஷேகம் பண்ணிவெக்கப்போறேன் அப்படீன்னாராம்.*

*உடனே ''சரி'' ன்னு வெளில போனார். உடனே எல்லாரும் கலந்துண்டா. ஸந்தோஷப்பட்டா. எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிடுன்னா. மறுபடியும் ராமனை கூப்பிடுன்னா. மறுபடியும் கூப்பிடறாரே. இல்லன்னு சொல்லறதுக்கா?ன்னு ஓடி வந்தாராம் ராமன். தசரதன் சொல்றார்.*

காமதஸ்த்வம் ப்ரக்ருத்யைவ நிர்ணீதோ குணவாந் இதி।

குணவத்யபி து ஸ்நேஹாத் புத்ர! வக்ஷ்யாமி தே ஹிதம் ।

பூயோ விநயமாஸ்தாய பவ நித்யம் ஜிதேந்த்ரிய: *(2-3-42)*

*நான் உனக்கு உபதேசிக்கிறேன். நீ ரொம்ப வணக்கமுள்ளவன். இப்ப ராஜ்யம் வேற வரப் போறது. இன்னும் வணக்கத்தோட இருக்கணும். ஸ்வபாவமே வணக்கம்தான் உனக்கு. ராஜ்யமானதை, ஐச்வர்யத்தை,*

கொடுக்கச்சே உபதேசிக்கணும்னு சொல்லியிருக்கு. ரொம்ப வணக்கத்தோட இரு. காமத்தையானது வுட்டுடு. அதனால வரதையெல்லாம் வுட்டுடு.

அபி சாத்யாசுபாந் ராம ஸ்வப்தாந் பச்யாமி தாருணாந் ।

இவ்வளவு சீக்கிரம் எனக்கு பட்டாபிஷேகம் என்ன? ன்றயா.

எனக்கு வரதான சகுனங்களை பார்த்தா இன்னும் அஞ்சாறு நாள் இருக்கமாட்டேன் போல இருக்குடா. வெளில சொல்லல. உனக்கு தனியா சொல்லறேன். பயங்கரமான கனவுகள் வரது. நேத்தைய தினம் உத்யானத்துக்கு போனேன். கொள்ளிக்கட்டை எரிஞ்சுண்டே என் தலைல விழுந்துதுடா.

ஸநிர்காதா மஹோல்கா: ச பதந்தி ஹி மஹாஸ்வநா: ।

அதனால பட்டாபிஷேகம் பண்ணிவெச்சுடணும் பரதனுக்கே பட்டாபிஷேகம் பண்ணி வெச்சுடலாம்னு நெனச்சேன்.

விப்ரோஷித: ச பரத: யாவதேவ புராத் இத:

பரதன் ஊர்ல ல்ல. இன்னிக்கு கடிதாசி போட்டாலும் வரத்துக்கு பதினைஞ்சு நாளாகும். அதுக்குள்ள நான் போயிடுவேன் போல இருக்குடா. இந்த அபசகுனத்தைப் பார்த்தா நாலு நாள் தாங்காது போல இருக்கு.

தாவதேவாऽபிஷேகஸ் தே ப்ராப்தகாலோ மதோ மம । (2-4-25)
கிந்து சித்தம் மநுஷ்யாணாம் அநித்யம் இதி மே மதி: । (2-4-27)

ஆகையால இன்னும் ரெண்டு நாளைக்கு மேல நான் இருக்க மாட்டேன். அப்பேறப்பட்ட பயங்கரமான அபசகுனங்கள்ளாம் வரது. நான் போயிட்டாக்க நாலு பிள்ளைகள் இருக்கா-யார் என்ன சொல்லுவாளோ யாரை விரும்பறாளோ?. யாருக்கு பண்ணறாளோ? மனுஷ்யாளுடைய சித்தம் என்னவோ? யாரும் ஒரே மாதிரி இருக்கான்னு சொல்லமுடியாது. நான் இருக்கச்சேவே ஒருத்தன்கிட்ட ஒப்படைச்சுட்டு போயிடருதுதான்

தேவலைங்கறதாக நெனைக்கறேன். ஆகையினால பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளோட நீ உபவாஸம் இருந்து நாளைக்கு பட்டாபிஷேகத்துக்கு தயாரா இருப்பா-அப்படீன்னு தசரதர் ராமனைச் சொன்னார்.

இந்த அஞ்சாறு ச்லோகத்தையும் தசரதர் பரதனை ஏமாத்திட்டு அவன் வரதுக்குள்ள ராமனுக்கு பட்டாபிஷேகம் பண்ணி வெக்கணும்னு கெட்ட எண்ணத்தோட சொன்னார்னு சில பேர் வ்யாக்யானம் பண்றா.

அது ரொம்ப தப்பு. கீழ இருக்கற ச்லோகங்களுக்கும் தசரதருடைய வாஸ்தவமான பெருமைக்கும் ஒத்து வரல்ல அப்படிச் சொன்னா. தசரதர் ரொம்ப தர்மாத்மா. சரியா கவனிக்கணும்.

பரதன் வேற கிட்ட இல்ல. அவன் வரவரைக்கும் நான் இருக்கமாட்டேன். அவன் கிட்ட இருந்தா அவன் கிட்டயே ராஜ்யத்தை ஒப்படைச்சுடலாம். எனக்கு சகுனங்கள் பயங்கரமா இருக்கு. நாலைஞ்சுநாள் கூட தாங்காது. நீதான் கிட்ட இருக்கறதனால உன் கிட்ட ஒப்படைச்சுட்டுப் போகலாம்னு பார்க்கறேன். மனுஷ்யாளுடைய சித்தம் எப்படி ஆகுமோ தெரியாது. நாலு பிள்ளைகள் இருக்கான்றதனால யாரை விரும்புவாளோ நிச்சயமில்ல. என்ன ஆகுமோ தெரியாது. ஓர்த்தன்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சுட்டுப் போயிடலாம்ங்கறதாக நெனைக்கறேன்பா. ஆகையினால இந்தா ராம! நீ ராஜ்யத்தை ஒப்புத்துக்கோ'' ன்னார் னுதான் சொல்லணும்.

சரி அப்படீன்னு சொல்லிட்டார். பட்டாபிஷேகம் நாளைக்கு.

ப்ரஜைகள் எல்லாருக்கும் சொல்லிட்டா. உடனே ஸந்தோஷமாம்.

ராமனுடைய ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கௌஸல்யை கிட்ட போனாளாம். ''ஸபையில நடந்திருக்கு. நாளைக்கு புஷ்யத்துல பிள்ளைக்கு பட்டாபிஷேகம்னு ப்ரகடனம்

*பண்ணியாச்சுன்னு'' சொன்னாளாம். ரொம்ப ஸந்தோஷமாம். கௌசல்யை எல்லாருக்கும் பாரிதோஷிகம் (gifts) கொடுத்தாளாம்.*

*ராமன் கௌஸல்யையைப் பார்க்கப் போனாராம். ''வாடா! தங்கப் பலகை போட்டிருக்கேன். நாளைக்கு பட்டாபிஷேகமாச்சே. உக்காருடா'' அப்படீன்னாளாம்.*

*பட்டாபிஷேகம்னு அப்பா சொல்றார் அந்த மாதிரி. நடக்கறது என்னமோ தெரியல்லன்னாராம் ராமன்.*

அம்ப பித்ரா நியுக்தோऽஸ்மி ப்ரஜாபாலநகர்மணி ।
பவிதா ச்வோऽ பிஷேகோ மே யதா மே சாஸனம் பிது: ॥

*பிதாவினுடைய சாஸனம் நாளைக்கு பட்டாபிஷேகம்னு. அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் னு எல்லாருக்கும் உள்ள இருந்து நியமிக்கற அவனுடைய சாஸனம் இல்லன்னாராம். பகவானுடைய நியமனமில்ல. இவர் சொல்றார்னாராம்..*

கதே புரோஹிதே ராம: ஸ்நாதோ நியதமாநஸ: ।
ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத் ॥ (2-6-1)

*சரி, வசிஷ்டர் வ்ரதத்துக்கு வேண்டியதெல்லாம் சொல்லி பண்ணி வெச்சாராம். பெருமாளைப் போய் ஸேவிக்கறேன்னு போனாராம்.*

*ரங்க விமானமாச்சே. குலதனமாச்சே இவாளுக்கு. இங்க ஸேவிக்கறதான ச்லோகத்தை ''ஆராவமுதே'' பாசுரத்துக்கு வ்யாக்யானத்துல எடுத்து* ஆராவமுதே அடியேன் உடலம் நின்பாலன்பாயே நீராய் அலைந்து கரைய *என்ற இடத்துல வ்யாக்யானம் பண்றா. இருவத்தி நாலாயிரப்படி, முப்பத்தி ஆறாயிரப்படியான ஈடு வ்யாக்யானத்துல.* ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத் *ன்னா ஸ்ரீரங்கவிமானமில்ல. ஆராவமுதனுடைய வைதிக விமானம்ன்னார். (ஆசார்யரின் மெல்லிய சிரிப்பொலி கேழ்க்கிறது. அமுதனிடம் தம் ஈடுபாட்டின் மிகுதியினால் தாம் இப்படிப் பேசியதை நினைத்து...)*

ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத் । ன்னார். நியத மநஸ்ஸோட இருந்து ''ஸீதே! வரயா! ரங்க விமானத்துல ஆராவமுதனை ஸேவிக்கப் போறேன்னாராம். ''ஆஹா! வரேன்'' ன்னாளாம்.

ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத் । ''ஸீதே! பெருமாளை ஸேவிக்கப் போறேன். வரயா?'' ன்னாராம்.

''ஆரை''ன்னாளாம். ''ஆராவமுதனை'' ன்னாராம்.

''ஆஹா! வரேன்!'' ன்னாளாம். பத்நியோடகூட பெருமாளை ஸேவிக்கப் போனாறாம். ஆத்துக்கார் கூட்டார்ன்றதுக்காக பத்நீ ''வரேன்''ன்னு பெருமாள் சேவிக்கப் போனாளா? ன்னா **ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா-** தன்னிலும் சீரிய கோவிலாழ்வாரை ஸேவிக்கப் போகுங்கால் இவளுக்கு முகமெல்லாம் கண்ணாயிற்று.

பகவத் விஷய வ்யாக்யானத்தை பார்க்கணும்யா. ஸம்ஸ்க்ருத ச்லோகத்துக்கு தமிழ் வ்யாக்யானத்துல மெருகு கொடுத்திருக்கா ஆச்சர்யமா!

முகமெல்லாம் கண்ணாயிற்று.

பெருமாள்ஸேவிக்க வா!ன்னு நம்மாத்துல கூட்டா ஏற்கனவே சின்னதா இருக்கற கண்ணு இன்னும் சின்னதாயிடறது.

ஒசந்த சினிமா வந்திருக்கே இன்னிக்கு! ன்னாக்க உடனே கண் பெரிசாகறது. ஸீதைக்கு எப்படீ ?ன்னாக்க ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத் -- ரங்கநாதனை ஸேவிக்கப் போலாம்!னாக்க ஏற்கனவே பெரிசான கண் இன்னும் பெரிசாகறது. முகமெல்லாம் கண்ணாயிற்று ரொம்ப ஸந்தோஷத்தோட வந்து ரங்கநாதனை சேவிச்சாளாம்.

அப்படி இருக்கற காலத்துல பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய வ்ரதம் பண்ணார். வெண் பட்டை, கட்டிண்டார். தீக்ஷை, ரக்ஷாபந்தனம் பண்ணினார் வஸிஷ்ட பகவான்.

அப்படி உக்காந்துண்ட்டிருந்தார். பிம்மாலை ஆச்சு. பட்டாபிஷேகத்துக்கு போகணும். அந்த ஸமயத்துல என்ன ஆச்சுன்னு கேட்டா. ஸாயங்கால வேளைல

ஜ்ஞாதிதாஸீ யதோ ஜாதா கைகேய்யாஸ்து ஸஹோஷிதா ।
ப்ராஸாதம் சந்த்ர ஸங்காஶம் ஆருரோஹ யத்ருச்சயா ॥ (2-7-1)

அப்படி இருக்கச்சே ஜ்ஞாதிதாஸீ - பொறந்தாத்திலேர்ந்து அனுப்பிக்கப்படும் வேலைக்காரி ன்னார். புக்காத்து வேலைக்காரி இல்ல.

கைகேயியை பொறந்ததிலேர்ந்து எடுத்து வளர்ந்த வேலைக்காரி ., கைகேயி கல்யாணம் ஆகி புக்காத்துக்கு பொறப்படச்சே ''நான் வளத்த பொண்ணு ஆகையால அவளோட நானும் கூடப் போறேன்னாளாம்''.

''ஆஹா''ன்னு கேகய மஹாராஜா இந்த அம்மா கூனியை அனுப்பிச்சாராம்.

கைகேயியோட கூடவே வந்துட்டாளாம் அயோத்திக்கு.

ஜ்ஞாதிதாஸீன்னா என்ன அர்த்தம் ஸ்வாமீ? என்ன முழிக்கறீர். நீரே சொல்லச்சே நான் என்ன சொல்லறது? ங்கறீரா?

ஜ்ஞாதிதாஸீ அங்கேர்ந்து வந்தவளாம் யதோ ஜாதா கைகேய்யாஸ் து ஸஹோஷிதா, - கைகேயி பொறந்ததிலேர்ந்து அவ கூட இருந்தவளாம் அவ.

ப்ராஸாதம் சந்த்ரஸங்காஶம் ஆருரோஹ - மாளிகை White - Wash பண்ணி ஸுதை பளப்பளன்னு மின்றதாம். அதும் விமானத்தும் மேல ஏறினாளாம் ஏழாவது மாடிமேல ஏறினாளாம். கைகேயியோட அரண்மனை மேல.

என்னன்னா?

வால்மீகிக்கு ஜ்ஞாபகம் வந்துதாம். பட்டாபிஷேகத்துக்கு இச்சாமோ ஹி மஹாபாஹும் ரகுவீரம் மஹாபலம் ன்னு

சொன்னாளே - அயோத்தியில எல்லா ஜனங்களும் ராமனுக்கு பட்டாபிஷேகம் பண்ணணும்னு சொல்லியிருக்கச்சே ராமனுக்கு பட்டாபிஷேகம் ன்னா அஸூயைப் பட்டு மேல பட்டாபிஷேகத்தை தடுக்கப் போறாளே. இந்த கூனியும் அயோத்தி ஜனம்தானே. எல்லாரும் ஒரே மனஸ்ஸோட இச்சாமோ ஹி ன்னு சொன்னாள்னு வால்மீகி சொன்னாரே ன்னு கேழ்ப்பாளேன்றதுக்காக ராமாயணத்துல ஒரு பதம் போட்டார் யதோ ஜாதா ன்னு.

யதோ ஜாதா ன்னா எங்கயோ பொறந்தவள்னா. கோஸலதேசத்துல பொறந்திருந்தா அப்படி சொல்ல மாட்டா யதோ ஜாதா = யத : குதஸ்சித், காரணாத் ஜாதா, வ்யாக்யானத்துல? ஏதோ ஒரு காரணத்துக்காக பட்டாபிஷேகத்தைக் கெடுக்கணும்ன்றதுக்காக தேவதைகள் ஸங்கல்பிச்சு எங்கேயோ பிறப்பிக்கப்பட்டவளாம் அந்த கூனி. நிருபாதிக (நிஷ்காரண) ஜநநமாக இருந்தால் அப்படி பண்ணியிருக்க மாட்டாளாம். பட்டாபிஷேகத்தை கெடுக்கணும்ன்ற காரணத்துக்காவே வேற எந்த தேசத்துலயோ பொறந்தவளாம்.

ப்ராஸாதம் சந்த்ரஸங்காஶம் ஆருரோஹ யத்ருச்சயா ।

சந்த்ர மண்டலம் போல வெளுப்பா ஜ்வலிக்கற அரண்மனைல மேல் மாடி மேல ஏறினாளாம். சந்த்ர மண்டலம்னா களங்கம் இருக்குமே ? அந்த தசரதன் மாளிகைல ஏது களங்கம்னா. இவதான் களங்கம். வேற ஒண்ணும் இல்லன்னா. மந்தரை இருக்காளே இவதான் களங்கம்.

அயோத்யாம் மந்தரா த்ருஷ்ட்வா பரம் விஸ்மயம் ஆகதா ।

அப்படீ ஏழாவது மாடிலேர்ந்து city யை சுத்தி பார்த்தாளாம். எங்க பார்த்தாலும் தோரணம் கட்றாளாம். தீபஸ்தம்பங்கள் நடறாளாம்.

ஆச்சர்யப் பட்டாளாம். பரம் விஸ்மயமாகதா என்னடா இது? நமக்குத் தெரியாத ஒரு கல்யாணம் நடக்கறதே?

*நமக்குத் தெரியாத ஒரு விசேஷமா? என்ன விசேஷம்னு தெரியல்லியே? அப்படீன்னு நெனக்கச்சே கௌசல்யையினுடைய அந்த:புரத்து ஸகீ அந்த மாடிக்கு வந்தாளாம்.*

அவிதூரே ஸ்திதாம் த்ருஷ்ட்வா தாத்ரீம் பப்ரச்ச மந்தரா ।

*அவளை கேழ்க்கறா? அம்மா! உனக்கு ஏதாவது தெரியுமா? ஊரெல்லாம் தோரணம் கட்டறாளே?*

உத்தமேநாபி ஸம்யுக்தா ஹர்ஷேணார்த்தபரா ஸதீ ।
ராமமாதா தநம் கிந்நு ஜநேப்ய: ஸம்ப்ரயச்சதி ॥

*என்னம்மா? ஊரெல்லாம் தோரணம் கட்டறாளே? கௌஸல்யை ஏதாவது வ்ரதம் பண்ணி முடிக்கறாளோ? இல்லப்ராம்ஹணாளுக்கு ஏதாவது தானம் பண்றாளோ? கௌஸல்யை ஏதாவது நல்ல கார்யம் பண்ணிண்டே இருப்பள். பணம் நெறைய வரும். தம் பிள்ளை பட்டாபிஷேகத்துக்குன்னு ஏதாவது நல்ல கார்யம் பண்ணிண்டே இருப்பள்.*

*ஒரு ஆத்துல பார்க்கா. பட்டணத்துல ஒரு ஆத்துல நித்யஹோமம். ஒரு விசேஷம்னாக்க ப்ரஹ்மணாளைக் கூட்டு புடவை வேஷ்ட்டி, புடவைனா பட்டுப் புடவை ஸாதாரண நூறு ரூபா புடவை இல்ல. பட்டுப் புடவை, நல்ல பத்தாறு வேஷ்டி வாங்கிக் கொடுத்து 500 ரூபா ஸம்பாவனை கொடுத்து ஸ்ரீ ஸூக்த ஹோமம் பண்ணச்சொல்லறது. என்னன்னு கேட்டாக்க அந்த ஹோமம் பண்ணி முடிஞ்சவுடனே ரெண்டு நாளைக்கெல்லாம் ரேஸ்ஸுல குதிரை கட்டினாக்க அவாளுக்கு விழறதாம் லக்ஷரூபா. இது யதார்த்த அனுபவம் என்னண்ணும் பார்க்கிறீர்? அவர் போனவர் (ரேஸுக்கு இல்லை, ஸம்பாவனைக்கு)*

*(ஸபையில் குபீர்சிரிப்பொலி) அதுக்காச் சொல்றேன்.*

ராமமாதா தநம் கிந்நு ஜநேப்ய: ஸம்ப்ரயச்சதி ।
காரயிஷ்யதி கிம் வாபி ஸம்ப்ரஹ்ருஷ்டோ மஹீபதி: ॥

*அந்த மாதிரி ஸ்ரீ ஸூக்த ஹோமம் பண்ணுவாள்*

புருஷஸூக்த ஹோமம். ரேஸுக்கு முன்னாடிதான் ப்ராஹ்மணாளை கூப்பிடுவாள். ஹோமம் பண்ணி முடிச்சாக்கா ஆறணா, ஒரு ரூபா ரேஸ்ஸுல கட்டுவாள். ஒரு லக்ஷம் ஒண்ணரை லக்ஷம் விழறதாம். இது வரையிலும் விழுந்துண்டிருக்கு. ஒண்ணும் ஃபெயிலாப் போகல்ல. வேதமந்த்ரம் எப்படி பலன் கொடுக்கறது பார்க்கா!

அதே மாதிரி அந்த கூனி கேட்டா. ராமமாதா தநம் கிந்நு ஜநேப்ய: ஸம்ப்ரயச்சதி - ஹே! ஸகீ! வந்திருக்கயே தாத்ரி! கௌசல்யா தேவீ இருக்காளே ராமமாதா ஏதாவது தநம் கிநம் கொடுக்கறாளா? ஏதாவது செஞ்சிண்டிருப்பவள் அவள். எனக்குத் தெரியும்.

ஏன்னு கேட்டா, ஏதாவது செஞ்சிண்டிருக்கற வழக்கம் உண்டோல்லியோ?

என்னான்னு கேட்டா பணம் ஆசையாம் ஆகையினால ஏதாவது செய்யற வழக்கமாம். அதாம் பண்றாளோ?ன்னு கேட்டாளாம்.

இவளுக்கு ரொம்ப ஸந்தோஷம் கேட்டவுடனே. இந்த ராமபட்டாபிஷேகத்தை நம்ம வழியா ஸமாசாரம் சொல்லணும்னு ஆசையாம் அந்த ஸகிக்கு. எல்லார்க்கும் தெரிஞ்சு போச்சு. யார்க்கு சொல்றது?. தன் வாயால மொதல்ல சொல்லணும் சில பேருக்கு.

ஊருக்கு சினிமா வந்தவுடனே மொதல்ல தான் பாத்துட்டு மத்த பேருக்கு சொல்லணும்னு ஒரு ஆசை. எங்க ஊர்ல சில பேர் உண்டு. வந்த அன்னிக்கு பார்த்துடணும். கூட்டமா இருக்குமே. நாலு நாள் கழிச்சு பார்க்கக்கூடாதோ? அந்த மாதிரி சில பேர். ஊர்ல ஒருத்தன் மொதல் நாள் கூட்ட நெரிசல்ல அகப்பட்டுண்டு பூட்டான். சாத்துமுறை ஆய்போச்சு. மொதல்ல பார்த்து சொல்லணும்ற ஸந்தோஷம் சில பேருக்கு.

கௌஸல்யையினுடைய தாத்ரிக்கு ''ராமனுக்கு பட்டாபிஷேகம்னு'' யாருக்காவது புதுசா சொல்லணும்னு

*எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு. ராமனுக்கு பட்டாபிஷேகமாமே - உனக்குதான் யோகம்ங்கறா. யாருக்கு சொல்றது? ஆருக்காவது புதுசா சொல்லணும்னு இருக்கச்சே நல்ல வேளை இந்த மந்தரை ஆப்டாளாம்.*

விதீர்யமாணா ஹர்ஷேண தாத்ரீ து பரயா முதா । (2-7-10)

*சொல்றார் வால்மீகி. ''மந்தரை என்ன''ன்னு கேட்டவுடனே ஸகிக்கு உடம்பு பெருத்து வெடிச்சு போயிடுவள் போல ஆயிடுத்தாம். விதீர்யமாணா ன்னு போட்டார். விதீர்யமணான்னா என்ன அர்த்தம்? வெடிச்சு போறதாம். வெள்ளேரிப் பழத்துக்கு பெருத்து வெடிச்சு போறது பார்க்கா. அந்த மாதிரி ஸந்தோஷத்துல உடம்பு பெருத்து போச்சாம்.. அந்த ஸந்தோஷத்துல.*

ஆசசக்ஷேऽத குப்ஜாயை பூயஸீம் ராகவப்ரியம். ।

*ராமனுக்கு பட்டாபிஷேகம் பண்ணப்போறாள்னு கூனிக்கானது சொன்னாளாம். அப்படியா சொல்றாள்னு கேட்டுண்டாளாம். உடனே மாடிப்படியை விட்டு கிடுகிடுன்னு எறங்கினாளாம். கைகேயினுடைய அறைக்கு போனாளாம். ''அம்மா கைகேயி'' ன்னாளாம். ஒரு அநர்த்தம் வந்திருக்கே தெரியுமா ன்னாளாம்.*

உத்திஷ்ட மூடே கிம் சேஷே பயம் த்வாம் அபிவர்த்ததே ।
உபப்லுதம் அகௌகேந கிமாத்மாநம் ந புத்யஸே ॥

*என்ன இப்படி தூங்கறயே உனக்கு பெரிய பயம் வந்துருக்கு தெரியதா. இப்படி இருக்கயே ன்னாளாம்.*

*''என்ன''ன்னு கேட்டாளாம்.*

ராமம் தசரதோ ராஜா யௌவராஜ்யேऽபிஷேக்ஷ்யதி ।

*தசரத சக்ரவர்த்தீ ராமனை அபிஷேகம் பண்ணி வெக்கப் போறாராம் ன்னாள். அப்படியா ன்னாள். உடனே முக்தாஹாரத்தையெடுத்து பாரிதோஷிகமா ( gift) கொடுத்தாளாம் கைகேயீ. என்ன கொடுக்கறயே?ன்னாள். இந்த ஸந்தோஷ ஸமாசாரத்தை சொல்றயே ன்னாளாம்.*

ராமே வா பரதே வா஽ஹம் விசேஷம் நோபலக்ஷயே ।

*ராமனுக்கானா என்ன? பரதனுக்கா இருந்தா என்ன? வித்யாஸம் இல்ல!*

*ரொம்ப ஸந்தோஷத்தைச் சொன்னயே ன்னாளாம்.*

*கைகேயி கொடுத்த முக்தாஹாரத்தை எடுத்து தரைல விட்டு எறிஞ்சாளாம். நான் யார் தெரியுமா? ன்னாளாம் கூனி.*

தவ து:கேந கைகேயீ மம து:கம் மஹத் பவேத் ।
த்வத் வ்ருத்தௌ மம வ்ருத்தி: ச பவேதிஹ ந ஸம்சய: ॥

*ஒனக்கு ஸந்தோஷம் வந்தா எனக்கு ஸந்தோஷம். ஒனக்கு து:கம் வந்தா எனக்கு து:கம் ன்னு இத்தனை வருஷமா ஒன்னோட பழகியிருக்கேனே. இந்த ராஜா ராமனுக்கு பட்டாபிஷேகமானதை பண்ணி வெக்கறார். ஒனக்கு அநர்த்தம். இதுக்கு ஸந்தோஷம் வேற பட்டு எனக்கு ஹாரம் பாரிதோஷிகம் வேற கொடுக்கற.*

உக்ரத்வம் ராஜதர்மாணாம் கதம் தேவி ந புத்யஸே । (2-7-23)

*ராஜாக்கள்ளாம் மஹா க்ரூராள். மேல இனிமையா பேசுவாள். ஸூக்ஷ்மமா அப்ரியத்தை பண்ணுவாள். கெடுதல் பண்ணுவாள். அது ஒனக்கு தெரியல. வெளுத்ததெல்லாம் பாலுன்னு நெனைக்கிற. மேலுக்கு வார்த்தை சொன்னா எல்லாம் வாஸ்தவம்தான்னு நெனைக்கிற.* ஹஸந்நேவ ந்ருபோ ஹந்தி *ராஜா சிரிச்சுண்டே கொல்லுவனாம். ராஜாக்கள்ளாம் ஸாமான்யாள் இல்ல. கம்பீர ஹ்ருதயாள்.*

தர்மவாதீ சடோ பர்த்தா ச்லக்ஷ்ணவாதீ ச தாருண: ।

*உன் ஆத்துக்கார் இருக்காரே.. அன்னிலேர்ந்து கள்ளம். உன் கல்யாணத்திலேர்ந்து நான் இங்க இருக்கனே. தர்மவாதீ- தர்மம் பேசுவர் - எல்லாரும் ஸமம்தான்.. எல்லாரும் ஒன்னுதான். வித்யாஸமே கிடையாது.* சட: = கூட விப்ரியக்ருத் சட: *தெரியாத கெடுதல் பண்றவனுக்கு சட ன்னு பேராம். முன்னால இனிமையா பேசிட்டு பின்னால கெடுதல்*

பண்ணுவன். தசரதன் பேசச்சே

ப்லக்ஷ்ணவாதீ ச

ரொம்ப இனிமையா பேசுவர். தேன் ஒழுகறாப்போல இருக்கும். ஒனக்கு ஒண்ணும் தெரியாது பாவம்!... இத்தனை நாளா ஏமாத்திருக்கார். வெளுத்ததெல்லாம் பாலுன்னு நெனைக்கிற! ஒண்ணும் தெரியல்ல.

அபவாஹ்ய து துஷ்டாத்மா பரதம் தவ பந்துஷு ।
கால்யே ஸ்தாபயிதா ராமம் ராஜ்யே நிஹதகண்டகே ॥

ராமனுக்கு பார் பட்டாபிஷேகம் பண்ணி வெக்கறான். உன் பிள்ளை இருக்கச்சே பண்ணிவெச்சானா பார், உன் பிள்ளை போனான். பன்னண்டு வர்ஷமாச்சு. திருப்பி கூட்டானா பார். இத்தனை வர்ஷம் மாமாவாத்துல எந்த பிள்ளையாவது இருந்திருக்காளு. இதிலேர்ந்து தெரியறதா ஒனக்கு. அபவாஹ்ய - பரதனை அசலூருக்கு போகச் சொல்லிபுட்டு

கால்யே ஸ்தாபயிதா ராமம் ராஜ்யே நிஹதகண்டகே । அவன் இல்லாம இருக்கச்சே மொள்ள ராமனுக்கு பட்டாபிஷேகம் பண்ணி வெக்க நெனைக்கறான் அப்படீன்னாளாம் கூனி.

என்னடீ! அப்படி சொல்ற? ன்னாளாம் கைகேயீ. ஒனக்கு தெரியாதடீ! பர்த்தா ன்னு நெனச்சுண்டு இருக்க! போன ஜன்மால சத்ரு அவன். இப்ப ''பதி''ன்னு பேரை வெச்சுண்டு வந்திருக்கான் டீ !ஒனக்கு தெரியறதா ஒனக்கு.

ஜந்மாந்தரக்ருதம் பாபம் பர்த்ருரூபேண ஜாயதே (சாடு ச்லோகம்)

ஜன்மாந்தர பாபம் பர்த்தாவா வந்திருக்கு ன்னாளாம்.

சத்ருः பதிப்ரவாதேந மாத்ரேவ ஹிதகாம்யயா (2-7-27)

பூர்வ ஜன்மத்து விரோதி ஒனக்கு பர்த்தாவா வந்திருக்கான். அவனை மடியில விட்டுண்டு வேற படுத்துண்டயே. உன் மடியில தலையை வெச்சுண்டு

படுத்துண்டானே தசரதன். நான் எத்தனையோ பார்த்திருக்கேன். பாம்பை மடியில விட்டுக்கறாப்போல மடியில விட்டிண்டிருக்கயே. உனக்குத் தெரியலையே. கொன்னுபுட்டானே ன்னாள் கூனி. என்னடீ இப்ப என்ன ஆய்போச்சு ன்னாள் கைகேயீ...

ஆசீவிஷ இவாங்கேந பாலே பரித்ருதஸ் த்வயா ।

எனக்கு ஒண்ணும் ஆகவேண்டியதில்ல. நான் போயிடுவேன் ஊருக்கு. உன் பிள்ளை பூடுவன் டீ! பிள்ளை பூடுவன்!

த்ராயஸ்வ புத்ரம் ஆத்மாநம் மாம் ச விஸ்மய தர்சநே । (2-7-30)

ஒன்னுடைய பிள்ளையை காப்பாத்திக்கோ. அதுக்காகச் சொல்ல வந்தேன்னாள் மந்தரை...

ஏதந்மே ப்ரியம் ஆக்யாதம் கிம் வா பூய: கரோமி தே ।

நம் ராமனுக்கு பட்டாபிஷேகம்னு ப்ரியஸமாசாரம் சொன்னயே ன்னு சொல்லி கைகேயி மறுபடியும் இன்னொரு கைவளை எடுத்துக் கொடுத்தாளாம் கூனிக்கு.

*ஸ்ரீமதே ரங்க ராமாநுஜ மஹாதேஶிகாய நம:*

# ஸன்யாசி வேஷதாரிகள்

ஸ்ரீ உவே நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யர், ஸம்பாதகர்

*சாமியார் வேஷங்கள் எத்தனையோ உண்டு. எந்த வேஷம் போட்டால் சரியாக இருக்கும்?*

*மொட்டை சாமியார் வேஷம்? தாடி சாமியார்? அம்மண சாமியார்? கவுன் சாமியார்? காவி சாமியார்? தலை முதல் கால் வரை வெள்ளை போர்த்திய சாமியார்? பரட்டைத் தலை? கொண்டைத்தலை சாமியார்? தலைப் பாகை சாமியார்? ஹுக்கா சாமியார் கூட உண்டு..! காஷாயாப் பட்டுப் புடவை உடுத்தும் சாமியாரும் உண்டு..! ஏன் பெண்டாட்டிக்கும் சாமியார் வேஷம் சார்த்திக் கூடவே சேர்த்துக் கொண்டு அருள் காட்சி தரும் தம்பதி சாமியாரும் உண்டு!*

*திடீர் சாமியார்கள்தான் சமூகத்தில் களைகட்டுவார்கள்.*

*எந்த சாமியார்வேஷமும் விலை போகும் சான்ஸ் நிறைய இருக்கிறது! சாமியார் பேச்சு இருந்தால் யதேஷ்டம்! வாக்கு பலிதம் என்று ஏதாவது ஓஸி மாயையைப் பரப்பி விட்டால் அப்புறம் ஓஹோதான்! மந்த்ரம் தந்த்ரம் சித்து ஏதாவது சேர்ந்து கொண்டால் கேழ்க்கவே வேண்டாம்.*

*துறவு மனப்பான்மை இருந்தால் போதாதா? அருள் வாக்கு சொன்னால் போதாதா? வேஷம் எதுவாக இருந்தால் என்ன? குடும்பதாரர் அன்று என்ற தோற்றத்தைக் காட்டினால் சாமியார்தான்!*

*உள் நாடு, வெளி நாடு எல்லா மதங்களிலும் வித விதமான சாமியார்கள்.*

*அரசியல்வாதி அரசியலைப் பேசி ஜனங்களை ஏமாற்றுகிறான். சாமியார்கள் மதத்தைப் பேசி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். ரொம்ப வித்தியாசமில்லை என்று நம் ஆசார்ய ஸார்வபௌமன் சேவிக்க வந்த சுப்ரமண்யம் ஸ்வாமியிடம் ஒரு தடவை ஸாதித்தாயிற்று.*

ஆமாம், இத்தனை சாமியார்களுக்கும் வழிகாட்டி யார்? அதாவது இத்தனை விதமான சாமியார் கோலங்களுக்கு மூல புருஷனான பேர்வழி யாராவது இருப்பார்களா என்று கேழ்க்கத் தோன்றுகிறது. ஒருவன் உண்டாக்கி வைத்ததா? அல்லது பலபேர் பல சமயங்களில் இப்படியெல்லாம் ஆரம்பித்து வைத்தார்களா?

இந்த்ரன்தான் இப்படி எல்லாம் பல சாமியார் வேஷங்கள் போட்டுக்காட்டி உலகில் இத்தனைக்கும் வழிகாட்டி ஆனானாம். பாகவதம் சொல்கிறது.

அது எப்போது?

ப்ருது சக்ரவர்த்தி அச்வமேதம் ஆஶ்சர்யமாகச் செய்தார். தொண்ணூற்றொன்பது அச்வமேதங்கள் செய்து விட்டார். பொறுக்கவில்லையாம் தேவேந்த்ரனுக்கு. நூறாவது நடக்கும்போது யாகக் குதிரையைத் திருடிக் கொண்டு ஓடினானாம். அத்ரி முனிவர் இந்த்ரனின் இந்த அடாவடிச் செயலை ப்ருதுவின் பிள்ளைக்குக் காட்டிக் கொடுத்தார். அந்த பிள்ளை இந்த்ரனைத் துரத்தினான்.

இந்த்ரனோ அந்தப் பிள்ளையின் வீரத்துக்கு பயந்து குதிரையையும் அப்போது தான் போட்டுக் கொண்டிருந்த ஒரு வித புது சாமியார் வேஷத்தையும் அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டானாம். இதேபோல் இந்த்ரன் பலமுறையும் முயன்று, எல்லாத் தடவையும் அகப்பட்டுக்கொள்ள இருந்து, உயிர் தப்பினால் போதுமென்று ஒவ்வொரு முயற்சியின் போதும் ஒவ்வொரு புதுவிதமான சாமியார் வேஷம் தான் போட்டுக்கொண்டு வந்ததை பூமியில் விட்டுவிட்டு ஓடினானாம்.

ப்ருதுவின் பிள்ளையும், ‘சரி, போனால் போகட்டும், ஏதோ சாமியார் வேஷம் போட்டுத் தொலைகிறானே’ என்று இந்த்ரனைக் கொல்லாமல் விட்டானாம்.

இப்படியாக இந்த்ரன் பூமியில் விட்ட சாமியார் கோலங்களை சிலர் அஞ்ஞானத்தால் ஏதோ ரொம்ப விசேஷமான சாமியார் கோலங்களாக நினைத்துக் கொண்டு

தாங்களும் தங்களுக்குப் பிடித்த அதில் ஏதோ ஒன்றை ஏற்றுப் போட்டுக் கொண்டார்களாம். இந்த ஸமாசாரமெல்லாம் **ஸ்ரீமத் பாகவதம்** நாலாவது ஸ்கந்தம் 19 ஆவது அத்யாயத்தில் விஸ்தாரமாகக் காண்க.

ஆக இந்த்ரன் செய்த ஏமாற்று வேலை எப்படி வேலை செய்து வருகிறது பாருங்கள்!

நல்லதோ கெட்டதோ எல்லாம் தெய்வங்கள் செய்து வைத்த கூத்துகளே.

ஒரு காலத்தில் இந்த்ரன் தன் ப்ரம்ஹஹத்தி தோஷத்தில் ஓரம்சத்தை மரங்களுக்குக் கொடுத்தான். அது என்றென்றும் மரங்களில் பிசினாக வடிந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஓர் அம்ஶத்தைப் பெண்களுக்குக் கொடுத்தான். அதுதான் மாதவிடாயைத் தருகிறது. இப்படிப் பல விஷயங்கள் இந்த்ரனால் சாச்வதமாக உண்டு போல் ஏகப்பட்ட சாமியார் கோலங்களும் இந்த்ரனால் உண்டாகி விட்டன.

மெய்யான ஸன்யாஸியின் தோற்றம் எவ்வாறாயிருக்கும்? இதைத் தெரிந்து கொண்டாலே இந்த விஷயத்தில் நம் வேலை முடிந்து விட்டது.

ஸன்யாஸிக்கு எந்த தோற்றம் வைதிகமானது? சாஸ்த்ரம் இசைந்தது? இதற்கு **யாதவப்ரகாசரின்** நூலான **யதிதர்ம ஸமுச்சயம்** இருக்கிறது. அவர் ஸ்ரீ பாஷ்யகாரரின் சிஷ்யர். ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸன்யாஸிக் கோலம்தான் ப்ராமாணிகமானது. விசிஷ்டாத்வைத ஸன்யாசி வேஷந்தான் பரம வைதிகமானது என்று நம் ஆசார்யர்கள் பல ப்ரமாணங்ளை ஸாதித்துள்ளார்கள். அவை மட்டும் சரியா? என்றால் ஒன்று சொல்கிறேன்.

ஏமாற்று வேலைகள் வெட்ட வெளிச்சமானால் சில உண்மைகள் தெரிய வரும். ஆதி காவ்யமான ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமந் மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் இப்படியான ஆதர்சக்ரந்தங்களில் ஏமாற்று வேலைகள் செய்த போலி ஸன்யாஸிகளைப் பார்த்தால் ஏதாவது துப்பு கிடைக்கும்.

முதல் துப்பு :- ராமாயணத்தில் போலி ஸன்யாஸி வேஷம் போட்டவன் ராவணன். ஸீதையை நெருங்குவதற்கு, முதலில் அவன் நம்பிப் போட்ட போலி வேஷம் ஸன்யாஸி வேஷம்தானே. பொய்யா மொழிப்புலவர் என்று ந தே வாக் அந்ருதா காவ்யே காசித் அத்ர பவிஷ்யதி என நான்முகனால் அருளப்பட்டவரான வால்மீகியின் வர்ணனையைப் பாருங்கள்.

अभिचक्राम वैदेहीं परिव्राजकरूपधृक्। श्लक्ष्णकाषायसंवीतः शिखी छत्री उपानही वामे चांसेऽवसज्याथ शुभे यष्टिकमण्डलू।।

காஷாயம் குடுமி குடை செருப்பு இடது தோளில் சார்த்தின தண்டம் இடது கையில் கமண்டலு இப்படியான தோற்றமாம் ராவணனின் போலித் துறவி வேஷம். இந்த வேஷத்தில் முக்கியமாக நாம் குறிக்கொள்ள வேண்டியது இந்தப் போலி ஸன்யாஸிக்குக் ''குடுமி'' உண்டு. தண்டம் இருந்தது. அது மூன்று கொம்பா அதாவது த்ரிதண்டமா? அல்லது ஒற்றைக் கொம்பான ஏக தண்டமா? என்று புரியவில்லை. நம் ஸன்யாஸிகள் த்ரிதண்டிகள்.

இரண்டாவது துப்பு :- மஹாபாரதத்தில் தர்மமே உருவெடுத்தவர் என்று கண்ணன் உள்ளிட்ட ஸகலராலும் கொண்டாடப்பட்டவர் தர்மபுத்ரர். க்ருஹஸ்தர். அவர் விராட பர்வத்தில் ஸன்யாஸி வேஷம் போட்டுக் கொண்டு மறைந்து வாழ்ந்தார். க்ருஹஸ்தாச்ரமத்தின் அத்யாவச்ய தர்மமான அக்நி ஹோத்ரத்தை அறவே விட்டு ஒரு வருஷம் வேறு ஒரு ஆச்ரம தர்மத்தை அதாவது இப்படியான ஸந்யாஸி ரூபத்தை தர்மபுத்ரர் தாம் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்'' என்று துர்யோதனன் நிச்சயம் நம்புவான். அதுவும் க்ஷத்ரியன் ப்ராஹ்மணன் வேஷம் போட்டு வாழும் மஹாபாவத்தை எக்காலத்திலும் தர்மமூர்த்தியான தர்மபுத்ரர் செய்யவே மாட்டார் என்று துர்யோதனன் நிச்சயம் நம்புவான். வேறு எந்த வேஷம் போட்டாலும் அகப்பட்டுக் கொள்வோம் என்று முடிவு செய்து ஆபத்துக்குப் பாவமில்லை என்று அக்நிஹோத்ரத்தை த்யாகம் பண்ணிவிட்டு போலி ஸன்யாஸி ஆகிவிட்டார் தர்மபுத்ரர். விராட ராஜனுடைய ஸபைக்கு வருகிறார்.

ஸ வை த்விஜாதி: தருண: த்ரிதண்டப்ருத் கமண்டலூஷ்ணீஷதர: வ்யஜாயத ।

ஸுரக்த மாந்ஜிஷ்ட வராம்பர: சிகீ பவித்ரபாணி: தத்ருசே ததாऽ த்புதம் ॥

*தர்மரின் ப்ராஹ்மண ஸன்யாசி ரூபமாம். இளம் ஸன்யாசி. த்ரிதண்டம் தலைக்கட்டு காஷாயம் குடுமி தர்ப்ப பவித்ர ஸஹிதம் வந்தாராம் இந்தக் கபட ஸன்யாசி. இந்த வேஷத்தைப் போட்டால் எவரையும் ஏமாற்றிவிட முடியும் என்ற தன்னம்பிக்கை யுதிஷ்டிரருக்கு.*

*இந்த முக்கியமான ச்லோகத்தையே மஹாபாரதத்திலிருந்தே நீக்கி விடுகிறார்கள் பலான பலான ஆசாமிகள். இண்டர்னெட்டில் தேடிப் பார்த்தேன். அங்கு வெளியிடப்பட்டுள்ள பல மஹாபாரதம் பதிப்புகளில் இந்த ச்லோகத்தையே காணவில்லை. தர்மபுத்ரர் த்ரிதண்டி ஸன்யாசியாகக் காக்ஷி தந்தார் என்பதைப் பலான ஆசாமிகளால் ஜெரித்துக் கொள்ள முடியவில்லை. 1909ல் பதிப்பிக்கப்பட்ட பம்பாய் நிர்ணய ஸாகராவின் க்ருஷ்ணார்ய வ்யாஸார்ய (மாத்வர்) பதிப்புகளில்கூட இந்த ச்லோகம் உள்ளது. தரமான பதிப்புகள் என்று கொண்டாடப்படும் எல்லாப் பதிப்புகளிலும் இந்த ச்லோகம் உள்ளது.*

*இந்தக் கலி காலத்தில் ப்ராசீனமான மஹர்ஷிகளின் ச்லோகங்களைக் கூசாமல் தங்களுக்கு வசதியாக மாற்றிவிடுகின்றனர். இதிஹாஸ புராணங்களை ப்ரதி எடுத்துக் காப்பாற்றினால் எத்தனை ஶ்லோகங்களில் எத்தனை எழுத்துகளை எழுதினானோ அத்தனை வர்ஷங்கள் ஸ்வர்கத்தில் அவன் பெரும் ஸுகமடைவான் என்றும் இதில் ஏமாற்று வேலை செய்தால் எத்தனையோ நரகங்கள் உண்டு என்றும் தெரிந்துமோ அல்லது தெரியாமல்தானோ இப்போது இதரர்களால் வெளியிடப்படும் அநேக முத்ரணங்களில் ஏகப்பட்ட தில்லுமுல்லுகள் கேட்பாரின்றி வளர்ந்து விட்டன என்று பல பெரியோர்கள் அடிக்கடி சொல்லித்தான் வருகிறார்கள். காலம் போகும், தில்லு முல்லு நிலைக்கும். நிற்க–*

*அடுத்ததாக இன்னொரு போலி சாமியாருக்கு வருவோம்.*

*<u>மூன்றாவது துப்பு</u> :— ஸ்ரீ கண்ணனின் அருமைத் தங்கை ஸுபத்ரா தேவியை பலராமனுக்குத் தெரியாமல் அர்ஜுனன் கவர்ந்து சென்று விவாஹம் செய்துகொள்ளக் கண்ணனே தன் தாய் தந்தைக்கும் தெரிந்தே அர்ஜுனனுக்குத் துணை செய்கிறார். அர்ஜுனன் போலி ஸன்யாஸி வேஷம் போட்டு தத்ரூபமாக நடித்து பலராமனை ஏமாற்றி விடுகிறான். கல்யாணம் நடந்து விடுகிறது. அர்ஜுனனின் போலி ஸன்யாஸி வேஷத்தை வர்ணிக்கிறார் ஸ்ரீ சுக ப்ரம்ஹர்ஷி*

தல்லிப்ஸு: ஸ யதிர் பூத்வா த்ரிதண்டீ த்வாரகாம் அகாத் *(10-86-3)*

*முக்கோல் ஸன்யாசியாகத்தான் அர்ஜுனன் வேடம் தரித்து ஏமாற்றிவிட்டானாம்.*

*இதிஹாசங்களிலும் புராணங்களிலும் ஏமாற்ற வந்தவர்கள் மிகச்சரியான சாமியார் வேஷம் போட்டுத்தானே ஏமாற்றி இருப்பார்கள்.*

*மஹாதர்மிஷ்டன் விராடராஜன் - அதனால்தான் எல்லோரும் இருக்க அவர்களையெல்லாம் விட்டு தர்மர் விராடனிடம் போகலாம் என்று முடிவெடுத்ததாக தர்மரே சொல்கிறார். 'பக்கா' ஸந்யாஸி வேஷம் போட்டால்தான் விராடனை ஏமாற்றமுடியும்*

*ஸாக்ஷாத் பெரிய பிராட்டியார் ஸீதை, பகவத் அவதாரமான பலராமர், மஹாதர்மிஷ்டரான விராடராஜன் எல்லாரும் உண்மையாக கௌரவித்து ஏமாந்தது பரம சாஸ்த்ரீயமான வேடம் தரித்து வந்தவர்களிடம்தான். ஆக சாஸ்த்ரமும், பெருமாளும், தாயாரும், மஹாதர்மிஷ்டர்களும் த்ரிதண்டி ஸன்யாசியைத்தான் கௌரவித்தார்கள் என்று காட்டினார்கள். இத்தகைய த்ரிதண்டி ஸன்யாஸிகளே ஸ்ரீ ஆளவந்தார் தொடக்கமான நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸன்யாஸிகள்.*

**உபவீதிநம் ஊர்த்வபுண்ட்ரவந்தம் த்ரிஜகத் புண்யபலம் த்ரிதண்ட ஹஸ்தம்
ஶரணாகத ஸார்த்தவாஹம் ஈடே ஶிகயா சேகரிணம் பதிம் யதீநாம் ॥**

*என்று **யதிராஜஸப்ததியில்** ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுருவத்தை இவ்வாறாக சித்தரித்துக் காட்டினார்.*

*ஆதிபுருஷன் பகவான் ! கவிகளில் ஆதிகவி ஸ்ரீ வால்மீகி பகவான் ! மனுக்களில் ஆதி மனு ஸ்ரீ ஸ்வாயம்புவ மனு ! ராஜா (ப்ரக்ருதி ரஞ்ஜனாத் = மக்களை மகிழ்வித்தவர்) என்று பேர் பெற்றவர்களில் ஆதிராஜன் ப்ருதுசக்ரவர்த்தீ (ஸ ஆதிராஜ: பாகவதம் 4-20-21).*

*அதேபோல் ஸன்யாஸிகளில் ஆதி ஸன்யாஸி ஆத்ரேயர் ! இவரை தத்தர் என்றும் சொல்வர். இவர் அத்ரி ப்ரஜாபதியின் புதல்வர். யது சக்ரவர்த்தீ, கார்த்த வீர்யார்ஜுனன் போன்ற மஹாத்மாக்களுக்கெல்லாம் குரு. அத்ரி அநஸூயா தேவி தம்பதிகளுக்கு விஷ்ணுவின் அம்சமான புத்ரர். இவரைப் பற்றி ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உதாஹரிக்கும்போது ஸித்தோபாய சோதநாதிகாரத்தில்***

காணாத சாக்ய பாஷண்டை: த்ரயீ தர்மோ விலோபித: ।

த்ரிதண்ட தாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதா த்ரயீ ॥ (அத்ரி ஸ்ம்ருதி)

*என்று ஸாதித்துள்ளார். விஷ்ணுவின் அவதாரமான த்ரிதண்டீ ஸன்யாஸியான தத்தாத்ரேய பகவானால் வேத விரோதிகளிடமிருந்து வேதமானது காப்பாற்றப்பட்டது என்றபடி. (இப்போதைய பதிப்பான அத்ரி ஸ்ம்ருதியில் இந்த ப்ரமாண ச்லோகமும் பாஷண்டிகளால் நீக்கப்பட்டுள்ளது)*

*இந்த தத்தாத்ரேயரின் அம்சாவதாரமும் கூட ஸ்ரீ பாஷ்யகாரர் என்பதை யதிராஜ ஸப்ததியில்*

காஷாயேண க்ருஹீத பீத வஸநா தண்டைஸ் த்ரிபிர் மண்டிதா
ஸா மூர்த்திர் முரமர்தநஸ்ய ஜயதி த்ரய்யந்த ஸம்ரக்ஷிணீ

*என்றும் ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் ஸாதித்துள்ளார்.*

*ஸ்ரீ தத்தாத்ரேய பகவான்தான் ஆதிஸன்யாஸி. ப்ரஹ்மாவின் ஆதி ஸ்ருஷ்டி நால்வர். அவர்கள் ஸநகாதி மஹர்ஷிகள். அடுத்த ஸ்ருஷ்டி ருத்ரன். அடுத்த ஸ்ருஷ்டி*

மரீச்ய த்ர்யங்கிரஸௌ -புலஸ்த்ய: புலஹ: க்ரது: ।
ப்ருகு: வஸிஷ்டோ, தக்ஷ: ச தஶம: தத்ர நாரத: ॥

*(பாகவதம் - 3-12-22)*

*மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலஹர், க்ரது, ப்ருகு வஸிஷ்டர் தக்ஷ: என்னும் நவ ப்ரஜாபதிகள். பத்தாவது நாரதர். இவர்களில் எவரும் ஸந்யாஸி அல்லர்.*

இந்த ப்ரஜாபதிகளில், அத்ரி ப்ரஜாபதியின் புதல்வர் தத்தாத்ரேயர். இவர்தான் ஆதி ஸந்யாஸியானுர்.

இந்த ஆதி ஸந்யாஸியான தத்தாத்ரேயர் த்ரிதண்டி ஸந்யாஸி. இதைத்தான் ஸ்வாமி தேஶிகன் யதிராஜ ஸப்ததியிலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும் மேலே கண்ட இடங்களில் ஸாதித்துள்ளார்.

ஆனால் இந்த தத்தாத்ரேய பகவானை கையில் சூலத்துடன் நான்கு நாய்களுடன், மற்றும் ஒரு பசுமாட்டுடன் மூன்று தலை ஆறு கை தெய்வமாக வடித்துக் காட்டும் ஸம்ப்ரதாயம் வட இந்தியாவில் எப்படியோ வந்து விட்டது.

அது கிடக்கட்டும். பரம வைதிகமான ஆராய்ச்சியில் நம் ஆசார்யர்கள் **ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர்** முதலான த்ரிதண்டீ யதீச்வரர்களின் திருக்கோலத்தையே உத்தமமான ஸன்யாஸாச்ரமத்தின் திருக்கோலமாக நிரூபித்துள்ளார்கள். இந்தத் திருக்கோலமே பவித்ரமானது.

ஸ்ரீ திருமழிசைப் பிரானும் திருச்சந்த விருத்தத்தில் ''சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்றுதண்டர்'' என்பதாக த்ரிதண்டீ ஸந்யாஸிகளைப் பாடியுள்ளார்.

|| श्रीः ||

## விருந்தாவன ஆச்ரமத்தில் தனுர்மாத ஆராதனம்

*நமது விருந்தாவன ஆச்ரமத்தில் தனுர்மாத திருவாராதனம் நித்யப்படி திருப்பாவை சாற்றுமுறையு டன் நன்ருக நடக்கிறது. இந்த வருஷம் அதிக பக்தர்கள் த்ரவிய ஸஹாயம் செய்து பங்கு கொண்டிருக்கிருர்கள். நித்யப்படி வெண் பொங்கல் தவிர க்ஷீரான்னமும் கண்டருள்கிருன் கண்ணன்.*

*சென்ற ஆண்டை விட க்ஷீரான்னம் அதிகமாகயிருக்கிறதே என்று யோசித்துக் கொண்டிருக்கையில் பெரியாழ்வாரின் ஒரு பாசுரத்தை சொல்லி விளக்கின ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனின் உபன்யாஸத்தைப் படித்தது ஞாபகம் வந்த்து.*

**செந்நெல் அரிசி சிறுபருப்புச்**
**செய்த அக்காரம் நறுநெய் பாலால்**
**பன்னிரண்டு திருவோணம் அட்டேன்**
**பண்டும் இப்பிள்ளை பரிசறிவன்**
**இன்னமுகப்பன் நானென்று சொல்லி**
**எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்ருன்**
**உன் மகன் தன்னை அசோதை நங்காய் !**
**கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே.**

*(பெரியாழ்வார் திருமொழி 2-9-7)*

*கண்ணன் வளர வளர அவன் குறும்புகளும் வளர்கின்றன. ஒரு கோபஸ்த்ரீ யசோதையிடம் ஓடி வந்து சொல்கிருள் - அம்மா யசோதை - உன் மகனைப் போல் விஷமமுள்ள பையனை இந்த ஜெகத்திலேயே பார்த்ததில்லை. என்ன விஷமம்! என்ன விஷமம்! 12 திருவோணம் பார்த்து செந்நெல் அரிசி சேகரித்து, சிறு பருப்புடன் சேர்த்து பாலிலே வேகவைத்து அக்கார வடிசல் பண்ணினேன். நான் சாப்பிட வேண்டுமென்று தென்னைமர நெய்யை ( DALDA) விடாமல் அசல் வெண்ணை காய்ச்சிய நெய்யை விட்டு நேர்த்தியாக பண்ணினேன். வெகுநாட்களாக ஆசைப்பட்டுப் பண்ணிஞல் எப்படியோ இது தெரிந்து உன் பிள்ளை கொஞ்சம் கூட*

வைக்காமல் அத்தனையையும் விழுங்கிவிட்டான். நான் பார்த்து ஏண்டா! இப்படிச் செய்யலாமா என்றால் மாமி நன்றாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் கொடுத்தாலும் சாப்பிடுவேன் என்கிறான். வயிற்றெரிச்சல் ! போனால் போகிறது. உன் பிள்ளையைக் கூட்டிக் கொள் என்றாள்.

பல இடங்களில் உள்ள பக்தர்களின் மனம் புகுந்து தன்னுடைய க்ஷீரான்ன ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறான் நம் விருந்தாவன ஆச்ரமக் கண்ணன். தற்சமயம் வயது 3 நடக்கிறது. விஷமங்கள் செய்ய வேண்டாமா? ஆயர்பாடியில் பால், தயிர், வெண்ணெய் கண்ணனுக்குக் கொடுத்து அதில் ஆசையை வளர்த்தவள் யசோதை.

இதை ஸ்ரீ தேசிகன் கோபாலவிம்ஶதியில் பின் கண்ட ச்லோகத்தால் அநுபவிக்கிறார்–

ஆவிர்ப்பவத் வநிப்ருதாபரணம் புரஸ்தாத்
ஆகுஞ்சிதைக சரணம் நிப்ருதாந்ய பாதம் ।
தத்நா நிமந்த்த முகரேண நிபத்த தாளம்
நாதஸ்ய நந்தபவநே நவநீத நாட்யம் ॥

தயிரை கடைந்து வெண்ணெ எடுப்பதற்கு உஷ:த்காலம் தான் ஏற்றது. அப்பொழுது வெண்ணெ திரண்டு வரும். மத்தினால் ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலேயோ என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள். வருஷம் பூராவும் ஆயர்பாடியில் தநுர்மாதம்தான். அதாவது விடியற்காலையிலேயே எழுந்து விடுவார்கள். அப்பொழுது யசோதை தயிர் கடையும்பொழுது வெண்ணெய்க்காக நர்த்தனம் ஆடுகின்றான் கண்ணன். நடனத்திற்குத் தாளம் மத்தினால் தயிர் கடையும் சப்தம்தான். அந்த குழந்தையின் நாட்டியத்தை பார்க்கும் பொழுது எந்த தாயாராவது வெண்ணெ கொடுக்காமலிருப்பாளா. ஆனால் கொஞ்சமாக கொடுக்கிறாள்.

அந்த வெண்ணெ போதவில்லை. யசோதை போனவுடன் திருடுகிறான் வெண்ணெயை. யசோதை பார்த்து விட்டாள். கண்ணன் பயந்து இரண்டு கைகளையும் கூப்பி யசோதையைத் தொழுகிறான். அதைக் குலசேகராழ்வார் அனுபவிக்கிறார் இப்பாசுரத்தில் -

முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ்சிறுதாமரைக் கையும்
எழில் கொள் தாம்பு கொண்டிருப்பதற்கு எள்கு
நிலையும், வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையுயும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவைகண்ட அசோதை
தொல்லையின்பத்திறுதி கண்டாளே *(பெருமாள் திருமொழி 7-3)*

ஸ்ரீ தேசிகன் கோபால விம்ஶதியில்ஹர்த்தும் கும்பே விநிஹித கர:
ஸ்வாது ஹையங்கவீநம் த்ருஷ்ட்வா தாமக்ரஹணச டுலாம்
மாதரம் ஜாத ரோஷாம் பாயாதீஷத் ப்ரசலித பதோ
நாபகச்சன் ந திஷ்டந் மித்யாகோப: ஸபதி நயநே
மீலயன் விஶ்வகோப்தா ॥

***வெண்ணையை எடுப்பதற்குப் பானையில் கையைவிட்ட பொழுது கோபம் கொண்ட யசோதை பார்த்து விடுகிறாள். அவனைக் கட்டுவதற்குக் கயிறு தேடுகிறாள். குழந்தை கண்ணன் ஓடுவதற்காகக் காலைத் தூக்குகிறான். ஓடவும் முடியவில்லை. நிற்கவும் இல்லை. இது என்ன காட்சி! கண்ணை இறுக்க மூடிக் கொண்டு விடுகிறான், நடக்கிறது நடக்கட்டும் என்று.***

***யசோதையிடம் ஒரு கோபஸ்திரீ வருவாள் - அம்மா யசோதா -!நான் என்னவென்று சொல்லுவேன்? பாலைக் கறந்து அடுப்பின் மேல் வைத்துவிட்டு பக்கத்து வீட்டிற்கு நெருப்பு வாங்க சென்றிருந்தேன். அந்த மாமியுடன் சற்று பேசிக் கொண்டிருந்தேன். திரும்பி வந்து பார்த்தால் பால் பாத்திரம் காலியாக இருக்கிறது. அத்தனைப் பாலையும் உன் பிள்ளை குடித்து விட்டானம்மா. என் பெண் காவலில் இருக்கும்போதே இக்கதி. உன் பிள்ளையைக் கூட்டிக்கொள்.***

பாலைக்கறந்து அடுப்பேறவைத்துப்
பல்வளையாள் என் மகளிருப்ப
மேலையகத்தே நெருப்பு வேண்டிச் சென்று
இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன்.
சாளக்கிராமமுடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்

ஆலைக் கரும்பின் மொழியனைய
அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்
(பெரியாழ்வார் திருமொழி 2-9-5)

கண்ணனின் அவதார காலத்தில் விருந்தாவன் பசுக்கள் குடம் குடமாகப் பால் கறக்கும். யசோதை வீட்டில் இருக்கும் பால், தயிர், வெண்ணெய் இந்தக் குட்டிக் கண்ணனுக்குப் போறுதா. ஏன் மற்ற வீட்டில் புகுந்த்து திருட வேண்டும்?

இதை யோசித்துப் பார்த்ததில் அடியேன் மனத்தில் தோன்றியதை எழுதியுள்ளேன்–

ஸ்ரீமத் ராமாயணத்தில் ராமன் காட்டிற்கு வந்திருந்தபொழுது அங்குள்ள ருஷிகள் ராமனிடம் மயங்கி உள்ளத்தைப் பறிகொடுத்தார்கள். ராமனை விட்டுப் பிரிவதற்கு மனமில்லை. அவர்களின் உண்மையான பக்தியைக் கண்டு அடுத்த க்ருஷ்ணாவதார காலத்தில் கோபிகைகளாகப் பிறக்க செய்து அவர்களுடனேயே இருந்தார் கண்ணன். அதுபோல் கௌஸல்யாதேவிக்கு அவதார புருஷன் ராமன் பிறந்ததைக் கண்டு அந்தப் பிள்ளையிடம் மயங்கி பல ஸ்த்ரீகள் தங்களுக்கும் பகவான் ராமன் போல் பிள்ளையாகப் பிறந்து தங்களின் முலைப்பால் சாப்பிடமாட்டாரா? என்று ஏங்கியிருந்தார்கள். அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக ஆயர்பாடியில் அவர்களைப் பசுக்களாக பிறக்கச் சொல்லியிருக்கலாம். அந்தச் பசுக்கள் பல கிருஹங்களில் இருந்ததால் அவைகளின் பாலையும், தயிரையும், வெண்ணையையும் திருடி சாப்பிட்டு அவர்களின் பூர்வ ஜன்ம ஆசைகளை நிறைவேற்றியிருக்கலாம்.

தற்காலத்தில் வெளிதேசத்து President, Prime Minister நம் நாட்டிற்கு வந்தால் advance partyயில் cook, Security Staff, Doctor, Bullet proof car இவைகள் வந்திறங்கும். அந்த Cook தான் சாப்பாடு செய்வான். அந்த Bullet proof car தான் பிரயாணம் செய்ய வேண்டும். அதுபோல கண்ணன் அவதாரம் செய்வதற்கு முன் கோபஸ்த்ரீகள், பசுக்கள் விருந்தாவனம் வந்திருக்கலாம் அல்லவா? விருந்தாவனம் ஒரு பக்தி க்ஷேத்ரம். ஆனதால் மேற்படியெல்லாம் எழுத வைக்கிறது.

நமது ஆசார்யர்கள் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனும், ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவனும் பக்தர்களின் வசதிக்காக கங்கை கரையிலும் (ருஷீகேசம்) விருந்தாவன க்ஷேத்திரம் (யமுனைக் கரை) கண்ணன் அவதார ஸ்தலத்திலும் ஆச்ரமம் நிறுவியுள்ளார்கள். நாமும் அங்கு போய்த் தங்கி, அநுபவித்து நிர்வாஹத்திலும் பங்கு கொள்ளலாம்.

வாருங்கள் விருந்தாவனத்திற்கு இந்த கோடை லீவிற்கு. ப்ரதி துவாதசியன்று ததீயாராதனம் ஸ்ரீமத் ஆண்டவனின் நியமனத்தின் பேரில் நடக்கிறது. த்ரவிய ஸஹாயம் செய்ய விரும்புவர்கள் ரூ 500/- அனுப்பலாம். நித்யப்படி தத்யன்னம் ரூ 200/- நித்ய ஆராதனை (வருஷத்தில் ஒரு நாள்) ரூ 3,000/- **one time payment.**

**D.D./ Cheque/ M.O. in the name of SRIRANGAM SRIMATH ANDAVAN ASHRAM, VRINDAVAN and sent to the Manager, SRI RANGAM SRIMATH ANDAVAN ASHRAM, Raman Rethi, Parikrama Marg, VRINDAVAN Dt.. MATHURA (U.P) Pin code 281 121 (Telephone 0565 / 320 7818)**

**Delhi R.V.R. (RURAJAGOPALAN)**
Telephone 011-2616 9054
(For More details)

# ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

### 35. மாயாவும் அமாயாவுமான மா.

मायामायामायामाया मायामायामायामाया।
मायामायामायामाया मायामायामायामाया॥३५॥

*மாயாமாயாமாயாமாயா மாயாமாயாமாயாமாயா।*
*மாயாமாயாமாயாமாயா மாயாமாயாமாயாமாயா॥35॥*

आय-अमा - अय - अमाः *அறிவிலும் அறியாமையிலும் (முறையே) வரவும் ஏழ்மையும் கொண்ட நாங்கள்*

माया - मायां *மாயாஜாலம் போல ஆஶ்சர்யமான*

यां *எந்த* मां *லக்ஷ்மியை*

आय *விஷ்ணுவுக்காக* आयाम *சரணடைந்தோமோ*

आ-माया *ப்ரக்ருதி ஸம்பந்தம் இல்லாத* या *எந்த* मा *லக்ஷ்மி*

आयाम - आयाम - अयां *நீளநீளத்தை அடைந்த*

मायां *அறிவை* आया *அடைந்தவளோ*

आम - अय - अमाया *அவள் அரைவேக்காடுகளுக்கும் நற்பணியில் சூதுவாதில்லாதவள்.*

*நாங்கள் அறியாமை நீங்கப்பெற்று அறிவு வரப்பெற்றவர்கள். அதனால் தான் திருமாலை அடைவதற்காகத் திருமகளைச் சரணடைந்தோம். அவள் எல்லாம் அறிந்தவள். ஆனால் அரைவேக்காடுகளுக்கும் கூட நலம் புரிவதில் எவ்விதக் கபடமும் இல்லாதவள்.*

*திருமாலுக்காகத் திருமகளை அடைந்தோம் என்பதற்கு இரண்டு தாத்பர்யங்கள். திருமாலை அடைய வேண்டும் என்ற நோக்கம் ஈடேறுவதற்காக லக்ஷ்மியிடம் புருஷகாரப்ரபத்தி பண்ணினோம் என்பது ஒன்று. நாங்கள் திருமகளின் அடியார்களாய் இருப்பது எங்களுக்காக மட்டுமன்று; திருமாலின் உகப்புக்காகவும் தான்; சாத்திரம் விதித்த நற்செயல்களை நாங்கள் பண்ணுவதால் அவர் மகிழ்வாரன்றோ? அதனால் அவருக்காகவும் நாங்கள் திருவை வணங்குகிறோம். இது இரண்டாம் கருத்து.*

அரைவேக்காடுகளுக்கும் கூட என்றதன் கருத்து என்னவென்றால் இதோ - உலகின் பலரும் இரண்டுங்கெட்டான் ஆனவர்களுக்கு நல்லது பண்ணும்போது, அவர்களை ஏமாற்றுகிறார்கள்; அவர்களுக்குத் தெரியாமல் கள்ளம் கபடம் கொள்கிறார்கள்; அவர்களுக்கு உளமார உதவுவதில்லை. ஆனால் திருமகள் அவ்வாறன்று; முதிராதவர்களுக்குக்கூடச் சூதில்லாமல் நன்மை பண்ணுவாள். உலகில் அறிவு வளர வளர மாந்தருக்குக் கள்ளங்கபடமும் வளர்கிறது. ஆனால் திருமகளோ அறிவுச்சுடராய் இருந்தும் கள்ளங்கபடில்லாமல் இருக்கிறாள்.

தம்மை அறியாமை நீங்கி அறிவு வரப்பெற்றவராகக் கூறிக்கொள்வது எதனாலென்றால், இதுகாறும் திருமகளைத் தொழாமலிருந்ததன் காரணமான அறியாமை இப்போது தொலைந்ததாலன்றோ இன்றவளைச் சரணம் புக்கது? அதையும் திருமாலுக்காக என்று பாவிக்கும் அறிவு இப்போதல்லவோ ஏற்பட்டது? லக்ஷ்மியை மாயாஜாலம் போல் ஆச்சர்யமானவள் என்றது ஏன்? ப்ரக்ருதிஸ்வரூபையான அவளை மாயா என்ன வேண்டியிருக்க அமாயா என்றது எதிராகச் சொன்னதும் ஏன்? என்ற இரண்டு கேள்விகளுக்கும் விடை: ப்ரக்ருதியானவளே, ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டும் நிற்பதாலும், தேவமாயேவ நிர்மிதா என்று ஸீதையைச் சொன்னது போல் அற்புதவடிவு கொண்டதாலும், மாயாவும், அமாயாவும், மாயா போல் மாயாவும் ஆக ஒருத்தியே ஆகிறாள்.

நீளநீளம் என்றால் வெகுநீளம் என்று அர்த்தம். கோரகோரம், ஸாரஸாரம், என்பவற்றில் போல. அல்லது நீளத்தின் நீளம், நீண்டிருக்கும் நீளம், என்றும் பொருள் கொள்ளலாம். இங்கு நீளநீளத்தை அடைந்த புத்தி திருமகளுடையது என்று கொண்டால், அவள் ஸர்வஜ்ஞை என்று சொன்னதாகும்; இந்தக் கவியினுடையது என்று கொண்டால், அது சித்ரஸ்தபகம் புனையும் அளவுக்கு வளர்ந்திருப்பதையும் அதில் லக்ஷ்மி வந்திருப்பதையும் சொன்னதாகும்.

இனி வேறுவிதமாகப் பொருளுரைத்தலும் கூடும். மாயா என்றால் அவித்யை; ஆமம் என்றால் பிணி; ஆயாமம் என்றால் நீட்சி; சேர்த்தால் மாயாமாயாமாய என்பதற்கு அவித்யைப் பிணி நீட்டிப்புக்கு என்று பொருள்; வயிற்றுவலிக்குச் சுக்கு என்பது போல ரோகநீட்சிக்குத் திருமகளைத் தொழல். யம என்றால் காக்கை; யாம என்றால் காக்கைத் தொடர்புடைய நிகழ்ச்சி; யாம-ஆயாமா என்றால் காக்கை நிகழ்ச்சியில் விஸ்தாரம் கொண்டவள்; காகக்கதையில் விரிந்த பண்பினள் என்றபடி. ஸீதையின் பொறுமை, பதிவால்லப்யம் (பதியின் மீது பற்று), இளைத்து விழுவோரிடம் தாயன்பு, இன்னா செய்தோர்க்கும் இனியது செய்யும் பண்பாடு, முதலிய விரிவுகள் எல்லாம் காகவ்ருத்தாந்தத்தில் தெரிபவை தானே? ஆகையால் இவள் யாம ஆயாமா ஆகிறாள். மா என்றால் லக்ஷ்மி; மாயா: என்றால் லக்ஷ்மியினுடைய என்று அர்த்தம். மாயா என்றால் க்ருபை; மாயா மாயா என்றால் திருமகளின் திருவருள் என்றாகிறது. யமம் என்றால் அடக்கிக் கொள்ளும் திறன்; அயம் என்றால் நற்பணி; யாமமான அயம் என்றால் யமத்தோடு தொடர்புடைய மங்களக்கார்யம், அஷ்டாங்கயோகம் முதலியவை; இவற்றில் அமாயா என்றால் புத்தியின்மை; நம் புத்தி நல்லதிலே போகவில்லை; இப்படி மந்தமதியினரையும் இவள் அமிக்கிறாள்; அணுகுகிறாள்; அநுக்ரஹிக்கிறாள்; ஆகையால் இவள் யாம - அய - அமாயா - அமா ஆகிறாள். யாம - அயக் - காரர்களையும் அமாயாக்காரர்களையும் அணுகுபவள் என்றும் பொருள் கூறலாம். யோகிகளை அணுகுவது உபேயமாகவும் பலனாகவும் தானேயாவதாலாம். அறிவிலிகளை அணுகுவது அவர்களுக்கு உபாயமாகலாமே, அவர்களுக்கு நல்வழி காட்டலாமே, என்ற அவாவினாலாம். இப்படியாகத் திருமகள் மா (அன்னை) ஆகிறாள்; மாயா (விஷ்ணுசக்தி) ஆகிறாள்; யாமாயாமா ஆகிறாள்; யாமாயாமாயாமாவும் ஆகிறாள். ஆயம் என்றால் வரவு; ஆயத்தில் அமாயர்கள் என்றால் வரவில் பற்றற்றவர்கள்; தனலாபாதிகளில்

நோக்கில்லாத நாம் அவளை யாம, அடைக்கலமாக அடைவோமாக. ஆயாம - ஆயர்கள் ஆவோம்; அதாவது நீளத்தை வருமானத்தில் கொண்டவர்களாவோம்; அதாவது பணக்காரர்களாவோம். என்றும் பொருள் கூறலாம். இப்படிப்பல வழிகளில் அர்த்தம் சொல்வதால் இந்த ச்லோகத்தில் பத்துக்கும் மேற்பட்ட கருத்துகள் ஒளிந்து கொண்டுள்ளன; தேடிக் கண்டுபிடிக்கும் விளையாட்டு போல் இருக்கிறது இந்த ச்லோகத்துக்கு அர்த்தம் சொல்வது.

1. அவள் அன்னையானவள்

2. அவள் செல்வமானவள்.

3. அவள் சக்தியானவள்.

4. அவள் ப்ரக்ருதியானவள்.

5. அவள் ப்ரக்ருதியைக் கடந்தவள்.

6. அவள் அற்புதமானவள்.

7. அவள் அறியாமையைத் தொலைத்தவர்களால் ஆச்ரயிக்கப்படுபவள்.

8. அவளை அடைக்கலம் புகுந்தே திருமாலை அடைய முடியும்

9. அவளை அடைக்கலம் புகுந்தால் திருமாலுக்கு உகப்பாகும்.

10. அவள் நம்மைப் பணக்காரர்களாக ஆக்குவாள்.

11. காகாஸுரன் கதையில் அவளைப் பற்றி விஸ்தாரமாகத் தெரிகிறது.

12. கட்டுப்பாடில் புத்தி போகாத மாந்தர்களுக்கும் அவள் அநுக்ரஹிப்பாள்.

13. அவள் அருள் மிக்கவள்.

14. அவள் ஸர்வஜ்ஞை.

15. அவள் அரைவேக்காடுகளை அவமதிப்பதில்லை.

16. அதிகப் புத்தியில் லக்ஷ்மி வந்தால் மட்டுமே இவ்வாறு சித்ரஸ்தபகம் பண்ணமுடியும்

17. அவளை ஆச்ரயித்தால் அறிவு வளரும்.

18. அவள் யோகிகளையும் அநுக்ரஹிக்கிறாள்.

இந்த ச்லோகத்தில் இரண்டே இரண்டு எழுத்துகள்

மாறிமாறி வந்து மொத்த ச்லோகத்தையும் நிரப்பிவிட்டன. தமிழில் இத்தகைய உதாரணம்: தாராதாராதாராதா என்பதற்கு தராமல் ஆராதா ராதாவே எனப் பொருள் உரைக்கலாம். யாமாயாமாயா என்பதற்கு நாங்களாகவேயாகும் மாயனே என்று பொருள் உரைக்கலாம். யானையானையானை என்பதற்கு நான் ஐந்து யானைகள் கொண்டவனை என்று அர்த்தம் சொல்லலாம். இதே மாதிரி முப்பத்திரண்டு எழுத்துள்ள முழு ச்லோகத்துக்கும் பொருள் வருவது மட்டுமின்றி அது ஒரே விஷயத்தைக் குறித்து ஒட்டும்படி அமையுமோ? அதைத்தான் இந்த ச்லோகம் ஸாதித்திருக்கிறது.

மாயா என்ற பதத்துக்கு ஐந்து அர்த்தங்கள்; ப்ரக்ருதி, இந்த்ரஜாலம், ஆச்சர்யப்பொருள், அறிவு, சூதுவாது என்று. இவ்வைந்து அர்த்தங்களையும் ஒருங்கே கையாண்டிருக்கிறார் இங்கு.

மாயையின் தேவதையை மாயை போல் இருப்பவளை
மாயையாய் இருப்பவளை மாயையை வளர்ப்பவளை
மாயையே அற்றவளை மாதாவாய் இருப்பவளை
மாதை நாம் புகலடைந்தோம் மாலின் உகப்புக்காக.

—★—

### 36. கடவுளுக்குக் காப்பானவள்.

मा सा रक्षा परस्यावनगगगनवत्याघुणस्वाशहेमा
माहेशस्वास्थ्यनाकादिपददपदित्येधयन्ती हतामा।
माता हन्तीति सूते रचिततचिरस्थानुकूल्यावनामा
मानावल्या प्रकृष्टं परमममरपप्रीतिरक्षारसामा॥

மா ஸா ரக்ஷா பரஸ்யாவநக$^3$க$^3$க$^3$நவத்யாகு$^4$ண ஸ்வாஶ ஹேமா
மாஹேஶஸ்வாஸ்த்$^2$யநாகாதி$^2$பத$^3$த$^3$த$^3$பதி$^3$த்யேத$^4$யந்தீ ஹதாமா ।
மாதா ஹந்தீதி ஸூதே ரசிததசிரஸ்த$^2$ாநுகூல்யாவநாமா
மாநாவல்யா ப்ரக்ருஷ்டம் பரமமமரபப்ரீதிரக்ஷாரஸாமா ॥ 36

सा அப்படிப்பட்டவளான मा லக்ஷ்மியானவள்
परस्य பரமனுக்கும் आरक्षा திருக்காப்பானவள்.

अवन-ग-गगन-वती *(தன்) பாதுகாப்பில் வானத்தையும் வைத்துக்கொண்டவள்.*

आघुण-स्व-आश-हेमा *தன்னிடம் ஆசையுடன் சுழல்கிற தங்கம் கொண்டவள்.*

माहेश-स्वास्थ्य-नाक-आदि-पद-दद-पत *பேராளுமை, ஆரோக்யம், சுவர்க்கம் முதலிய ஸ்தானம், இவற்றையெல்லாம் தருகிற திருவடி கொண்டவள்*

इति *என்கிற காரணத்தால்*

एधयन्ती *(நம்மெல்லோரையும்) வளர்ப்பவள்.* हत-अमा *ஏழ்மையைத் தொலைப்பவள்.*

माता *உலகளந்தவன்* हन्ति *தண்டிக்கிறான்* इति *என்கிற காரணத்தால்*

रचित-तत-चिरस्थ-आनुकूल्य-अवनामा *நமஸ்கரிப்பதால் பரந்த நிலைத்த க்ஷேமத்தைப் பண்ணுபவள்.*

मान-आवल्या *அளவுகளின் வரிசையாலே* प्रकृष्टं *உயர்ந்த*
परमं *உத்தமமான ஒன்றை (ஆனந்தத்தை)* सूते *உண்டுபண்ணுகிறாள்.*

अमर-प-प्रीतिः *தேவேந்த்ரனிடம் அநுக்ரஹம் கொண்டவள்.*

अ-क्षार-सामा *இனிய நல்வார்த்தை கொண்டவள்.*

*மாலுக்கும் காப்பு ஆனவள். விண்ணோர்களை ரக்ஷிப்பவள். தங்கம் அவளை விரும்பிச் சுழலும். அவளது திருவடியைப் பற்றியவர்களுக்கு இறையாண்மையும் ஆரோக்யமும் பரலோகப்பேறும் பிறவும் கிடைக்கும். இவ்வாறாக நம்மை வளர்ப்பவள் அவள். நம் வறுமையைத் தொலைப்பவள். பகவான் குற்றவாளிகளைத் தண்டிக்கிற காரணத்தால் பலரும் இலக்குமியையே தொழுது பலனடைகிறார்கள். அவள் அதிகமாகவும் நீண்ட நாள் நிலைப்பதாகவும் க்ஷேமத்தைத் தருகிறாள். உத்தரோத்தரமாக அளவில் அடுக்கிச்சொன்ன உயர்ந்த ஆனந்தத்தையும் அவள்*

உண்டுபண்ணுகிறாள். தேவேந்திரனும் அவள் அநுக்ரஹத்தை நாடிப் பெற்றவனே. இவள் இனிமையாக நல்லுரைகளைப் பேசுபவள்.

திருமகளைத் திருமாலுக்கு மனைவி என்றோ திருமாலுக்கு அடியவள் என்றோ சொல்லக்கூடுமாயிருக்க, திருமாலுக்குக் காப்பு என்று சொன்னது ஏனெனில், காப்புத் தாயத்து போல் திருமாலின் மார்பில் அவள் அணியப்படுவதாலும், அவள் ஸாந்நித்யம் இருக்குமிடத்திலெல்லாம் ரக்ஷை ஏற்படுவதாலும், அவள் அகலாதிருப்பதற்கும் பகவான் எப்போதுமே ஆனந்தம் பெறுவதற்கும் தொடர்பு இருப்பதாக ஊஹிப்பதில் பொருத்தம் இருப்பதாலும், திருவைத் திருமாலின் ஆரக்ஷையாக, காப்புக்கிழங்காக, வர்ணித்தது தகும்.

அவந-க-ககநவதீ என்று அவளால் ரக்ஷணம் வானுக்குக் கிடைத்ததாகச் சொல்வது சரியோ? வானவர்க்கு என்றல்லவா சொல்ல வேண்டும்? என்று கேட்டால், ஊர் சிரித்தது என்றால் ஊரார் சிரித்தனர் என்று அர்த்தமாவது போல, வானம் ரக்ஷை பெற்றது என்றால் வானவர் ரக்ஷை பெற்றனர் என்று அர்த்தமாகும். தவிரவும், இதே பதத்துக்கு வானவர் ரக்ஷை பெற்றதாக அர்த்தம் நேரடியாகவும் கிடைக்கும் என்கிறார்கள் இலக்கணப் புலவர்கள். மண்ணவர் விண்ணவர் வானோர் எல்லாருக்கும் ரக்ஷை கிடைக்கையில், வானவர் (மட்டும்) ரக்ஷை அடைந்ததாகச் சொல்வது சரியோ என்று கேட்டால், தயா விலோகிதா தேவா: என்ற ச்லோகத்தில் தேவர்களுக்குத் தனிப்பட்ட லக்ஷ்மீகடாக்ஷம் கிடைத்ததாகவும் அதன் பலனாக அவர்கள் லாபமடைந்ததாகவும் புராணம் கூறுவதால் இது சரியாகும்.

தங்கம் இவளிடம் சுற்றிச் சுழல்வதாகக் கூறுவதன் தாத்பர்யம் என்னவென்றால், இவள் ஹேமமாலினியானதால், இவள் திருமேனியில் தங்கம் புரளுகிறது என்பதாம். தங்கத்துக்கு இவள் மேல் ஆசை என்பது பொருந்துமோ? என்றால் இவள் எதெதை விரும்பி ஸ்வீகரிக்கிறாளோ அவையெல்லாம் இவளது ஸம்பந்தத்தால்

மங்களமாவதை அறிந்த தங்கம், தன்னை மற்றவரெல்லாம் விரும்பிப் போற்றும் பெருமை தனக்குத் திருமகளால் கிடைத்துள்ளபடியால், அந்தப் பொன்மகளைப் பொன்னே விரும்புகிறது எனக் கருத்தாம்.

திருமகளின் திருவடி, வெற்றியையும், செல்வத்தையும், இன்ன பிற பலன்களையும் தரவல்லதாயிருக்க, முதன்முதலில் ஆளுமையையும் ஆரோக்யத்தையும் தருவதாகச் சொல்வானேன் என்றால், ஆயுராரோக்யம் ஐஶ்வர்யம் என்று தொடங்கும் புராண ச்லோகத்தில், இவ்விரண்டையும் லக்ஷ்மீஸேவைப் பலன்களில் முதலிரண்டாகச் சொன்னதை நினைவுறுத்தற்காக இருக்கலாம்.

நாகாதிபதம் என்றவிடத்தில் ஆதி என்ற பதத்தால் சொல்லப்படும் பதங்கள் (வேறு அர்த்தத்தில்) எவையெனில், ப்ரம்மபதம், இந்த்ரபதம், முதலியனவாம். அவற்றை இவள் தருவதாகச் சொல்லாமல் இவளுடைய திருவடி அவற்றைத் தருவதாகக் கூறியது ஏன் என்று கேட்டால், இவள் எல்லாருக்கும் தராமல், தன் திருவடியை அடைந்தவர்களுக்கு மட்டும் தருவதால், அத்திருவடியே அவற்றைத் தருவதாகக் கூறுவது பொருந்துமாதலாலும், பதம் பதத்தைத் தரும் என்பதில் ஶ்லேடைச் சுவை இருப்பதாலும், கவிநயம் கருதி இவ்வாறு கூறுகிறார்.

இவளை ஏதயந்தீ என்று கூறியதன் கருத்து என்னவென்றால், இவள் மேன்மேலும் நலம் பயந்து நம்மை வளர்க்கிறாள்; உயர்த்துகிறாள்; மேம்படுத்துகிறாள்; என்பதாம். ஹதாமா என்றதன் கருத்து என்னவென்றால், இவள் வறுமையை ஒழிக்கிறாள்; ஏழ்மையை அழிக்கிறாள்; மூதேவியை முறிக்கிறாள்; என்பதாம்.

மாதா ஹந்தி என்பதன் கருத்து என்னவென்றால், பகவான் நம்மை ஒறுக்கிறார்; நம் பாவங்களுக்கேற்ற தண்டனை கொடுக்கிறார்; சிக்ஷிக்கிறார்; (திருமகள் அவ்வாறன்று) என்பதாம். இதி என்றதன் கருத்து என்னவென்றால், இப்படிக் கர்மாநுகுணபலப்ரதனாகப்

பகவான் இருப்பது நம்மைத் தாயாரிடம் பணியப்பண்ணும் காரணமாக இருக்கிறது; தாயார் நம்மிடம் மேலும் பரிவுகொள்ளக் காரணமாகிறது என்பதாம்.

அவளை நாம் பணிவதன் பலன் ததமாயும் சிரஸ்தமாயும் இருப்பதாகச் சொன்னதன் கருத்து என்னவென்றால், மற்றவர்களிடம் பணிந்தால் சிறியதொரு பலன் தாற்காலிகமாகச் சிறிது நேரத்துக்குக் கிடைக்கும்; மாறாக, இவளிடம் குனிந்தால், விபுலமாகவும், நீண்டகாலம் நிலைப்பதாகவும் க்ஷேமம் கிடைக்கும் என்பதாம். மோக்ஷம் என்கிற அழியாப்பலனையும் சொன்னதாகக் கொள்ளலாம்.

மாநாவல்யா ப்ரக்ருஷ்டம் என்றது மனிதனின் அதிகபக்ஷ ஆனந்தத்தை ஒரு அலகாகக் கொண்டு ஆரம்பித்து, அதை விட நூறு மடங்கு, அதையும் விட நூறு மடங்கு, என்று பெருக்கிக்கொண்டே போய், கடைசியாகப் ப்ரம்மானந்தத்தைக் கூறிய தைத்திரீய உபநிஷத்து பேசிய பேரானந்தமாகும். இதுவே மோக்ஷம்.

இவள் எல்லாப் பக்தர்களுக்கும் அநுக்ரஹிக்கச் செய்தேயும், அமரபப்ரீதி என்று தேவேந்த்ரனை அநுக்ரஹித்ததாகச் சொன்னது ஏனென்றால், நமஸ்யே ஸர்வபூதாநாம் என்று தொடங்கி ஸ்தோத்ரம் பண்ணின தேவேந்திரனிடம் பரிதுஷ்டோஸ்மி தேவேஶ என்று கூறி, திருமகள் விசேஷமாக அவனுக்கு அநுக்ரஹித்து வரம் கொடுக்க முன்வந்து கொடுத்ததாலாம்.

அக்ஷாரஸாமா என்றதன் கருத்து என்னவென்றால், அவள் ஒருபோதுமே க்ஷாரமாகப் பேசுவதில்லை: ந கஶ்சிந்நாபராத்யதி முதலிய இனிய வார்த்தைகளையே பேசுகிறாள் என்பதாம்.

இந்த ச்லோகத்தில் லக்ஷ்மிக்கு அடைமொழியாகச் சொன்ன பலவற்றுள் நாலுக்கு வேறு விதமாக அர்த்தம் சொல்வதும் உண்டு. ககநம் என்பதற்கு அவகாசம் என்று பொருள் கொள்ளலாம்; நம்மை ரக்ஷிப்பதற்கு அவகாசத்தை அவள் ஏற்படுத்திக் கொள்வாள்; அதற்கான அவகாசத்தை நாம் ஏற்படுத்தாமல் பாவமே பண்ணினாலும் கூட, அவள் யத்ருச்சாஸுக்ருதம் முதலியவற்றைத் தேடி நம்மை

ரக்ஷிப்பாள் என்று கருத்து. ஆகுணம் என்பதற்குச் சுழலுவதை அர்த்தமாகக் கொள்ளாமல், சிறு பூச்சி வரையிலுமாக என்றும் அர்த்தம் கொள்ளலாம்; ஸ்வாபம் என்பதற்குத் தன்பால் ஆசைகொண்ட ஒன்று என்று அர்த்தம் சொல்லாமல், ஸ்வ - ஆபம் எனப்பிரிக்காமல், ஸு-ஆபம் என்று பிரித்து, நல்ல உணவு என்று பொருள் கொள்ளலாம்; ஆகுணஸ்வாபஹேமா என்பதற்கு, எறும்பினும் சிறிய பூச்சி தொடங்கி எல்லா ஜந்துக்களுக்கும் உயிர் தரிக்கத் தேவையான உணவை மட்டுமின்றி, போக்ய வஸ்துக்களான பொன் போன்றவற்றையும் நல்குவதற்காகத் தன்னிடம் கொண்டவள் என்று அர்த்தமாகும். அல்லது ஹேமா என்பது அவள் பெயர். அவள் சிறு ஜந்துக்களுக்கும் உணவுடையவள்; என்னலாம். அல்லது, நல்ல ஆசை கொண்டவர்கள் ஸ்வாபர்கள்; அவர்கள் பூச்சிகளாயினும் கூட, அவர்களுக்குத் தங்கமானவள் இவள்; ஆசைகளை நிறைவேற்றுவாள்; என்றும் பொருள் கொள்ளலாம். மாஹேபஸ்வாஸ்த்யம் என்பதற்கு மஹேபஸம்பந்தம் கொண்ட நிலை (பெரிய ஆளுமை)யும் ஆரோக்கியமும் என்று அர்த்தம் கொள்ளாமல், மஹேபஸம்பந்தமான ஸ்வாஸ்த்யம் என்று கொள்வது மேலும் ஸஹஜமாய்க் கிடைக்கும் பொருளாம். ஸ்வாஸ்த்யம் என்பதற்கு ஸ்வர்க்கத்திலிருப்பவரின் தன்மை என்கிற அர்த்தமும் இங்கு பொருந்தும். ஹதாமா என்பதை ஹத - அம என்று பிரிக்காமல், ஹத - ஆமா என்று பிரித்தால், ஆமத்தை அதாவது பிணியைப் போக்குபவள் என்ற பொருள் கிடைக்கும். அமரபப்ரீதி கொண்டவளாக இவளைச் சொல்லுமிடத்தில் அமரபன் என்றால் தேவநாதன்; அமரப்ரபு என்றும், ஸுரேபன் என்றும், ஸுராத்யக்ஷன் என்றும், ஸஹஸ்ரநாமத்தில் உள்ள திருநாமங்களின்படி, திருமாலே அமரபன் அவனிடம் காதல் கொண்டவள் என்று பொருள் கொள்வதும் தகும். ப்ரீதி: - அக்ஷார - ஸாமா என்று பதம் பிரிக்காமல் ப்ரீதி - ரக்ஷா - ரஸா - மா என்று பதம் பிரிப்பதும் பொருந்தும். அநுக்ரஹத்திலும் ரக்ஷிப்பதிலுமே ரஸம் கொண்டவள் லக்ஷ்மி என்று அர்த்தமாகும்.

*பாடபேதங்களுள் ஒன்றை மட்டும் குறிப்பிட்டாக வேண்டும். ஸூதே என்ற வினைச்சொல்லுக்குப் பதில் ஸூதிம் என்று பாடாந்தரம். மாதா ஸூதிம் ஹந்தி என்று அன்வயித்து, அன்னை நம் பிறவியை மாய்க்கிறாள் என்று அர்த்தம் சொல்வது எளிது. ஆனால் அடுத்த வாக்கியத்துக்கு வினைச்சொல் இல்லாது போகும். இதற்காக பரமம் என்பதையும் ப்ரக்ருஷ்டம் என்பதையும், இரண்டாம் வேற்றுமைச் சொற்களாகக் கொள்ளாமல், வினையெச்சமாக்கி, உயர்ந்தபடியாக என்று அர்த்தம் சொல்லி, வேறொரு அடைமொழியில் ஒட்டவைக்க வேண்டும். மற்ற பாடபேதங்களையும் அர்த்தபேதங்களையும் இப்போது அலசவேண்டாம்.*

*(தொடரும்)*



संज्ञोपाधिस्समासो ह्ययमिह नियमे सप्तसप्तर्षिनीत्या
प्राणाद्यं तन्मनोऽन्तं प्रकरणनियतं पञ्चकं धीन्द्रियाख्यम् ।
ज्योतिश्शब्देन शाखान्तरविदितमिदं न्यूनवादस्तु पूर्यो
प्राणं वक्त्यन्नशब्दो रसनमपि सह प्राणशब्दस्त्वगर्थः ॥ ३६

**ஸம்ஜ்ஞோபாதிஸ்ஸமாஸோ ஹ்யயமிஹ நியமே ஸப்தஸப்தர்ஷிநீத்யா**
**ப்ராணாத்யம் தந்மநோऽந்தம் ப்ரகரணநியதம் பஞ்சகம் தீந்த்ரியாக்யம் ।**
**ஜ்யோதிஶ்ஶப்தேந ஶாகாந்தரவிதிதமிதம் ந்யூநவாதஸ்து பூர்யோ**
**ப்ராணம் வக்த்யந்நஶப்தோ ரஸநமபி ஸஹ ப்ராணஶப்தஸ்த்வகர்த: ॥**
**36**

*பதவுரை :-*

நிகமே *:- வேதத்தில்;* ஸப்தஸப்தர்ஷிநீத்யா *= ஸப்த ஸப்தரிஷிகள் (ஏழு ஸப்தரிஷிகள்) என்ற ந்யாயப்படி;* இஹ = 'யஸ்மிந் பஞ்ச பஞ்ச ஜநா:' *என்கிற மந்த்ரத்தில்;* அயம் ஸமாஸ: - 'பஞ்சஜநா:' *= என்ற ஸமாஸமானது;* ஸம்ஜ்ஞோபாதிர்ஹி *= ஸம்ஜ்ஞையை (பெயரை) காரணமாக்க (நிமித்தமாக) கொண்டதன்றோ !;* தத் பஞ்சகம் *= அந்த ஐந்து (பஞ்ச ஶப்தத்தால் குறிக்கப்பட்ட) எவை என்னில்;* ப்ராணாத்யம் *= ப்ராணத்தை ஆரம்பமாக உடையதும்;* மநோऽந்தம் *= மனதை அந்தமாக உடையதுமான;* ப்ரகரண நியதம் *= இப்ப்ரகரணத்திலுள்ள வாக்யத்தால் நியதமான;* தீந்த்ரியாக்யம் *= ஜ்ஞானேந்த்ரியம் என்னும் வஸ்துவினுடைய ஸமுதாயமேயாகும்;* இதம் *= பஞ்சஜன ஶப்தத்தால் குறிக்கப்பட்டதானது;* ஜ்யோதிஶ்ஶப்தேந = 'தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:' *என்ற வாக்யத்திலுள்ள ஆறும் வேற்றுமையிலுள்ள ஜ்யோதிஶ்ஶப்தத்தால்;* ஶாகாந்தர விதிதம் *= காண்வ ஶாகையில் அறியப்பட்டதாகும்;* ந்யூநவாதஸ்து பூர்ய: *= காண்வ ஶாகையில் அந்நஶப்தம் படிக்கப்படவில்லை. எனினும் மாத்யந்திந ஶாகையிலுள்ள அந்ந ஶப்தத்தை இங்கு கொள்ளவேண்டும். குறைவாகப்*

படிக்கப்பட்டிருப்பினும் இவ்வாறு வேறு ஶாகையிலுள்ளதை எடுத்துக்கொள்வதால் பூர்ணமாகிவிடும்; அந்நஶப்த: = அந்ந ஶப்தமானது; க்ராணம் ரஸனமபி ஸஹ வக்தி = அந்நம் என்பது ப்ருதிவீ விகாரம். ஆதலால் ப்ருதிவீ ஸம்பந்தமான கந்தம் அதற்குரிய இந்த்ரியமான க்ராணேந்த்ரியம் இவைகளை அந்நஶப்தம் கூறுகிறது. மேலும் அந்நம் என்பது அத்யதே அநேந என்பதால் (உண்ணப்படுகிறது இதனால்) அந்நஶப்தம் ரஸன இந்த்ரியத்தையும் லக்ஷணையால் கூறுகிறது.; ப்ராணஶப்த: த்வகர்த்த: = ப்ராணஸ்ய ப்ராணம் = என்றவிடத்திலுள்ள ப்ராணஶப்தத்தால் த்வகிந்த்ரியம் (தொடுதல் உணர்ச்சிக்குரிய இந்த்ரியம்) கூறப்பட்டதாகிறது. ஆகப் பஞ்சஜந ஶப்தமானது ஸம்ஜ்ஞா ஸமாஸமேயாகும். ஸாங்க்யன் கூறிய பக்ஷம் ஸித்திக்காது. ப்ரதான காரணவாதம் சரியன்று; ப்ரஹ்ம காரணவாதமே ஸித்திக்கும் என்பது ஸ்தாபிதமாயிற்று.

விளக்கவுரை :-இந்த ஶ்லோகத்தில் பஞ்சஜந என்னும் சொல்லிற்கு ஸமாஸம் என்ன? பஞ்சஜன ஶப்தத்தால் கூறப்படுவை யாவை என்பதையும் விளக்கியருள்கிறார் ஸ்ரீஸ்வாமி தேஶிகன்.

ஸாங்க்யர்கள் கூற்றுப்படி ஐந்து ஐந்து தத்த்வங்கள் என்பது சரியாகாது. ஐந்து தந்மாத்ரங்கள், ஐந்து பூதங்கள், ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்கள், ஐந்து கர்மேந்த்ரியங்கள் என இருபது தத்த்வங்கள் நான்கு ஐந்து தத்த்வங்களாகக் கூறினாலும் மீதியுள்ளவை ஒரு ஸமுதாயமாக ஆகாது. மீதி ஐந்து என்று ஒரு ஸமுதாயமாக ஒப்புக் கொண்டாலும், ஆகாஶம், யஸ்மிந் என்பதால் ஏற்பட்ட ஆத்ம தத்த்வம் இவை அதிகமாக உள்ளதால் பஞ்ச பஞ்சஜநா: என்று இருபத்தைந்து எனக் கூறமுடியாது என முன்பே கூறப்பட்டது.

மேலும் பஞ்ச ஜந என்ற சொல்லில் ஜந ஶப்தஸ்வாரஸ்யத்தால், 1. தேவதைகள், 2. பித்ருக்கள், 3. கந்தர்வர்கள், 4. தைத்யர்கள், 5, தாநவர்கள், 6. ராக்ஷஸர்கள், 7. பூதங்கள், 8. பிஶாசங்கள், 9. வர்ணங்கள் நான்கு, 10.அநுலோமர்கள் ஆறு, 11. ப்ரதிலோமர்கள் ஆறு என

இருபத்தைந்து ஜன என்பதால் நிர்தேஶிக்கப்படுகின்றனர் என்று கூறினாலும் சரியன்று. பஞ்ச பஞ்ச என ஐந்து ஐந்து ஸமுதாயமாக இல்லையாதலால் இந்த ஜன ஶப்த ஸ்வாரஸ்யமும் சரிவராது.

இன்னும் சிலரோ 1. தேவதைகள், 2. பித்ருக்கள், 3. கந்தர்வர்கள், 4. அஸுரர்கள், 5. ராக்ஷஸர்கள் எனப் பஞ்சஜன ஶப்தத்திற்குப் பொருள் கூறுகின்றனர்.

மேலும் சிலர் நான்கு வர்ணங்கள் நிஷாதர்கள் எனப் பஞ்ச ஜன ஶப்தத்திற்குப் பொருள் கூறுகின்றனர். கையடர் என்னும் மஹா வையாகரணர் இவ்வாறு கூறுகிறுர்-

இவைகளெல்லாம் இங்கு சரிப்பட்டுவராது. ஏனெனில் இதுதான் என்று நிர்ணயித்துக் கூறமுடியாது. (விநிகமகம் இல்லாததால்). ஆதலால் பஞ்சஜந ஶப்தத்திற்கு ப்ரகரணத்தில் உள்ளபடிப் பொருள் கூற வேண்டும். ஒரே சொல்லிற்குப் பல பொருட்கள் உண்டாகையால், அனைத்தும் அனைத்துவிடத்திலும் சரிப்பட்டு வராதாகையால் எந்த ப்ரகரணத்தில் எது சரியாக வருமோ அதைக் கூற வேண்டும். சில விடங்களில் நேராகவே பொருள் தெரியும். சில விடங்களில் முன் பின் வாக்யங்களைக் கொண்டுப் பொருள் கொள்ளும்படியாயிருக்கும். அந்தந்த ஸ்தலத்திற்கேற்ப பொருள் கொண்டால் அனைத்தும் சரியாகிவிடும். இங்கு பின் வாக்யம் (வாக்ய ஶேஷம்) என்ன கூறுகிறதோ அதை முன் வாக்யத்தில் சொன்னதைக் கொண்டு விஷய வாக்யத்தை ஸமந்வயப்படுத்திப் பொருள் கூறுகின்றனர் ஸூத்ரகாரரிலிருந்து அனைத்து ஆசார்யர்களும்.

இதுவும் மீமாம்ஸகர்கள் ஸந்திக்தே து வாக்ய ஶேஷாத் என்ற ஸூத்ரத்தில் அருளிச் செய்துள்ளபடியே, வாக்ய ஶேஷத்தைக் கொண்டு பொருள் கூறுகின்றனர். ஆகையால் அனைத்தும் ப்ரமாணமாகப்படுகிறது. இவையெல்லாம் பாவப்ரகாஶிகையில் அருளப்பட்டவை.

ப்ரக்ருதத்தில் எப்படி ஸமாஸம், எப்படி பொருள் என்பதை பார்க்கலாம்.

பூர்வபக்ஷிகளான ஸாங்க்யர்கள் பஞ்ச ஜன ஶப்தம் ஸமாஹாரத்வந்வம் என்கின்றனர். பஞ்சாநாம் ஜநாநாம் ஸமாஹார: பஞ்ச ஜந்ய: என்று இருக்க வேண்டியிருக்க பஞ்ச ஜநா: என்று எப்படி வந்தது என்னில் அது சாந்தஸம்- அதாவது வைதிக ப்ரயோகம் என்று கூறுகின்றனர். ஆக ஐந்து ஐந்து ஜனங்கள் என்பதாக இருபத்தைந்து தத்த்வங்கள் என அவர்கள் பக்ஷம்.

இப்பக்ஷத்தைக் கண்டித்தருள்கிறார் இங்கு. இங்கு ஸமாஹார ஸமாஸம் என்பது சரியன்று. ஏனெனில் திக்ஸங்க்யே ஸம்ஜ்ஞாயாம் என்று பகவான் பாணிநியினுடைய அநுஶாஸநம் உள்ளபடியால் ஸம்ஜ்ஞையை (பெயரை)க் காரணமாகக் கொண்டுவந்த ஸம்ஜ்ஞா விஷயகஸமாஸமாகும் இது.

''ஸப்த ஸப்தர்ஷய:'' அதாவது ஸப்தரிஷிகள் ஏழு பேர் என்கிறோம். அங்கு ஏழு என்று குறிக்கும் ஶப்தமானது இருமுறை வந்துள்ளது. இரண்டு முறை வந்துள்ளதால் 49 பேர் ஸப்தரிஷிகள் என்று கூற முடியுமா? ஆகவே இங்குக் கூட்டல், பெருக்கல் முதலியவை வராது. ஒரு இடத்தில் வரும் பஞ்ச ஶப்தத்திற்கு ஸம்ஜ்ஞையில் நோக்காகும். மற்றொரு பஞ்சஶப்தத்திற்கு எண்ணிக்கையில் நோக்கு இவ்வாறு பகவான் பாணிநி மஹர்ஷியினுடைய அநுஶாஸநத்தைக் கொண்டு நிர்வஹிக்கில் அனைத்தும் சரியாகிவிடும். ப்ரயோகமும் சரியாகும். லோகத்தில் உள்ள ப்ரஸித்தியும் ஸமஞ்ஜஸமாகும். வைதிக மதமும் ப்ரதிஷ்டிதமாகிவிடும்.

ஆதலால் பஞ்ச ஜநா: என்பதால் ஒரு ஸமுதாயமான வஸ்து கூறப்படுகிறது. அதில் உள்ள ஜன ஶப்தம் முக்யார்த்தகமாகும். பஞ்ச ஶப்தம் ஸாதுத்வார்த்தகமாகும். அந்த ஸமுதாயம் எத்தனை என்னும்போது முன்புள்ள பஞ்ச என்பதால் ஐந்து என்னும் எண்ணிக்கையானது கிடைக்கிறது. ஸப்த ஸப்தர்ஷய: போன்ற விடத்திலும் இவ்வாறே வரும்.

ஆதலால் இங்கு ஸமாஸம் ஸம்ஜ்ஞை விஷயமானதுதான். இதையெல்லாம் கணிசித்து வேலாமூரில்

*அவதரித்து உபநிஷத் பாஷ்யகாரர் என்று ப்ரஸித்தி பெற்று விளங்கிய ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன் தாமியற்றியருளிய, ஶ்ருதப்ரகாஶிகையின் வ்யாக்யாநமான பாவப்ரகாஶிகையில் அழகாக உதாஹரணம் காட்டியருளியுள்ளார்.*

பசுமாட்டுக்கு गौः (கௌ:) என்பது ஸம்ஸ்க்ருதத்திலுள்ள ப்ரயோகம். அதற்குப் பொருள் - அதாவது அந்த ஶப்தம் எப்படி வந்தது என்னில் (गच्छतीति गौः) கச்சதீதி கௌ: என வ்யுத்பத்தியால் வந்தது. பொதுவாக மாடு எந்தக் கார்யமாயினும் நடந்து (சென்று) கொண்டேதான் செய்யும், சில ஸமயம் விதிவிலக்கு. அதனால், நடந்து கொண்டே இருப்பதால் கௌ: என்று ஸம்ஸ்க்ருதத்தில் பெயர்.

ஒருவன் மாடு என்ன செய்கிறது? என்று கேட்கிறுன்; மற்றொருவன் பதில் கூறும்போது, गौः गच्छति (கௌ: கச்சதி) மாடு சென்று கொண்டிருக்கிறது என்கிறுன். கௌ: என்பதாலேயே சென்று கொண்டிருக்க மறுபடியும் கச்சதி என்று சென்று கொண்டிருப்பதைக் கூறுகையில் பௌனருக்த்யம் (சொன்னதையே திரும்பச் சொன்னதாக) ஆகுமே எனக் கேட்டுக் கொண்டு ஸாதுத்வாத் வ்யாக்யாந ப்ரவ்ருத்தா: வையாகரணு: ஸந்தம் அஸந்தம் வா கஞ்சிதர்த்தம் பரிகல்ப்ய வ்யுத்பாதயந்தி என்று ஸாதித்தருளிஞர்.

அதாவது ஶப்தம் ஸாதுவா அல்லவா என்று விசாரம் செய்து ஒவ்வொரு பதத்தையும் சரியானதாக நிர்ணயிக்க ப்ரவ்ருத்தர்களான வையாகரணர்கள் இருப்பதையோ இல்லாததையோ ஒரு அர்த்தத்தைக் கல்பித்து விவரணம் செய்கின்றுர்கள் என்று பொருளாகும். உதாஹரணமாக -

கச்சதீதி கௌ: என்னுமிடத்து கோஶப்த ஶ்ரவண வேளைகளில் எல்லாம் சென்று கொண்டிருப்பதுதான் மாடு என்று ஜ்ஞானம் வருவதில்லை. மேலும் மாடு பெரும்பாலும் நடக்குமே ஆயினும் எப்பொழுதும் நடப்பதில்லை. அதஞல் கச்சதீதி கௌ: என்பது கூட ப்ராயிகம்தான். ஆதலால் இருப்பது இல்லாதது என்னும்படி ஶப்தம் சரியானது என்பதற்கு ஒரு வ்யுத்பத்தியைக் கல்பிக்கிறுர்கள்.

அவ்வளவே. ஆதலால் பௌநருக்த்யதோஷமே வராது. இவ்வாறு ஸப்த ஸப்தர்ஷய: என்ற ப்ரயோகத்திலும் ரிஷி ஶப்தத்திற்கு முன்னுள்ள ஸப்த ஶப்தமானது ஸாதுத்வார்த்தம், ஸம்ஜ்ஞார்த்தம். தனியாக உள்ள ஸப்தஶப்தகம் ஸங்க்யையைக் கூறும். இதே ந்யாயம் பஞ்ச பஞ்சஜநா: என்றவிடத்திலும். ஆக எந்த தோஷமும் நம் ஸித்தாந்தத்தில் வராது.

முன் ஶ்லோகத்தில் ஸாங்க்யர் கூறிய ப்ரக்ரியைப்படி வாக்யார்த்தம் கூறினாலும் அவர்கள் பக்ஷத்தில் விரோதம் வரும் என்று ஸாதித்தார். இப்போது அவர்கள் பக்ஷமே இல்லை; மேலும் வேறு ஒரு வஸ்து ஸமுதாயமே பஞ்ச ஜநா: என்பதால் கூறப்படுகிறது; அந்த ஸமுதாயத்திலுள்ளவை ஐந்து என்பதும் மற்றொரு பஞ்சஶப்தத்தால் கூறப்பட்டுள்ளது என்பதை விளக்கி, அதன் மேலுள்ள அந்த ஐந்து வஸ்துக்கள் யாவை என்பதையும் விளக்கியருள்கிறார்.

யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா: என்னும் மந்த்ரத்திற்கு அடுத்த மந்த்ரத்திலுல் ப்ராணஸ்ய ப்ராணம் உத சக்ஷுஷஶ்சக்ஷு: ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் அந்நஸ்யாந்நம் மநஸோ யே மநோ விதுஸ்தே நிசிக்யு: ப்ரஹ்ம புராணமக்ர்யம் இந்த்ரியங்கள்தான் (ஜ்ஞாநேந்த்ரியங்கள்தான்) என்று ஏற்படுகிறது.

ஏனெனில் தம் தேவா: ஜ்யோதிஷாம் ஜ்யோதி; என்ற மந்த்ரத்தில் ஜ்யோதிஸ்ஸுக்கெல்லாம் பரமாத்மா ஜ்யோதிஸ்ஸாக உள்ளான். அதாவது ஜ்யோதிஶ்ஶப்தத்தால் இந்த்ரியம் கூறப்படுகிறது. ஏனெனில் இந்த்ரியங்கள் தானே பொருட்களை விளங்க (ப்ரகாஶிக்க)வைக்கிறது. அதனுல் இந்த்ரியங்கள் ஜ்யோதிஸ்ஸுக்கள். அவைகளுக்கெல்லாம் ஜ்யோதிஸ் ஆதாரம் பரமாத்மா, ஏனெனில் இந்த்ரியங்கள் தம் தம் கார்யங்களைச் செய்வதற்கு ஶக்தியை உடைத்தாயிருக்கை பரமாத்மாதீனமே. ஆகையால் ஜ்யோதிஷாம் என்று ஆறும் வேற்றுமையில் குறிப்பிடப்பட்டவைகள் இந்த்ரியங்கள். அவற்றிற்கு ஆதாரமாயிருப்பது பரமாத்மா. அவ்விந்த்ரியங்களில் ஜ்ஞானேந்த்ரியங்கள் பஞ்ச ஜநா:

என்றசொல்லால், பஞ்ச (ஐந்து) என்று விஶேஷணமிட்டுச் சொல்லப்பட்டுள்ளது.

அவைகள் எவை என ப்ராணஸ்ய ப்ராணம் என்ற மந்த்ரத்தால் போதிக்கப்பட்டுள்ளது. அதாவது இங்கு க்ராணேந்த்ரியம், ரஸநேந்த்ரியம், த்வகிந்த்ரியம், சக்ஷுரிந்த்ரியம், ஶ்ரோத்ரேந்த்ரியம், மனது என ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்கள் மனதும் கூறப்பட்டுள்ளன. இதில் அன்னம் என்று சொல்லப்பட்டதால் ப்ருதிவீ தத்த்வத்தால் போஷிக்கப்பட்ட க்ராணேந்த்ரியமும், அவ்வாறு அத்யதே அநேந என்ற வ்யுத்பத்தியால் சாப்பிடுவதற்கு ஸாதனமாய் இருப்பது என்ற பொருளினால் ரஸனேந்த்ரியமும் க்ரஹிக்கப்படுகின்றன. ப்ராணஸ்ய ப்ராணம் என்பதால் முக்ய ப்ராணன் கூறப்படவில்லை. வாயுதத்த்வத்தால் போஷிக்கப்பட்ட ஸ்பர்ஶனேந்த்ரியம் (த்வகிந்த்ரியம்) க்ரஹிக்கப்படுகிறது. சக்ஷுஷ: சக்ஷு:, ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் என்பதால் சக்ஷுரிந்த்ரியம் ஶ்ரோத்ரேந்த்ரியம் இவையிரண்டும் கூறப்பட்டுள்ளன.

இங்கு கூறப்பட்ட ப்ராணஸ்ய ப்ராணம் என்ற மந்த்ரம் காண்வ ஶாகையிலுள்ளது. அதில் அன்னம் என்ற சொல் இல்லை. அவ்வாறிருக்கையில் எப்படி க்ராணேந்த்ரியம் ரஸநேந்த்ரியம் எனக் கூறப்பட்டதாகக் கொள்ளலாம் என்றால் மாத்யந்திந ஶாகையில், ஸமான ப்ரகரணத்தில் உள்ள மந்த்ரத்தில், அந்நஸ்ய அந்நம் என ஓதப்பட்டுள்ளபடியால், ஒரு ஶாகையில் குறைவாக ஓதப்பட்டிருந்தாலும் மற்றொரு ஶாகையில் ஓதப்பட்டதை, அப்படியே எடுத்துக் கொண்டு அர்த்தம் கொள்ளலாம் என்னும் ஸர்வஶாகாப்ரத்யய ந்யாயத்தின்படி இங்கும் மாத்யந்திந ஶாகையில் கூறப்பட்டதைக் கொண்டு ஜ்ஞாநேந்த்ரியங்கள் பஞ்ச ஜநா: என்று கூறப்பட்டுள்ளன என்று ஸித்திக்கிறது. ஆதலால் இம்மந்த்ரத்தில் ஸாங்க்யதத்த்வம் ப்ரதிபாதிக்கப்படவில்லை. ஆதலால் ஸாங்க்ய மதத்தின்படி ப்ரதானம் காரணமன்று. பரமாத்மாவே காரணம் என்று ஸ்தாபிக்கப்பட்டது.

**இனி ஸூத்ரார்த்தம்**

1. न सङ्ख्योपसङ्ग्रहादपि नानाभावादतिरेकाच्च ।

ந ஸங்க்யோபஸங்க்ரஹாதபி நாநாபாவாத் அதிரேகாச்ச ।

ஸங்க்யாயா: *: இருபத்தைந்து எண்ணிக்கையினுடைய,* உபஸங்க்ரஹாதபி *= ஒப்புக் கொண்ட பக்ஷத்திலும் கூட,* நாநாபாவாத் *- மந்த்ரோக்த அர்த்தங்களிலிருந்து ஸாங்க்ய தத்த்வம் வேறுபட்டிருப்பதால்,* அதிரேகாச்ச *- ஆத்மாவும், ஆகாஶமும் இருபத்தைந்து தத்த்வங்களுக்கு மேலாக உள்ளதாலும்,* ந *-* காபில தந்த்ரஸித்தமான *தத்த்வ ஸங்க்யை கூறப்பட்டவில்லை என்று பொருள்.*

*இந்த ஸூத்ரத்தில்* அபி *என்ற சொல்லால் ஸாங்க்ய ஸங்க்யையை அங்கீகரித்துப் பார்த்தாலும் இம்மந்த்ரத்தில் அவர்கள் கூறிய தத்த்வ ஸங்க்யை வராது - மேலும் அதிகம்தான் தோன்றும் என்று அங்கீகார பக்ஷத்திலே தோஷம் கூறப்பட்டது.*

2. प्राणादयो वाक्यशेषात् । ப்ராணாதயோ வாக்யஶேஷாத் ।

பஞ்சஜநஶ*ப்தத்தால் கூறப்பட்டவை எவை என்னுமிடத்து ஸமாதான ஸூத்ரம் இது.* ப்ராணாதய: *- ப்ராண ஶப்தத்தால் குறிப்பிடப்பட்ட* ஸ்பர்ஶநேந்த்ரியமான த்வகிந்த்ரியம் *முதலான இந்த்ரியங்களே,* வாக்யஶேஷாத் *-*

ப்ராணஸ்ய ப்ராணமுத சக்ஷுஷ: சக்ஷு: ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் அந்நஸ்யாऽந்நம் மநஸோ யே மநோ விது: ॥

*என்ற வாக்ய ஶேஷத்தால் அறியப்படுகின்றன என்பது ஸூத்ரத்தின் பொருள்.*

*காண்வ ஶாகையில்* அந்நஸ்ய அந்நம் *என ஓதப்படவில்லை. அப்படி இருக்கும்போது* பஞ்சஜன ஶப்தத்திற்கு *ப்ராணன் முதலியவைகளே இந்த்ரியங்களே என எப்படிக் கூற முடியும் என்ற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் மூன்றுவது ஸூத்ரத்தால் அருளிச் செய்கிறார்.*

3. ज्योतिषैकेषामसत्यन्ने । ஜ்யோதிஷைகேஷாம் அஸத்யந்நே ।

ஏகேஷாம் - காண்வர்களின் ஶாகையில், அஸதி அந்நே அந்நஸ்ய அந்நம் என்ற பாடம் இல்லாவிடினும், ஜ்யோதிஷா - ஜ்யோதிஷாம் ஜ்யோதி: என்ற மந்த்ரத்தில் உள்ள ஜ்யோதிஶ்ஶப்தத்தால் பஞ்சஜநா: என்ற பதத்தால் கூறப்படுபவை இந்த்ரியங்களே என நிஶ்சயிக்கப்படுகின்றன.

இங்கு கூறவேண்டியவை அனைத்தும் இவ்வதிகரணத்தின் இரண்டாவது ஶ்லோகத்தில் கூறப்பட்டுள்ளதால் திரும்பவும் எழுதப்படவில்லை.

ஒரே ஒரு விஷயம் மட்டும் குறிப்பிடப்படுகிறது. ப்ராணஸ்ய ப்ராணம் என்ற மந்த்ரத்தில் அர்த்தம் கூறும்போது ஐந்து இந்த்ரியங்கள், மனது என ஆறு கூறப்பட்டுள்ளன. பஞ்ச பஞ்ச ஜநா: என்பதால் ஐந்து என்று இருக்கையில் ஆறு என்று கூறும்போது விருத்தமாகிவிடுமே என்னில் அதற்கு ஸமாதானம் - ஒரே ஒரு அந்நஸ்ய என்னும் சொல்லால் இரண்டு இந்த்ரியங்கள் தந்த்ரமாகக் கொள்ளப்படுகின்றன. அதாவது குறிப்பில் ஐந்து; குறிப்பிடப்பட வேண்டியவைகள் ஆறு. ஆதலால் குறிப்பிடப்பட வேண்டியவைகளைக் கொண்டு ஆறு எனக் கொள்ளப்பட்டது. குறிப்பில் உள்ளதைக் கொண்டு பார்க்கில் ஐந்துதான். ஆதலால் விரோதமில்லை.

ஆதலால் யஸ்மிந்... என்ற மந்த்ரத்தில் இந்த்ரியங்கள், ஆகாஶ ஶப்தத்தால் கூறப்பட்ட பூதங்கள் அனைத்தும் ப்ரஹ்மத்தில் ப்ரஷ்டிதமாயுள்ளன என்பதால் ஸர்வதத்த்வங்களும் ப்ரஹ்மத்தையே ஆஶ்ரயித்துள்ளன, ப்ரஹ்மமே அனைத்திற்கும் ஆதாரமாயுள்ளது எனக் கூறப்பட்டுள்ளதால் வேதாந்தங்களில் எங்குமே காபிலதந்த்ரஸித்தமான தத்த்வங்கள் கூறப்பட வில்லையாதலால், ப்ரஹ்ம காரணவாதமே ஸித்திக்கும் என்று ஸ்தாபித்தருளினார் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன்.

ஸங்க்யோபஸங்க்ரஹாதிகரணம் (1.4.3) முற்றிற்று.

॥ श्रीः ॥

# பஞ்சாங்க ஸங்க்ரஹம்

*(ஸ்ரீ.உ.வே. வடுவூர் கனபாடி ஸ்ரீநிவாஸ தேஶிகாசார்யர், ஸ்ரீகார்யம்*

ஸர்வதாரி ஞு - தை மீ

*1௳ (14.1.2009) புதன், க்ருஷ்ண சதுர்த்தீ 50.24, மகம் 26.48, ஶேஷத்யாஜ்யம் 1.53, மகர ரவி ஸங்க்ராந்தி 6.35, உத்தராயண புண்ய காலம் (தர்ப்பணம்) - மகர க்ருஷ்ண சதுர்த்தீ, திருப்பாவை சாற்றுமறை*

*2௳ (15.1.09) வியாழன், க்ருஷ்ண பஞ்சமி 48.01, பூரம் 25.32, பஞ்சமி திதி - கனு.*

*3௳ (16.1.08) வெள்ளி, ஷஷ்டீ 46.46, உத்தரம் 25.22, ஷஷ்டீ திதி, ராப்பத்து சாற்றுமறை*

*4௳ (17.1.09) சனி, ஸப்தமி 46.47, ஹஸ்தம் 26.23, ஸப்தமி திதி - இயற்பா சாற்றுமறை.*

*6௳ (17.1.09) திங்கள், நவமி 50.35, ஸ்வாதீ 32.07, நவமி திதி.*

*7௳ (20.1.09) செவ்வாய், தஶமி 54.15, விஶாகம் 36.43, தஶமி திதி.*

*8௳ (21.1.09) புதன், ஏகாதஶி 58.51. அநுஷம் 42.15, ஏகாதஶி திதி, ஸ்மார்த்த ஏகாதஶி.*

*9௳ (22.1.09) வியாழன், த்வாதஶி 60.00, கேட்டை, த்வாதஶி திதி - வைஷ்ணவ ஏகாதஶி 48.22.*

*10௳ (23.1.09) வெள்ளி, த்வாதஶி 4.00, மூலம் 54.49, த்ரயோதஶி திதி - மஹாப்ரதோஷம் - ஸ்ரீமத் பெரியாண்டவன் கைங்கர்யம்.*

*11௳ (24.1.09) சனி, த்ரயோதஶி 9.20, பூராடம் 60.00 சதுர்தஶீ திதி.*

12வ (25.1.09) ஞாயிறு, சதுர்தஶி 14.24, பூராடம் 1.06, அமாவாஸ்யை திதி - ஸர்வ அமாவாஸ்யை.

தை 13வ (26.1.09) திங்கள், அமாவாஸ்யை 18.54, உத்தராடம் 6.54, ஸூர்ய க்ரஹணம், மாலை ஸ்ரீரங்கம்ஸ்பர்சம் 2.20, மத்யம் 3.15, மோக்ஷம் 4.06, ஸூர்ய க்ரஹணம், தென்னிந்தியாவில் மட்டும் தெரியும். அன்று பகலில் போஜனத்தைத் தவிர்க்கவும். க்ரஹணம் விட்ட பிறகு ஸ்நானம் செய்து புதிதாகத் தயாரித்தவைகளை போஜனம் செய்யலாம்.

14வ (27.1.09) செவ்வாய், ப்ரதமை 22.28, ஶ்ரவணம் 11.52, ப்ரதமை - சந்த்ர தர்ஶனம்.

20வ (2.2.09) திங்கள் ஸப்தமி 18.44, அஶ்வினீ 17.39, ஸப்தமி அஷ்டமி - திதி த்வயம் ஸ்ரீமத் சின்னாண்டவன் கைங்கர்யம். ரதஸப்தமி.

23வ (5-2-09) வியாழன், தஶமி 3.58, ஏகாதஶி 54.12, ஸ்மார்த்த ஏகாதஶி.

24வ (6-2-09) வெள்ளி த்வாதஶி 52.19, ம்ருகசீர்ஷம் 3.52, த்வாதஶி திதி ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதஶி.

25வ (7-2-09) சனி, த்ரயோதஶி 46.35, புநர்வஸு 55.46, த்ரயோதஶி திதி, மஹாப்ரதோஷம்.

27வ (8.2.09) திங்கள், பௌர்ணமி 36.14, ஆயில்யம் 49.02, பௌர்ணமி திதி.

28வ (10-2-09) செவ்வாய், ப்ரதமை திதி 32.00, மகம் 46.42 திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்

29வ (11.12.09) புதன், த்விதீயை 28.37, பூரம் 45,12. த்விதீயை திதி.

30வ (12.2.09) வியாழன் த்ருதீயை 26.16, உத்தரம் 44.47, கும்ப ரவி 33.51, விஷ்ணுபதி. (மாதப் பிறப்பு தர்ப்பணம்) மகர க்ருஷ்ண த்ருதீயை திதி.

*மாசி மீ 1(13.2.09) வெள்ளி, சதுர்த்தீ 25.06, ஹஸ்தம் 45.31 கும்ப க்ருஷ்ண சதுர்த்தீ திதி.*

*மாசி2வ (14.2.09) சனி, பஞ்சமி 25.06, சித்ரா, 47.26, பஞ்சமி திதி.*

*3வ (15.2.09) ஞாயிறு, ஷஷ்டீ 26.31, ஸ்வாதி 50.42, ஷஷ்டீ திதி.*

*4வ (16.2.09) திங்கள் ஸப்தமி 29.07, விசாகம் 55.00, ஸப்தமி திதி.*

*5வ (17.2.09) செவ்வாய் அஷ்டமி 32.50, அனுஷம் 60.00, அஷ்டமி திதி, (அஷ்டகா ஶ்ராத்தம்).*

*6வ (18.2.09) நவமி திதி 37.23, அன்வஷ்டகா.*

॥ श्रीः ॥

# ஆச்ரமச் செய்திகள்

*ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன் சென்னை ஆச்ரமத்தில் திருமேனி பாங்காக எழுந்தருளியிருந்து (1.1.09) ஸ்ரீ பெருமாள் ஸ்ரீ பூர்வாசார்ய பாதுகைகளுக்கு தநுர்மாத ஆராதனங்களை செவ்வனே நடத்திக் கொண்டு சிஷ்யர்களை அனுக்ரஹித்துக் கொண்டிருக்கிறபடி. ப்ரதிதினம் தீர்த்த கோஷ்டியில் அநேகர் அந்வயித்து தீர்த்த ப்ரஸாதாதிகளை ஸ்வீகரித்து க்ருதார்த்தர்கள் ஆகின்றனர்.*

*ஸ்ரீமத் ஆண்டவனை ஸேவித்து பல மந்த்ராக்ஷதையை ஸ்வீகரிக்க அநேகம் சிஷ்யர்கள், ப்ரதிபந்நர்கள், முக்யஸ்தர்கள் வந்த வண்ணம் இருக்கின்றனர். ஸகலரையும் ஸ்ரீமத் ஆண்டவன் பரிவோடு அநுக்ரஹித்தாகிறது.*

*வழக்கம்போல் ஸமாச்ரயண பரந்யாஸங்கள் ப்ரதி தினம் செவ்வனே நடைபெறுகின்றன.*

—★—

*1.12.08 அன்று மேற்கு மாம்பலம் ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத அபிவர்த்திநீ ஸபா* (Regd.) *வின் கார்யதர்சி ஸ்ரீ.உ.வே. வாஸுதேவாசார்யாரின் ப்ரார்த்தனையை ஏற்று ஸ்ரீமத் அஹோபிலமடம் 43ம் பட்ட ஜீயர் ஸ்ரீ தேவனார்விளாகம் அழகியசிங்கரின் 108ஆவது திருநக்ஷத்ர வைபவத்தை நடத்திக் கொடுக்க மாலை 3 மணிக்கு இந்த வித்யாசாலைக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ.உ.வே. வாஸுதேவாசார்யர், தலைமை ஆசிரியர் ஸ்ரீமான்* T.M. *ஸௌந்தர்ரராஜன், துணைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான்* M. *சேஷாத்ரி மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக வரவேற்றனர்.*

விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ.உ.வே. V.S. கருணாகராசார்யர், ஸ்ரீ.உ.வே. நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி ஆகியோர் ஆசார்ய வைபவம், ஸ்ரீமத் தேவனார்விளாகம் அழகியசிங்கரின் ப்ரபாவம், வேதாத்யயனத்தின் முக்யத்வம், ஆழ்வார்கள் பாராட்டிய வேதம் முதலான அம்சங்களையும், ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஆண்டவன் வேத ஸம்ரக்ஷணத்திற்குச் செய்து வரும் அந்யாத்ருசமான முயற்சிகளையும் விளக்கி உபன்யஸித்தனர்.

ஸ்ரீமத் ஆண்டவன் குழுமியிருந்து 1000 மாணவ மாணவிகளுக்கு விசேஷ அநுக்ரஹம் செய்து விஞ்ஞானத்துக்கும், மெய்ஞ்ஞானத்துக்கும் வேதமே உறுதுணை என்பதை அத்புதமாக விளக்கியாயிற்று. பல இடையூறுகளுக்கிடையிலும் ஸ்ரீ தேவனார் விளாகம் அழகியசிங்கரின் தீர்க்கமான க்ருபையால், ஸ்ரீ வாஸுதேவாசார்யர் திறன் கொண்டு அரும் பாடு பட்டு பள்ளியை சிறந்த முறையில் நடத்திவருவதையும், வேதமும், ஸம்ப்ரதாய ஆர்வமும், லௌகிகக் கல்வியும் அத்யாவச்யமானதால் இந்தக் கொள்கையோடு நடத்தப்பட்டு வரும் இந்த கல்விக் கூடம் மேலும் சிறப்பாக விளங்க விசேஷ அநுக்ரஹம் செய்து அனுக்ரஹபாஷணம் செய்தாயிற்று.

ஸ்ரீ.உ.வே. வாஸுதேவாசார்யருக்கு உற்ற துணையாக விளங்கி வரும் ஆசிரியர்களையும் பாராட்டி அநுக்ரஹித்தாயிற்று.

பல போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ மாணவியர்க்குப் பள்ளி நிர்வாஹத்தின் அநேகம் பரிசுகளை ஸ்ரீமத் ஆண்டவன் தம் திருக்கரத்தால் அநுக்ரஹித்தாயிற்று.

15.12.08 அன்று பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபாவின் 108வது இசைவிழா நிகழ்ச்சிக்காக, அதிகாரிகளின் ப்ரார்த்தனையை அங்கீகரித்து மைலாப்பூர் பீமஸேனா கார்டனுக்கு எழுந்தருளியாயிற்று. அத்யத்புதமாக ஸங்கீத சாஸ்த்ர விசேஷங்களை உபந்யஸித்தாயிற்று. ஸங்கீத வித்வான்கள் மிகுந்த உத்ஸாஹத்துடன் ச்லாகித்தனர்.

***30.12.08* அன்று பரகால மடம் ஜீயரின் ஆஹ்வானத்தின் பேரில் மயிலை பலாத்தோப்பில் லக்ஷ்மீ ஹயக்ரீவ பவனத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமத் அபிநவ வாகீச ப்ரஹ்ம தந்த்ர பரகால ஜீயர் ஸ்ரீமத் ஆண்டவனை தண்டம் ஸமர்ப்பித்து வரவேற்று அத்யந்த ப்ரியத்துடன் குசல ப்ரச்னங்கள் பரஸ்பரம் செய்தாயிற்று. ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனை மங்களாஶாஸநம் செய்வித்தாயிற்று.**

**ஸ்ரீ வேணுகோபாலப் பெருமாள் டோலை**

***7.12.08* மாலை வாரன்ரோடு ஸ்ரீ முரளீ க்ருஹம்**

***14.12.08*** **மாலை திருவான்மியூர் ஸ்ரீமான்** Dr. **ஸ்ரீநிவாஸன் க்ருஹம்**

***21.12.08*** **மாலை விருகம்பாக்கம் ஸ்ரீமான் வேங்கடேசன் க்ருஹம்**

***31.12.08*** **மாலை ஸ்ரீமான்** R. **ஸுந்தர்** T.Nagar **க்ருஹம்.**

***அன்றே ஸ்ரீ பாதுகா சாரிடீஸ், செக்ரடரீ ஸ்ரீமான் வாஸுதேவாசார்யாரின் க்ருஹத்தில் பொன்னடி சாற்றி அநுக்ரஹித்தாயிற்று.***

## Matrimonial

*For the Month Of*

*THAI MAATHAM (JANUARY 2009)*

Kindly forward your replies to
**BOX NUMBERS** to the following address

इहैव स्तं मा वि योष्टं विश्वमायुर्व्यश्नुतम् ।
क्रीडन्तौ पुत्रैर्नप्तृभिः मोदमानौ स्वस्तकौ ।।
अथर्व वेदः (१४.१.२२)

"O groom and bride ! May you both live the full span of your life, in wedded bliss. Never be separated from each other. May you always live joyously in your home with your children and grand children." *(Atharva Veda 14.1.22)*

**BOX NO. WILL BE KEPT OPEN FOR TWO MONTHSONLY**

To Box No;……………………

*C/o* **SRI RANGANATHA PADUKA,**
*21, Sir Desikachari Road, Mylapore,*
*Chennai 600 004.*

## BRIDE WANTED

VADAKALAI KOUSIKAM ROHINI JULY 1983 6' B.E. HANDSOME INFOSIS CHENNAI SEEKS VADAKALAI GOOD LOOKING SUITABLE QUALIFIED EMPLOYED/UN-EMPLOYED DOMESTICALLY TRAINED BRIDE CONTACT: SRI.P.VIJAYARAGHAVAN $ RADHA (SPIC) ,B-107, SPIC NAGAR, TUTICORIN – 628 005, PH: 0461-2355345, 9791078753, 9952983977, Email: p_v_ragavan@yahoo.com

VADAKALAI SRIVATSAM POORAM (I) PADAM 37/177/20000/- PLUS M.A. D.E.C.E., ENGINEER PRIVATE CHENNAI SEEKS BRAHMIN GIRL CONTACT: M SRINIVASAN, 4, SATHYAMURTHY STREET, THIRUVALLUR – 602 001, PH: 27665263

VADAKALAI IYENGAR BHARATHWAJAM POOSAM FEB'72, DECE/DCA 165CM Rs.75000/- PM SEEKS GOODLOOKING DIPLOMA/GRADUATE GIRL CONTACT: 98941-46046/044-26562046, S.R.CHARY, TF4, DBLOCK GRANDEUR APTS., EB ROAD, MUGAPAIR EAST, CHENNAI-600 037

VADAKALAI IYENGAR BHARATHWAJAM TIRUVONUM BA(CORP)/DCA 1977/168CM DUBAI BANK 1LAC PM SEEKS GOOD LOOKING EDUCATED GIRL CONTACT: 9894146046/ 044-26562046, S.RANGACHARI, TF4, D BLOCK GRANDEUR APTS., EB ROAD, MUGAPAIR EAST CHENNAI-600 037

VADAKALAI BHARADWAJAM HASTHAM HEIGHT 5'11" JAN 81 BE, MS (USA) EMPLOYED IN USA (BOSTON) H1B HOLDER SEEKS BE EMPLOYED IN INDIA / USA BRIDE CONTACT: 044-24332792, CELL: 9444610202, EMAIL: kooramceena@hotmail.com

VADAKALAI SRIVATSAM MAKAM 28, 5.11 ENGINEER TECH SOLUTION 3I INFOTECH MUMBAI B.COM, (MBA) 4.25 LAKHS PA SEEKS GRADUATE GIRL CONTACT: 044-22791920, 9444450560

VADAKALAI MADURANTAKAM KAUNDINYA KETTAI 5'7" 28 YEARS GRADUATE GNIIT JOURNALIST FINANCIALLY WELL OFF SEEKS HOMELY FAIR GRADUATE GIRL CONTACT: 24511450, 28445489

THENKALAI KOUSIGAM BS JAN 1973, 163.5CM TCS CHENNAI UTHIRADAM-4 SEEKS GRADUATION OR DIPLOMA GIRL KALAI NO BAR CONTACT: K.GOVINDAN, 2 NORTH CHITHIRAI STREET, SRIRANGAM, TRICHY – 6, PH: 9840280057, 0431-2435201

VADAKALAI SRIVATSAM JULY 77 KRITHIGAI ¾, 167CM FAIR WELL EMPLOYED MNC HYDERABAD ASST. MANAGER RS.10 LACS PA CLEAN HABITS BCOM MBA(MARK) MBA(HR) MCA (GNIIT) SEEKS PROFESSIONALLY QUALIFIED BRIDE KALAI NO BAR PH: 040-27804617

VADAKALAI BHARADWAJAM ROHINI-2 MARCH 1972 180CMS B.SC, MBA EMPLOYED ASST.CONSULTANT T.C.S CHENNAI 9LACS PA SEEKS GRADUATE GOOD LOOKING BRIDE CONTACT: RAGHAVAN PH: 044-2479050, CHENNAI

VADAKALAI KOUSIGAM POORATTATHI MAY 1973, SOFTWARE CONSULTANT RS.35000/- PM LOOKING FOR GRADUATE GIRL KALAI NO BAR CONTACT: S.NARAYANAN NO.99, 4TH CROSS 1ST LANE MANGALA NAGAR, PORUR, CHENNAI 600 116, PH: 22520815, Email: narayanaiyangar@gmail.com

VADAKALAI KOUSIKAM CHITHIRAI 1 PADAM JULY ’82 6.2” V.FAIR C.A. SEEKS GOOD LOOKING HOME LOVING WELL QUALIFIED PREFERABLY COMMERCE BASED GIRL CONTACT: 9444046870, 9962046870/24746870

THENKALAI KOUNDINYAM MAGAM(1) 25 (170) RS.25000/- PM M.COM GOLD MEDALIST STANDARD CHARTERED CHENNAI SEEKS GRADUATE FAIR EMPLOYED GIRL CONTACT: VASUDEVAN, 27/23, SRI OPPILI APPAN ILLAM, NEHRUJI NAGAR, WEST BANK. THANJAVUR – 9, PH: 04362-222318

VADAKALAI BHARADWAJAM REVATHY DEC’84 5.11 B.TECH (IITMS) M.TECH (IITMS) WORKING IN LONDON SEEKS EMPLOYED/UNEMPLOYED GRADUATE GIRL BELOW 22 TO 24 YEARS KALAI NO BAR CONTACT: 9884868858, 9791756959, 0431-2435712, EMAIL” vsrangamani@gmail.com

*Srimathe Ranga RAmanuja MahAdesikAya Nama:*
*Srimathe SrinivAsa RAmanuja MahAdesikAya Nama:*
*Srimathe Vedanta RAmanuja MahAdesikAya Nama:*
*Srimathe RanganAtha MahAdesikAya Nama:*
Srimathe SrinivAsa MahAdesikAya Nama:

## *HH Srimad Mysore Andavan – Centenary celebrations*

Srimath Mysore Andavan Sri SrinivAsa RAmanuja MahA dEsikan adorned Acharya peetam as the 10th Andavan Swami in Srirangam Srimad Andavan Asramam.

The SwAmi One of the great scholars of the 20th century with Vidwath in Sanskrit, Tamil, Kannada and Hindi. Sri Hariharapuram Gopalacharya was born on 19.08.1909 (Soumya Varusham – Avani Madham Uthira Palguni Nakshathram) to Sri Krishnamaachaarya and Smt. Ranganaayakamma (Gowri festival day, Sosale village, T. Narasipura Taluk on the banks of Cauvery near Sangamam of Cauvery and Kapila rivers, Mysore district) who belonged to an orthodox SriVaishnavaite family which had a scholastic background. Other members of the family included two brothers and two sisters.

During his childhood, due to epidemic plague that spread widely, swAmi's father passed away, following which, the family's financial position was not sound. He lived in Sosale village and studied in a higher primary school there. Knowing the budding scholar in swAmi, the scholars persuaded him to join Mysore Maharaja Samskruta Paathashaala and continue his studies. Accordingly, swAmi came to Mysore, joined the Sanskrit college, completed his further studies in Saahitya and Vyaakarana and became a Vidwan.

During the student days, he had to depend for his daily sustenance on Sri Parakaala mutt, where the then

Aacharya Sri Abhinava RanganAtha Parakaala MahA dEsikan who adorned the peetam, noticed the brilliant boy and provided him necessary facilities. By the grace of Lord Hayagreeva, he also brought up his brothers and helped them by giving good education and food (padi) that he received at Sri Parakaala Mutt.

